கல்கி



KALKI ஜனவரி 7, 1951 4 அணா

நாளுக்கு நாள் அதிக
அழகான, தெளிவுள்ள
சருமத்திற்கு



ரெக்ஸோனாவிலுள்ள கேடில்
உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்
கியத்தையும் எழிலையும் தரும்.



ரெக்ஸோனா

கேடில் கலந்த
சோப் இது ஒன்றே

RP. 68-172-55 TM


ஒரு நாடோடி
நாட்டை ஆள
திட்டம் தீட்டினள்,,
அதற்காக
நெஞ்சிரக்கம்
கொஞ்சமும் இன்றி
அவள் செய்த
வஞ்சகச் செயல்கள்!
ஜூபிடரின்
மர்மயோகி
டைரக்ஷன் - கே. ராம்நாத்
விரைவில் வருகிறது

ஒரு டீஸ்பூனில் அடங்கியுள்ள சக்தி எவ்வளவு?

தினந்தோறும் வேறு ஆகாரத்திற்கு முன் ஒரே ஒரு டீஸ்பூன் "ஸெவன்ஸீஸ்" உட்கொண்டாலே அது உங்களுக்கு நல்ல தெம்பும் வீரியமும் அளிக்கிறது. நமது தேகத்திற்கு அவசியம் வேண்டியதும்—ஆனால் அநேகமாகக் கிடைக்காததும் ஆன—இயற்கையான கொழுப்புச் சத்தும், விடமின்களும் "ஸெவன்ஸீஸ்" இல் ததும்பி நிற்பதால் சில வாரங்களுக்குள்ளேயே தேகாரோக்கியத்திலும், ஆகிருதியிலும் நல்ல தேறுதல் காணப்படுகின்றது. இயற்கையாகவே இதில் உள்ள கொழுப்புச் சத்துக்கள் சக்தியையும், இயற்கை விடமின்கள் நோவை எதிர்க்கும் ஆற்றலையும் அளிக்கின்றன.

இன்றே "ஸெவன்ஸீஸ்" வாங்குங்கள். பிரதி தினமும் உங்களது வழக்கமான ஆகாரத்துடன் ஒரு அவசியமான உப உணவாக ஒரு டீஸ்பூன் அளவு உட்கொள்ளுங்கள். உங்களது குடும்பத்தினரையும் அது உட்கொள்ளுமாறு தூண்டுங்கள்.

SevenSeaS
PURE COD LIVER OIL

பிரிட்டிஷ் காட்லிவர் ஆயில்ஸ் (ஹல் & கிரிம்ஸ்பி) லிமிடெட், ஹல், இங்கிலாந்து அவர்களாலேயே தயாரித்து அடக்கம் செய்யப்பட்டது

விநியோகஸ்தர்கள் :

கார் & கம்பெனி லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

புத்தப் புதிய டிசைன்களில் ஸ்டாக்குகள் ஏராளமாக வந்துள்ளன

பல பல நவீன ரகங்களில் புத்தம் புதியவை. விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன. இந்த விலை குறைவுச் சலுகை பதினைந்து நாட்களுக்கு மட்டுமே அமுலில் இருக்கும். ஜுவல் பதித்த கடிகாரங்கள் 10 வருட உத்திரவாதம் கொண்டவை.



புதிய ரக அலாரம் ~~[illegible]~~ 17/-

ஸ்பெஷல் ரேடியம் ~~[illegible]~~ 20/8/-

பாக்கெட் வாட்ச் ~~[illegible]~~ 14/-



5 ஜுவல் ரேடியம்

செண்டர் செகண்டு ~~[illegible]~~ 26/-

ரயில்வே கார்டனர் க்ரோமியம் ~~[illegible]~~ 24/-

கோல்டன் கவண்டட் சுப்ரீம் ~~[illegible]~~ 32/-



15 ஜுவல் நீண்ட சதுர ஸ்பெஷல் ~~[illegible]~~ 55/-

லேடீஸ் கோல்டன் டைமண்ட் சிறியது ~~[illegible]~~ 33/-

ஜெண்டில்மேன் பாரிஸ் டேப் ~~[illegible]~~ 41/-



குரோமியம் ரேடியம் ~~[illegible]~~ 20/8/-

ஸ்பெஷல் கோல்டன் செகண்ட் ரேடியம் ~~[illegible]~~ 23/8/-

POSTAGE EXTRA. FREE ON TWO.

STANDARD WATCH COMPANY
POST BOX NO. 288. CALCUTTA-1


கவலைப்படும்
தாய்
மார்களுக்கு
ஓர் நற்செய்தி
எப்பொழுதும்
தவறாமல்
கிடைக்கின்றது
ஆஸ்டர்மில்க்
OSTERMILK
சிறுகுழந்தைகளின் பால் உணவு
கிளாக்ஸோ லெபரெட்டரீஸ் (இந்தியா) லிட். பம்பாய். கல்கத்தா. மதராஸ்.
Copyright

மகத்தான குறைந்த விலை விற்பனை!

1. இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு 6½% கமிஷன் உண்டு.
2. மூன்று கடிகாரங்களுக்கும் அதற்கு மேற்கொண்டும் வரும் ஆர்டர்களுக்கு 10% கமிஷன் கொடுக்கப்படும்.

15 ஜுவல் கடிகாரங்கள் எல்லாம் 5 வருஷமும் மற்றவை 3 வருஷமும் உத்திரவாதம் கொண்டவை

சைஸ் 10½'''




401	க்ரோம் ஸ்மால் செகண்ட்		20
418	...		28
404	க்ரோம்	7 ஜுவல்	35
405	ரோல்டு கோல்டு	7 ஜுவல்	40
407	க்ரோம்	15 ஜுவல்	46
461	வாட்டர் ப்ரூப்	15 ஜுவல்	65

சைஸ் 7¾'''



479	க்ரோம்	5 ஜுவல்	34
480	ரோல்டு கோல்டு	5 ஜுவல்	39
482	க்ரோம்	15 ஜுவல்	55
483	ரோல்டு கோல்டு	15 ஜுவல்	61
485	20 மைக்ரோன்	15 ஜுவல்	70

சைஸ் 6¾'''




502	க்ரோம்	5 ஜுவல்	34
503	ரோல்டு கோல்டு	5 ஜுவல்	39
506	க்ரோம்	7 ஜுவல்	45
511	ப்ரோனியன்	15 ஜுவல்	58
498A	20 மைக்ரோன்	15 ஜுவல்	70

சைஸ் 6¾'''



434	க்ரோம்	5 ஜுவல்	28
435	ரோல்டு கோல்டு	5 ஜுவல்	31
440	க்ரோம்	15 ஜுவல்	58
441	ரோல்டு கோல்டு	15 ஜுவல்	68

சைஸ் 6¾'''



470A	க்ரோம்	5 ஜுவல்	30
471A	ரோல்டு கோல்டு	5 ஜுவல்	35
476	க்ரோம்	15 ஜுவல்	45
477	ரோல்டு கோல்டு	15 ஜுவல்	55

லேடீஸ் சைஸ் 5¾'''



522	கவின க்ரோம்	5 ஜுவல்	38
523	கவின ரோல்டு கோல்டு	5 ஜுவல்	43
526	ரோல்டு கோல்டு	15 ஜுவல்	65

பாக்கிங், தபால் சேவை, விற்பனை வரி இலவசம்

CARONA WATCH Co. POST BOX NO. 6729 SEC.A.4. CALCUTTA-7

மகத்தான நடனக் கச்சேரி

ஆண்டாள் திருக்கல்யாணம் & நிர்வாணம்

(செம்படவர் நடனம் ஒரு புதுமை)



நடராஜ் - சகுந்தலா

கோஷ்டியாரால்

7-1-1951 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

செயிண்ட் மேரீஸ் ஹாலில்

டிக்கட்டுகள்: ரூ. 10, 5, 3 & 1-8-0

விசேஷமான மின்சார தீப அலங்கார ஏற்பாடு:

சந்திரா எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மயிலாப்பூர் :: மதராஸ்


காலை 10 மணி முதல் செயிண்ட் மேரீஸ் ஹாலில் டிக்கட்டுகள் கொடுக்கப்படும்

உத்திரவாதமுள்ள ஸ்டேய்ன்லஸ்

ஸ்டீல் சாமான்கள்

என்றும் பிரகாசமாக இருக்கும்.

என்றும் மங்காது.



ஒவ்வொரு வீட்டிற்கும், ஹோட்டல், ஆஸ்பத்திரி, கான்டீனுக்கும் தேவையான சாமான்களும் உள்ளன.

டாம்பீகமானவை ஆனால் மலிவானவை.

சுகாதாரமானவை — நீடித்துழைப்பவை.


பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 10 இதழ் 23 | 1951 ஜனவரி 7 | விக்ருதி ஆ மார்கழி 23

ஆபத்தான விளையாட்டு



புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மன்னர்கள் அடங்கிய யூனியனுக்குத் தலைமை வகித்துள்ள பரோடா மகாராஜா, இந்திய அரசியல் திட்டத்தையும், சமஸ்தானங்கள் விஷயமாக இந்திய சர்க்கார் அனுஷ்டித்துவரும் முறைகளையும் பம்பாய்க் கூட்டத்தில் கண்டித்துப் பேசினார்.

கல்கி

காற்று அடித்தது!

பிரிட்டிஷார் சிறந்த ராஜதந்திரிகள். எப்போது எதிர்க்க வேண்டும்; எப்போது வளைந்து கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். மூடப் பிடிவாதம் காரணமாக கால வெள்ளத்தை எதிர்த்து நின்று, கஷ்ட நஷ்டங்களை வரவேற்றுக் கொண்டு திண்டாட மாட்டார்கள்.

காற்றும் கடவுளும் தங்களுக்குத் துணையாக இருப்பதாய் பிரிட்டிஷார் சொல்லிக் கொள்வது உண்டு. 1588-ம் வருஷம் வரையில் உலகத்திலே கடற்படைப் பலத்தில் ஸ்பெயின் தேசம்தான் முதல் ஸ்தானத்தை வகித்து வந்தது. அதனால் மமதை கொண்ட ஸ்பெயின் இங்கிலாந்துமீது படையெடுத்தது. அப்போது கடற்படைப் பலம் இல்லாத பிரிட்டனுக்குக் காற்று துணையாக அமைந்தது. அதனால் பிரிட்டிஷ் கடற்படை ஸ்பானிஷ் போர்க் கப்பல்களை விரட்டியடிப்பது சாத்தியமாயிற்று. பிறகு மீண்டும் மகத்தான புயல் ஏற்பட்டு ஸ்பானிஷ் கப்பல்களைச் சிதறடித்ததுடன், அவைகள் இங்கிலாந்துப் பக்கம் திரும்ப முடியாமல் செய்து விட்டது.

பிரிட்டிஷார் கூறுவது போல் அவர்களுக்குக் காற்றும் கடவுளும் துணையாக இருந்தாலும் இராவிட்டாலும், அவர்களுடைய ராஜதந்திரம் அவர்களுக்கு எக்காலத்திலும் உறுதுணையாக இருந்து வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

முதலில் அவர்கள் பல நாடுகளுக்கும் சட்டாம் பிள்ளை ஸ்தானத்தில் இருந்தார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் (Empire) என்று பெருமிதம் கொண்டிருந்தார்கள். பிறகு நிலைமை மாறி சாம்ராஜ்ய நாடுகளில் சில சுதந்திர நாடுகளானதும் எல்லோரும் சம அந்தஸ்துள்ள பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் என்று கூறி உச்சஸ்தானத்திலிருந்து இறங்கினார்கள். பிரிட்டிஷ் காமன்வெல்த் என்பதைச் சில நாடுகள் விரும்பாததால் பிரிட்டிஷ் என்ற அடைமொழியையும் ரத்து செய்ய அவர்கள் தயங்கவில்லை!

இவ்வாறாக பிரிட்டிஷாரின் ராஜதந்திரமே இன்று காமன்வெல்த் என்ற நேச மண்டலம் சிதறுண்டு போகாமல் ஐக்கியப்பட்டிருப்பதற்குக் காரணம்.

பாருங்கள்! பிரஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள் முதலியோர் ஆசியாவில் தங்கள் ஆதிக்கத்தில் உள்ள பிரதேசங்களை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் கஷ்டநஷ்டங்களைச் சிருஷ்டித்துக் கொண்டு கண்டனத்துக்கு ஆளாகி வருகிறார்கள்.


இந் நிலைமையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் விலையிலா ரத்தினமாக விளங்கி வந்த இந்தியாவைப் பிரிட்டிஷார் இரு நூறு வருஷ ஆட்சிக்குப் பின் சுதந்திரம் அடைய விட்டது சரித்திரம் பாராட்டத்தக்க செய்கை அல்லவா?

அவ்வாறாக பிரிட்டிஷார் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்காமல் வளைந்து கொடுத்ததன் மூலம் தாங்கள் இருநூறு வருஷகாலம் இந்தியாவுக்குச் செய்த இன்னல்களையும் கொடுமைகளையும்கூட இந்திய மக்கள் மறந்து மன்னிக்கும்படி செய்திருக்கிறார்கள். பாரத நாட்டின் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமா? இந்தியா பூரண சுதந்திரக் குடியரசு அந்தஸ்தை அடைந்தும் கூடக் காமன்வெல்த் என்னும் பிரிட்டிஷ் நேச மண்டல நாடுகளில் இந்தியாவையும் ஒன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உலக அமைதியையும் மக்களின் சுபிட்சத்தையும் குறிக்கோளாகக் கொண்ட இந்தியா — பிரிட்டன் நட்பும் நல்லுறவும், இருள் சூழ்ந்துள்ள உலகத்துக்கு நம்பிக்கை அளிக்கும் ஜோதியாக அமைந்திருக்கிறது.

பலூன் வேடிக்கை!



காஷ்மீர் பிரச்னையை யொட்டிப் பாகிஸ்தான் செய்து வரும் பொய்ப் பிரசாரம் நாளுக்கு நாள் அம்பலமாகி வருகிறது.

பிரிட்டிஷாரின் காமன்வெல்த் என்ற பிரிட்டிஷ் தேச நாடுகள் மண்டலம் சிறந்த உதாரணம் ஆகும்.

சுயநலம் காரணமாகவும் அரசியல் நோக்கம் கொண்டும் அமெரிக்க வல்லரசின் கோஷ்டியில் பல நாடுகள் சேர்ந்திருக்கின்றன. ருஷ்ய வல்லரசின் கோஷ்டியில் மற்றும் பல நாடுகள் சேர்ந்திருக்கின்றன. ஆனால் மேற்படி கோஷ்டிகளைக் காட்டிலும் பிரிட்டிஷ் தேசநாடுகள் மண்டலம் நேர்மையானது எனலாம்.

அந்த மண்டலத்தில் பிரிட்டன், கானடா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, தென்னாப்பிரிக்கா முதலிய ஐரோப்பிய நாடுகளைப் போல் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை முதலிய ஆசியா நாடுகளும் இடம் பெற்றிருக்கின்றன. பல்வேறு அரசியல் கொள்கைகளைப் பின்பற்றும் சுதந்திர நாடுகள் யாதொரு நிர்ப்பந்தமுமின்றித் தாங்களாக வலுவிலே அதில் சேர்ந்திருக்கின்றன.

எனவே அமெரிக்க கோஷ்டி நாடுகளோ, ருஷ்ய கோஷ்டி நாடுகளோ உலகத்தின் மூன்றில் ஒரு பாகமான பிரிட்டிஷ் தேச மண்டல நாடுகளை அலட்சியம் செய்ய முடியாது.

அதிலும் அந்த மண்டலத்தைச் சேர்ந்த இரண்டொரு நாடுகள் தங்களுடைய நியாயமற்ற போக்கை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில், பிரிட்டிஷ் தேச மண்டலம் அதிக ஐக்கிய பாவத்துடனும் ஒற்றுமையுடனும் சக்தியுடனும் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக, தென்னாப்பிரிக்கா உலகமே ஒவ்வாத நிற வேற்றுமைக் கொள்கையை அனுஷ்டித்து வருகிறது. அந்தக் கொள்கை மிகவும் அநீதியானது என்று ஐ. நா. சபை வன்மையாகக் கண்டித்து வருகிறது.

பிரிட்டிஷ் தேச மண்டலத்தின் அங்கம் வகிக்கும் தென்னாப்பிரிக்கா அதே மண்டலத்தில் உள்ள இந்தியா முதலிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மீது நிற வேற்றுமைப் பாணத்தைப் பிரயோகம் செய்வதன் மூலம் தேச மண்டலத்துக்குப் பெருமையோ பலமோ ஏற்படுமா?

அதுபோலவே ஆஸ்திரேலியாவின் போக்கும் மேற்படி மண்டலத்துக்குப் பலம் அளிப்பதாக இல்லை.

வெள்ளையர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் இடமில்லை என்ற கொள்கையை ஆஸ்திரேலியா கைவிட்டு விடவேண்டும்.

அந்தக் கொள்கை, அத்தகைய ஏகபோக உரிமை, சர்வதேச நியதிக்கும் சர்வதேச அமைதிக்கும் முரணானது.

ஆஸ்திரேலியாவின் தாய் நாடாக விளங்கும் பிரிட்டனோ அல்லது அமெரிக்காவோ அத்தகைய விபரீதமான கொள்கையை அனுஷ்டிக்கவில்லை.

நிலப்பரப்பில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் காட்டிலும் இரண்டு மடங்கு பெரிய ஆஸ்திரேலியாவில், முப்பது லட்சம் சதுரமைல்கள் விஸ்தீரணம் உள்ள ஆஸ்திரேலியாவில் முக்கால்கோடி ஜனங்கள்கூட இல்லை. தவிர ஆஸ்திரேலியாவில் உள்ள வெள்ளையர்கள் அந்த நாட்டின் பூர்வ குடிகள் அல்ல; சில நூற்றாண்டுகளுக்குமுன் குடியேறியவர்கள்தான்.

அப்படியிருக்க வெள்ளையர்களைத் தவிர வேறு யாரும் அந்த நாட்டில் குடியேறக் கூடாது என்று தடுப்பது அநீதியான காரியம். எனவே இதுவும் பிரிட்டிஷ் தேசமண்டலத்தைப் பலவீனப்படுத்துவதாக இருக்கிறது.

தேச மண்டலத்தின் பலமும் வெற்றியும் மேலே குறிப்பிட்ட விபரீதங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதையே பொறுத்திருக்கின்றன.

*　　　　*　　　　*　　　　*

லண்டனில் நடைபெறும் பிரிட்டிஷ் தேச மண்டல மகாநாடு மற்றொரு மகத்தான கடமையையும் நிறைவேற்றும் பொறுப்பைத் தாமதமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அந்தக் கடமை என்ன என்பதைப் பண்டித ஜவாஹர்லால் நேரு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்:

"உலகத்தைப் பயங்கரமான கலக்கம் கவிந்து கொண்டிருக்கிறது. அந்தக் கலக்கத்தின் உக்ரம் தணிவதற்கு, லண்டனில் கூடும் தேச மண்டலப் பிரதம மந்திரிகளின் மகாநாடு உதவி புரியலாம். அவ்வாறு உதவி புரிவது சாத்தியம் என்பதே எனது நம்பிக்கை.

"சரியான பாதையை நோக்கி நாம் அரை அடி முன் வைத்தாலும் கூட மேற்படி மகாநாடு பலனைக் கொடுத்ததாகும்."

புதுடில்லியிலிருந்து லண்டனுக்குப் புறப்படுமுன் ஜவாஹர்லால்ஜி வானொலி மூலம் பேசுகையில் அவ்வாறு குறிப்பிட்டார்.

நமது பிரதம மந்திரியின் பிரசங்கமும் அதில் அடங்கியுள்ள அரிய யோசனைகளும் புது வருஷத்தை முன்னிட்டு உலகத்துக்குச் சிறந்த வெகுமதிகளாக அமைந்திருக்கின்றன.

"சென்ற வருஷத்தோடு இருபதாவது நூற்றாண்டின் முதல் பாதி முடிந்து விட்டது. இரண்டாவது பாதி ஆரம்பமாகியிருக்கிறது. முதல் பாதி முழுதும் உலகத்தைக் கலகங்களும், குழப்படிகளும், கோரப் போர்களுமே ஆட்டி வைத்திருக்கின்றன. அப்படியும் சமாதானம் உதயமாகவில்லை, உதயமாவதற்கான அறிகுறியையும் காணவில்லை. புதுவருஷம் ஆரம்பமாகும் இச்சமயத்திலே நாம் வான் முனையில் நின்று கொண்டிருக்கிறோம். எதிர்காலம் இருள் சூழ்ந்து கிடக்கிறது" என்று ஜவாஹர்லால்ஜி உருக்கமாகக் கூறியிருக்கிறார்.

லண்டனில் கூடியுள்ள பிரிட்டிஷ் தேசமண்டல மகாநாட்டின் மூலம், உலகத்தைக் கவிந்து கொண்டுள்ள நாசகரமான சக்திகள் ஓரளவாவது சிதறுவதற்கு வழி பிறக்குமாக! இருள் மறைந்து ஒளி தோன்றுமாக!

திருவையாறு உற்சவம்

புது ஆங்கில வருஷ ஆரம்பத்தில் உலகத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் சங்கடங்களும் தகராறுகளும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் உற்சாகம் ததும்பிக் கொண்டிருக்கிறது. அந்த இடந்தான் திருவையாறு க்ஷேத்திரம்.

தமிழ் நாட்டில் சென்ற ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு மேலாகத் திருவையாறு சங்கீதக் கலையை வளர்க்கும் கேந்திர ஸ்தலமாக இருந்து வந்திருக்கிறது. திருவையாறு தெருக்களில் எழுந்த இன்னிசையைக் கேட்டு அப்பர், சம்பந்தர் முதலியோர் பிரமித்துப் போனார்கள். அத்தகைய புராதன கலைப்பெருமை வாய்ந்த திருவையாற்றுக்கே ஸ்ரீ தியாகராஜரும் வந்து சேர்ந்தார். அதையே தமது வாசஸ்தலமாகக் கொண்டார். அங்கிருந்தே அற்புதமான ஜீவசக்தி வாய்ந்த நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றினார். இஷ்ட தெய்வமான இராமபிரானையும் நாதப் பிரம்மமாகிய சங்கீத தெய்வத்தையும் ஒருங்கே வழிபட்டு திருவையாற்றில் முக்தியடைந்தார்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமியின் சிஷ்யர்கள் அந்த மகானுக்குத் திருவையாற்றிலேயே சமாதியும் கட்டினார்கள். வெகுகாலம் சமாதி, சமாதியாகவே இருந்து வந்தது.

சங்கீத சாஹித்ய மேதை ஒருவரை ஞாபகப்படுத்திக் கொண்ட பிறகு, ரஸிக சிகாமணி ஒருவரைப் பற்றிக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்வோமாக. ஒரு காலத்தில் டில்லியில் அரசு புரிந்த அவுரங்கஜீப்புக்குச் சங்கீதக் கலையிடத்தில் அபார பிரேமை. நாட்டில் பலர் சங்கீத வித்வான்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு சங்கீதக் கலையைக் கொலை செய்து கொண்டிருப்பதை அறிந்தார். இதைத் தடை செய்ய எண்ணினார். முதலில் சங்கீத வித்வான்களுக்குத் தர்பாரிலிருந்து அளிக்கப்பட்டு வந்த சன்மானங்கள், மானியங்கள், மாதச் சம்பளங்கள் ஆகியவற்றை நிறுத்தினார். பிறகு,

"என்னுடைய இராஜ்யத்தில் யாரும் பாடக் கூடாது; வாத்தியம் வாசிக்கக் கூடாது; கச்சேரி செய்யவும் கூடாது!" என்று உத்தரவு போட்டார்.

அவுரங்கஜீப்பின் ஆக்ஞை என்றால், அந்த நாளில் பிரமாதம். ஆகவே யாரும் மீறத் துணியவில்லை: குயில்களும் வானம்பாடிகளும் கூட மௌன விரதத்தை மேற்கொண்டன.


தலைமுறை தலைமுறையாகச் சங்கீத வித்தையை அப்பியசித்து வந்த வித்வான்கள் பார்த்தார்கள். சங்கீதக் கலைக்கு இப்படி ஆபத்து வந்து விட்டதே என்று தவித்தார்கள். அவுரங்கஜீப்பிடம் நேரிலே போய்ச் சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆகையால் ஒரு யுக்தியைக் கையாண்டார்கள்.

பிரதிமை ஒன்றைச் செய்து ஒரு விமானத்தில் படுக்க வைத்து ஊர்வலமாகக் கொண்டு போனார்கள். முன்னும் பின்னும் சென்ற சங்கீத வித்வத் சிரோமணிகள் ஒப்பாரி வைத்து அழுது கொண்டு சென்றார்கள். "பாடக் கூடாது" என்று பாதுஷா உத்தரவு போட்டாரே தவிர, "அழக்கூடாது" என்று உத்தரவு போடவில்லையல்லவா! அவுரங்கஜீப் அரண்மனை வாசல் வழியாகவே ஊர்வலம் சென்றது.

அரண்மனை மேல் மாடியிலிருந்து பாதுஷா பார்த்துக் கொண்டிருந்தார். என்ன விஷயம் என்று கேட்டு வரச் சொன்னார். "சங்கீத தேவதை செத்து விட்டாள்; மயானத்துக்குக் கொண்டு போகிறோம்" என்று வித்வான்கள் சொல்லி அனுப்பினார்கள். இதனால் அவுரங்கஜீப்பின் மனம் இளகும் என்று நினைத்துச் சொன்னார்கள். ஆனால், பாதுஷா என்ன பதில் சொன்னார், தெரியுமா?

"சந்தோஷம். மயானத்தில் ஆழக் குழி தோண்டிப் புதைக்கச் சொல்லுங்கள். மேலே சமாதியும் கட்டிவிடச் சொல்லுங்கள்!" என்றார்.

வித்வான்கள் சங்கீத தேவதையைப் புதைப்பதுடன் திருப்தி அடைந்தார்களா, அல்லது



சர்தார் படேலின் அஸ்தி கலசத்தை அவரது புதல்வர் ஸ்ரீ தயாபாய் படேல் ஆமதாபாத்திலிருந்து விமானத்தில் புது டில்லிக்கு எடுத்து வந்தார். அப்போது விமான நிலையத்தில் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜியும் மற்ற மந்திரிகளும் அதிகாரிகளும் ஏராளமான ஜனங்களும் கூடி அஸ்தி கலசத்தை வரவேற்று மரியாதை செய்யும் உருக்கமான காட்சி.

சமாதியும் கட்டினார்களா என்று கதையின் மூலம் தெரியவில்லை. யார் கண்டது! பழைய டில்லியிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான சமாதிகளில் சங்கீதக் கலையின் சமாதியும் ஒன்றாக இருக்கலாம்!

டில்லியிலிருந்து திரும்பவும் நாம் திருவையாற்றுக்கு வந்து சேரலாம்.

திருவையாற்றில் வெகுகாலமாக ஸ்ரீ தியாகராஜரின் சமாதி, சமாதியாக இருந்து வந்தது. சங்கீத வித்வத் கோஷ்டியினர் சமாதிக்குரிய ஆராதனைகளை நடத்தி வந்தார்கள். ஒரு சமயம் பெங்களூர் நாகரத்தினம் என்னும் பக்த ரத்தினம் திருவையாற்றுக்கு வந்தார். சமாதியைத் தரிசித்தார். அவரங்கஜீப் சங்கீத தேவதைக்குக் கட்ட விரும்பிய சமாதியைப் போல் இதுவும் ஆகக்கூடாதே என்று கவலை கொண்டார். எனவே, சமாதி இருந்த இடத்தில் கோயில் ஒன்றை நிலைநாட்டினார்.

எனவே, ஸ்ரீ தியாகராஜரின் சமாதி இன்று ஸ்ரீ தியாகராஜரின் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. இராம பக்தர்களும் தியாகராஜ பக்தர்களும் சங்கீத தேவியின் உபாஸகர்களும் அந்தத் திருக்கோயிலைத் தேடி வருகிறார்கள். வருஷந்தோறும் தைமாதம் பஹுள பஞ்சமியில் பக்தி சிரத்தையுடன் ஆராதனை நடத்துகிறார்கள். சங்கீத வித்வான்களும் சில காலமாக ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து ஸ்ரீ தியாகராஜ கைங்கரியம் செய்து வருகிறார்கள்.

* * *

நிகழும் ஆண்டில் ஜனவரி மாதம் 26-ந் தேதி சுதந்திரக் குடியரசு தினத்தில் திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜரின் ஆராதனை உற்சவம் ஆரம்பமாகிறது. கர்நாடக சங்கீதத்தின் உண்மைப் பக்தர்களில் ஒருவரான நமது பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்கள் ஆராதனை உற்சவக் கமிட்டியின் தலைவராக இருந்து நடத்துகிறார்கள். நீதிபதி ராஜமன்னார் அவர்களுடைய ரஸிகத்தன்மை இத்தகையது என்பதை சமீபத்தில் சென்னையில் நடந்த சங்கீதத் திருவிழா ஒன்றில் அவர் செய்த பிரசங்கத்திலிருந்து நன்கு அறியலாம். "பக்தி பாவம் நிறைந்து ததும்பும் தியாகராஜர் கீர்த்தனைகளைப் பாடும்போது இடையிடையே 'ஸநிதனி' 'ரீஸனி' என்று ஸ்வரம் பாட ஆரம்பித்து விடுகிறீர்களே! கீர்த்தனங்களை ஒழுங்காகப் பாடிவிட்டு, பல்லவியின் போது ஒரேயடியாக எல்லா ஸ்வரங்களையும் பாடித் தீர்த்து விடுவது தானே!" என்று சொன்னார். ஸ்ரீ தியாகராஜரின் சாஹித்யங்களிடம் நம் பிரதம நீதிபதி எவ்வளவு பக்தி கொண்டவர் என்று இதிலிருந்து நன்கு விளங்குகிறது அல்லவா!

பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களின் பக்தி சிரத்தை காரணமாக நமக்கு இவ்வாண்டில் இன்னொரு பெரிய பாக்கியம் கிடைப்பதற்கிருக்கிறது. திருவையாற்றில் ஆராதனை உற்சவத்தை ஆரம்பித்து வைக்க ராஜாஜி அவர்கள் வரப் போகிறார்கள்.

சர்தார் படேல் அவர்களின் மறைவு காரணமாக ராஜாஜி அவர்கள் எத்தனை பெரும் பொறுப்பு வகிக்க வேண்டி நேர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். எனினும், இச் சந்தர்ப்பத்தில் ராஜாஜி இவ்வளவு நெடுந்தூரப் பிரயாணம் வருகிறார்கள் என்றால் ஸ்ரீ தியாகராஜரின் ஆராதனை உற்சவத்தையும் கர்நாடக சங்கீதக் கலையையும் அவர்கள் எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறார்கள் என்பது வெளியாகிறது அல்லவா!

தமிழ் நாடு முழுவதிலும் உள்ள சங்கீத ரஸிகர்களும், முக்கியமாகத் தஞ்சாவூர் ஜில்லாப் பிரமுகர்களும் உற்சவ நிர்வாகிகளுடன் ஒத்துழைத்து உற்சவத்தைச் சிறப்பாக நடத்தி வைப்பார்கள் என்று நம்புகிறோம்.

மர்மம் வெளிப்படுகிறது !

கொஞ்சம் கீழ் வருவதைப் படித்துப் பார்த்துவிட்டு ஏதாவது மனதில் படிகிறதா, விளங்குகிறதா என்று சொல்லுங்கள் :—

பாரதத்தின் சம்விதானம்

பிரஸ்தாவனம்

“பாரத ஜனங்களாகிய நாம் 1949-ம் வருஷம் நவம்பர் மாதம் இருபத்தாரும் தேதியாகிய இன்று நமது சம்விதான சபையிலே பாரதத்தை ஒரு ஸம்பூர்ண பிரபுத்வ ஸம்பன்ன லோக தந்த்ராத்மக கண ராஜ்யமாக அமைத்து. அதனுடைய நாகரிகர்கள் அனைவருக்கும்,

சமாஜிக, ஆர்த்திக, அரசியல் நீதியும்,

எண்ணம், பேச்சு அல்லது, எழுத்து, கோட்பாடு, தர்மம், வழிபாடு ஆகிய இவைபற்றிய சுவாதீனத்தையும்,

அந்தஸ்தையும் வாய்ப்பையும் பற்றிய சமதையும் கிடைக்கும்படி செய்யவும், தனி பொருவருடைய கௌரவமும் ராஷ்டிரத்தில் ஒருமைப்பாடும் நிலைபெற்றிருக்கும் வகையில் அமைந்துள்ள சகோதரத்வம் அவர்கள் அனைவரிடையேயும் பெருகும்படி செய்யவும்,

மனப்பூர்வமாய் சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறபடியால், இந்த சம்விதானத்தை இதனால் அங்கீகரித்து, அதிநியமம் செய்து, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.”

இறுதி வரையில் படித்து முடித்த பேர்களில் மூர்ச்சையடைந்து விழாதவர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்ளுவதாவது :- வேண்டாம்! பயப்பட வேண்டாம். மேலே படித்த விஷயம் அப்படி ஒன்றும் பயங்கரமான விஷயம் அல்ல. நமது இந்தியக் குடியரசுச் சட்டத்தின் பூர்வ பீடிகை தான். இந்த நாட்டுக்குச் சுதந்திரமும் சமத்துவமும் ஜனநாயகமும் அளிக்கும் அரசியல் அமைப்பின் முதல் மகா வாக்கியந்தான்! ஆகையால் அஞ்ச வேண்டாம்!

ஆங்கிலத்தில் தயாரித்த அரசியல் அமைப்புச் சட்டத்தை ஹிந்தியில் மொழி பெயர்த்து முடித்தார்கள். பிறகு கூடுமான வரையில் ஹிந்தியில் உபயோகித்த சொற்களையே கையாண்டு மாகாண பாஷைகளில் பெயர்க்கும்படி மத்திய சர்க்காரிலிருந்து மாகாண சர்க்கார்களுக்குக் கட்டளை வந்தது. அதனுடைய விளைவு தான் மேற்கூறிய மொழி பெயர்ப்பு.

சர்தார் வல்லபாயின் புனித அஸ்தி கலசத்தை அலகாபாத் தெருக்களின் வழியாகத் திரிவேணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லுகின்றனர். காங்கிரஸ் அக்ராசனர் பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் உள்பட பல தலைவர்களை ஊர்வலத்தில் காணலாம்.



இப்படித் தமிழில் கூடியவரை ஹிந்தி சொற்களைக் கையாண்டு செய்த மொழி பெயர்ப்பைப் பரிசீலனை செய்து சரி பார்ப்பதற்குத் தமிழறிஞர்கள் நாலு பேரை நியமித்தார்கள். அவர்கள் மேற்படி மொழி பெயர்ப்பைப் படித்து விட்டுப் பயந்து அலறினார்களாம். பிறகு "தமிழ் நடையை மாற்றியாக வேண்டும். மாற்றாவிட்டால் புதிய குடியரசுச் சட்டத்தையே தமிழர்கள் வேண்டாம் என்று நிராகரித்து விடுவார்கள்!" என்று எச்சரித்திருக்கிறார்களாம். இதன் பலன் என்ன ஆகப் போகிறதோ, தெரியவில்லை. நிற்க.

மேலே வாசகர்களைப் பயமுறுத்திய விஷயத்தின் மர்மம் இன்னதென்பதைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தும் தமிழ் நூல் ஒன்று வெளியாகியிருக்கிறது. தயவு செய்து பின் வருவதையும் படித்துப் பார்க்கவும்:—

இந்தியக் குடியரசுச் சட்டம்

பூர்வ பீடிகை

"இந்தியாவில் பூர்ண சுதந்திரத்தோடு கூடிய ஒரு ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பதென்பது இந்திய ஜனங்களாகிய நமது உறுதியான தீர்மானம்.

மேலும் இந்த தேசப் பிரஜைகள் எல்லோருக்கும் சமூக, பொருளாதார, ராஜீயத் துறைகளில் நீதியும் சிந்தனை, பேச்சு அல்லது எழுத்து, மத நம்பிக்கை, வழிபாடு போன்ற விஷயங்களில் சுதந்திரமும், அந்தஸ்திலும், சந்தர்ப்பங்கள் பெறுவதிலும் சமத்துவமும், தனி நபருக்குரிய பெருமைக்கும், தேசிய ஒற்றுமைக்கும் ஒத்தவாறு சகோதரப் பான்மையும் ஏற்படச் செய்வதென்பது நமது உறுதியான முடிவு.

இதை யொட்டி, நமது அரசியல் நிர்ணய சபையில், 1949-ம் வருஷம், நவம்பர் மாதம் 26-ந் தேதியாகிய இன்று இந்த அரசியல் திட்டத்தை அங்கீகரித்து, சட்டமாக்கி நமக்கு நாமே வழங்கிக் கொள்கின்றோம்."

இந்த சரளமான மொழி பெயர்ப்புக்கும், அப்பப்பா! முதல் கண்ட சர்க்கார் இலாகா மொழி பெயர்ப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்!

இதேமாதிரி எளிய நடையில், புரியும்படியான தமிழில், இந்தியக் குடியரசுச் சட்டத்தை முழுதும் மொழி பெயர்த்திருக்கிறார் "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் ஸ்ரீ எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

அரசியலில் சிரத்தை உள்ளவர்கள் அனைவருக்கும் மிக அவசியமான இந்த அரிய நூலை இவ்வளவு நல்ல முறையில் மொழி பெயர்த்து அளித்திருக்கும் ஸ்ரீ எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தியும், புத்தகத்தை வெளியிட்டிருக்கும் "சுதேசமித்திரன்" காரியாலயத்தாரும் தமிழ் மக்களுக்கு அரிய தொண்டு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம் மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். புத்தகத்தின் விலை ரூ. 2—0—0 தான்.

அக்கப்போர்

"வருஷா வருஷம் சுமார் ஐந்து லட்சம் மக்கள் வந்து சேவிக்கக் கூடிய வைகுண்ட ஏகாதசி உற்சவத்துக்கு இந்த வருஷம் சுமார் 2 லட்சம் பேர்கள்தான் இங்கு வந்தார்கள்."

—ஸ்ரீரங்கம் செய்தி

அவரவர்கள் வீட்டிலேயே ஏகாதசியைக் கொண்டாடி இருப்பார்கள் மற்றைய பக்த கோடிகள்!

★

"மாடு முட்டி ரயில் கவிழ்ந்தது."

—ஒரு செய்தி

இந்த மாடு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்ததல்ல என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா?

★

"கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்தோமானால் எங்களைக் கழுதை மீது ஏற்றி ஊர்வலம் விடுங்கள்!" என்று அம்பாலா வியாபாரிகள் சிலர் பிரதிக்ஞை செய்தார்களாம்.

ஆனால் கள்ள மார்க்கெட் காரர்களைக் கழுதைகள் சுமக்க முன் வரவேண்டுமே!

★

"நகர தண்ணீர் சப்ளையில் வெட்டு அதி சீக்கிரம் வரும்." —சென்னைச் செய்தி

அப்படி வரும்போது தண்ணீரையும் நாம் செட்டாக உபயோகிக்க வேண்டும், பாலையும் சொட்டு சொட்டாக உபயோகிக்க வேண்டும்!

★

"பைரவ ராக லக்ஷண விவாதம்."

—ஒரு சங்கீத செய்தித் தலைப்பு

இந்த விவாதத்தில் பைரவர்களும் கலந்து கொண்டார்கள் என்ற செய்திக்கு அவ்வளவாக ஆதாரம் இல்லை.

★

"நேபாள தலைநகரம் காட்மாண்டுவில் அடக்குமுறை ஆட்சி கோரமாக நடக்கிறது. ஜனங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஆறுபேர் கொல்லப்பட்டனர்."—ஒரு செய்தி

காட்மாண்டுவில் இப்பொழுது காட்டுமிராண்டிகள் ஆட்சி நடப்பதால் ஜனங்கள் மாண்டு போவதில் என்ன ஆச்சரியம்!

★

"சேரிகளுக்குக் கவர்னர் விஜயம்"

—ஒரு செய்தித் தலைப்பு

சங்கீதக் கச்சேரிகளுக்கு விஜயம் செய்வதுடன் திருப்தியடையாமல் சேரிகளுக்கும் விஜயம் செய்து பஞ்சப்பாட்டையும் புகட்ட விரும்பும் கவர்னரின் தைரியத்தைப் பாராட்டுகிறோம்!

★

"இந்திய கோனிப்பைகளை அர்ஜண்டைனா கேட்கிறது." —செய்தி

அர்ஜண்டாகக் கேட்கிறதா!

பரதநாட்டியம் - அபிநயம்



குமாரி

ராதா

★

நடன ஆசிரியர் :

நாட்டியக் கலாகேசரி

வழுவூர்

ஸ்ரீ ராமையா பிள்ளை

★

பெங்களூர் ஸிடி, நரசிம்ம ராஜா ரோடு
புட்டண்ண செட்டி ஹாலில்

6-1-1951 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

★



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள்

அபிநயத்திற்குப் பதங்கள் பாடுவார்கள்

டிக்கட்டுகள் : ஆதரவாளர்கள் ரூ. 15/- முதல் வகுப்பு ரூ. 10/- இரண்டாவது வகுப்பு ரூ. 5/- மூன்றாவது வகுப்பு ரூ. 2/6/- (வரியுள்பட)

ரூ. 3/9/- (வரியுள்பட) வீதம் ஸ்திரீகளுக்கு மட்டும்

ஸ்பெஷலாகப் பிரத்தியேக இட வசதி அமைக்கப் பட்டுள்ளது

அதிகக் கட்டணம் ஏதுமின்றி ஆதரவாளரும் முதல், இரண்டு வகுப்பினரும் ஸீட் ரிஸர்வ் செய்து கொள்ளலாம். 29-12-50 முதல் 4-1-51 வரை கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட்டுகள் கிடைக்கும்.

1. மாடர்ன் ஹிந்து ஹோட்டல், *சேஷாத்ரி ரோடு*
2. ஸ்ரீ எம். ஏ. டி. ஆச்சார்யா & கோ. *கிருஷ்ண பில்டிங்ஸ்*
3. விஜயலக்ஷ்மி ஹால், *சிக்பேட்*
4. ஸ்ரீ எம். ஸ்ரீனிவாஸாசார்லு & கோ. *நரசிம்ம ராஜா ரோடு*
5. ப்ளாஸா தியேட்டர், *சௌத் பெரேட்*
6. ஸ்வாமி ஹால், *கமர்ஷியல் தெரு*
7. ஸ்ரீ S. V. R. அய்யர் (கம்பெனி ஏஜண்டு) *59, லட்சுமண முதலியார் தெரு*

காலை 9 முதல் 12 மணி வரையிலும் மாலை 3 முதல் 6 மணி வரையிலும் 3-1-51 தேதி முதல் எல்லா வகுப்புகளுக்கும் டவுன் ஹாலில் டிக்கட்டுகள் கிடைக்கும்.

குறிப்பிட்ட ஸீட் ரிஸர்வ் செய்வது சாத்தியமில்லை. மூன்று வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு முழுக் கட்டணமே வசூலிக்கப்படும்.

கே. எஸ். கிருஷ்ண அய்யர், ஆர்கனைஸர்

(55, விக்க பாரம் எக்ஸ்டென்ஷன், பஸவன்குடி.)

பொன்னியின் செல்வன்



இருபத்திரண்டாம் அத்தியாயம்

வேளக்காரப் படை

முதலில், பல்லக்கின் வெளிப்புறத் திரை—பனைமரச் சின்னம் உடைய துணித் திரை—விலகியது. பின்னர் உள்ளிருந்த பட்டுத் திரையும் நகரத் தொடங்கியது. முன்னொரு தடவை வல்லவரையன் பார்த்தது போன்ற பொன் வண்ணக் கையும் தெரிந்தது. வந்தியத்தேவன் இனித் தான் குதிரை மேலிருப்பது தகாது என்று எண்ணி ஒரு நொடியில் கீழே குதித்தான். சிவிகையின் அருகில் ஓடி வந்து "இளவரசே! இளவரசே! பல்லக்குச் சுமக்கும் ஆட்கள்......" என்று சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்தான். மீண்டும் உற்றுப் பார்த்தான்; கண்ணிமைகளை மூடித் திறந்து மேலும் பார்த்தான்! பார்த்த கண்கள் கூசின! பேச்சு நாக் குழறியது. தொண்டையில் திடீரென்று சுரம் வற்றியது. "இல்லை, இல்லை! தாங்கள்!......பழுவூர் இளவரசி!......பழுவூர் இராணி!...... உங்கள் ஆட்களின் குதிரை என் பல்லக்கை இடித்தது!..." என்று உளறிக் கொட்டினான்.

இதெல்லாம் கண் மூடித் திறக்கும் நேரத்துக்குள் நடந்தது. பல்லக்கின் முன்னும் பின்னும் சென்ற காவல் வீரர்கள் ஓடி வந்து வல்லவரையனைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள் என்பது வல்லவரையனுக்கும் தெரிந்தது. அவனுடைய கையும் இயல்பாக உறைவாளிடம் சென்றது. ஆனால் கண்களை மட்டும் பல்லக்கின் பட்டுத் திரையின் மத்தியில் ஒளிர்ந்த மோகனாங்கியின் சந்திர பிம்ப வதனத்தினின்றும் அவனால் அகற்ற முடியவில்லை!

ஆம்; வல்லவரையன் எதிர்பார்த்ததற்கு மாறாக, இப்போது அப்பல்லக்கில் அவன் கண்டது ஒரு நிஜமான பெண்ணின் வடிவந்தான்! பெண் என்றாலும், எப்படிப்பட்ட பெண்! பார்த்தவர்களைப் பைத்தியமாக அடிக்கக் கூடிய இத்தகைய பெண்ணழகு இவ்வுலகில் இருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணியதே இல்லை!

நல்ல வேளையாக, அதே நிமிஷத்தில் வந்தியத்தேவனுடைய மூளை நரம்பு ஒன்று அசைந்தது. அதிசயமான ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் உதயமாயிற்று. அதை உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

ஒரு பெருமுயற்சி செய்து, தொண்டையைக் கனைத்து, நாவிற்குப் பேசும் சக்தியை வரவழைத்துக் கொண்டு, "மன்னிக்க வேண்டும்! தாங்கள் பழுவூர் இளைய ராணி தானே! தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இத்தனை தூரம் வந்தேன்!" என்றான்.

பழுவூர் இளைய ராணியின் பால் வடியும் முகத்தில் இளநகை அரும்பியது. அதுகாறும் குவிந்திருந்த தாமரை மொட்டு சிறிது விரிந்து உள்ளே பதித்திருந்த வெண்முத்து

கல்கி

வரிசையை இலேசாகப் புலப்படுத்தியது. அந்தப் புன்முறுவலின் காந்தி நமது இளம் வீரனைத் திக்குமுக்காடித் திணறச் செய்தது.

அவனருகில் வந்து நின்ற வீரர்கள் தங்கள் எஜமானியின் கட்டளைக்கு எதிர்பார்த்துக் காத்திருந்ததாகத் தோன்றியது. அந்தப் பெண்ணரசி கையினால் ஒரு சமிக்ஞை செய்யவே, அவர்கள் உடனே அகன்று போய்ச் சற்றுத் தூரத்தில் விலகி நின்றார்கள். இரண்டு வீரர்கள் பல்லக்கின் மீது மோதிக் கொண்டு நின்ற குதிரையைப் பிடித்துக் கொண்டார்கள்.

பல்லக்கிலிருந்த பெண்ணரசி வந்தியத்தேவனை நோக்கினாள். வந்தியத்தேவனுடைய நெஞ்சில் இரண்டு கூரிய வேல் முனைகள் பாய்ந்தன!

"ஆமாம்; நான் பழுவூர் இளைய ராணி தான்!" என்றாள் அப்பெண்மணி. இவளுடைய குரலில் அத்தகைய போதை தரும் பொருள் என்ன கலந்திருக்க முடியும்? ஏன் இக் குரலைக் கேட்டு நமது தலை இவ்விதம் கிறுகிறுக்க வேண்டும்?

"சற்று முன்னால் நீ என்ன சொன்னாய்? ஏதோ முறையிட்டாயே? சிவிகை சுமக்கும் ஆட்களைப் பற்றி?"

காசிப் பட்டின் மென்மையும், கள்ளின் போதையும், காட்டுத் தேனின் இனிப்பும், கார்காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண் குரலில் கலந்திருக்க முடியுமா?......... அவ்விதம் இதோ கலந்திருக்கின்றனவே!

"பல்லக்கைக் கொண்டு வந்து அவர்கள் உன் குதிரை மீது மோதினார்கள் என்று சொன்னாய்?..."

பழுவூர் ராணியின் பவள இதழ்களில் தவழ்ந்த பரிகாசப் புன்னகை, அந்த வேடிக்கையை அவள் நன்கு ரஸித்ததாகக் காட்டியது. இதனால் வந்தியத் தேவன் சிறிது துணிச்சல் அடைந்தான்.

"ஆம், மகாராணி! இவர்கள் அப்படித்தான் செய்தார்கள்; என் குதிரை மிரண்டு விட்டது!" என்றான்.

"நீயும் மிரண்டு போய்த் தானிருக்கிறாய்! துர்க்கையம்மன் கோயில் பூசாரியிடம் போய் வேப்பிலை அடிக்கச் சொல்லு! பயம் தெளியட்டும்!"

இதற்குள் வந்தியத் தேவனுடைய பயம் நன்கு தெளிந்துவிட்டது. அவனுக்குச் சிரிப்புக்கூட வந்துவிட்டது.

பழுவூர் ராணியின் முகபாவம் இப்போது மாறிவிட்டது. குறுநகையின் நிலவு கோபக் கனலாயிற்று.

"வேடிக்கை அப்புறம் இருக்கட்டும்; உண்மையைச் சொல்! எதற்காகப் பல்லக்கின் மேல் குதிரையைக் கொண்டு வந்து மோதி நிறுத்தினாய்?"

இதற்குத் தக்க மறுமொழி சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லாவிட்டால்....? நல்ல வேளையாக, ஏற்கெனவே அந்த மறுமொழி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதயமாகியிருந்தது. சற்றுத் தணிந்த குரலில், பிறர் கேட்கக் கூடாது என்று வேண்டுமென்றே தணித்த அந்தரங்கம் பேசும் குரலில்,—"தேவி! நந்தினி தேவி! ஆழ்வார்க்கடியார் ...... அவர்தான், திருமலையப்பர், ... தங்களைச் சந்திக்கும்படி சொன்னார். அதற்காகவே இந்தச் சூழ்ச்சி செய்தேன். மன்னிக்க வேண்டும்!" என்றான்.

இவ்விதம் சொல்லிக் கொண்டே பழுவூர் ராணியின் முகத்தை வந்தியத்தேவன் கூர்ந்து கவனித்தான். தன்னுடைய மறுமொழியினால் என்ன பயன் விளையப்போகிறதோ என்னும் ஆவலுடன் பார்த்தான்.

கனி மரத்தின் மேல் கல் எறிவது போன்ற காரியந்தான். கனி விழுமா? காய் விழுமா? எறிந்த கல் திரும்பி விழுமா? அல்லது எதிர்பாராத இடி ஏதாவது விழுமா?

பழுவூர் ராணியின் கரிய புருவங்கள் சிறிது மேலே சென்றன. கண்களில் வியப்பும் ஐயமும் தோன்றின. மறு கணத்தில் அந்தப் பெண்ணரசி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

"சரி; நடுச்சாலையில் நின்று பேசுவது உசிதம் அல்ல. நாளைக்கு நம் அரண்மனைக்கு வா! எல்லா விஷயமும் அங்கே விவரமாகச் சொல்லிக் கொள்ளலாம்" என்றாள்.

வந்தியத் தேவனுடைய உள்ளம் பூரித்தது. நினைத்த காரியம் வெற்றி பெற்று விடும்போலே காண்கிறது! ஆனால், முக்கால் கிணறு தாண்டிப் பயனில்லை. மற்றக் கால் பங்குக் கிணற்றையும் தாண்டியாக வேண்டும்.

"தேவி! தேவி! கோட்டைக்குள் என்னைவிட மாட்டார்களே! அரண்மனைக்குள்ளும் விடமாட்டார்களே? என்ன செய்வது?" என்று பரபரப்புடன் சொன்னான்.

பழுவூர் ராணி உடனே பல்லக்கில் தன் அருகில் கிடந்த ஒரு பட்டுப் பையைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு தந்த மோதிரத்தை எடுத்தாள்.

"இதைக் காட்டினால் கோட்டைக்குள்ளும் விடுவார்கள்; நம் அரண்மனைக்குள்ளும் விடுவார்கள்!" என்று சொல்லிக் கொண்டே கொடுத்தாள். வந்தியத்தேவன் அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டான். ஒரு கணம் பனை இலச்சினை பொறித்த அந்தத் தந்த மோதிரத்தைப் பார்த்தான். மறுபடி நிமிர்ந்து ராணிக்கு வந்தனம் கூற எண்ணியபோது பல்லக்கின் திரைகள் மூடிக் கொண்டிருந்தன.

ஆகா! பூரண சந்திரனை ராகு கவ்வும்போது சிறிது சிறிதாகக் கவ்வுகிறது. ஆனால் இந்தப் பல்லக்கின் திரைகள் அந்தப் பேசும் நிலா மதியத்தை ஒரு நொடியில் கபளீகரம் செய்து விட்டனவே!

"இனியாவது என்னைப் பின் தொடர்ந்து வராதே! அபாயம் நேரும். நின்று மெதுவாக வா!" என்று பல்லக்குத் திரைக்குள்ளிருந்து பட்டுப் போன்ற குரல் கேட்டது.

பிறகு பல்லக்கு நகர்ந்தது. வீரர்கள் முன்போலவே அதன் முன்னும் பின்னும் சென்றார்கள்.

வந்தியத்தேவன் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு சாலையோரமாக ஒதுங்கி நின்றான். பழுவூர் ஆள்களில் தன்னை அணுகி வந்து பேசியவன் இரண்டு மூன்று தடவை திரும்பித் திரும்பிப் பார்த்ததை அவனுடைய கண்கள் கவனித்து உள் மனதுக்குச் செய்தி அனுப்பின.

ஆம்; அவனுடைய வெளி மனம் பல்லக்கிலிருந்த பழுவூர் ராணியின் மோகன வடிவத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. இத்தனை நேரம் கண்டது, கேட்டது எல்லாம் உண்மைதானா? அல்லது ஒரு மாய மனோகரக் கனவா? இப்படியும் ஒரு அழகு, ஒரு சௌந்தரிய வடிவம், இந்தப் பூவுலகில் இருக்க முடியுமா!

அரம்பை, ஊர்வசி, மேனகை என்றெல்லாம் தேவமாதர்கள் இருப்பதாகப் புராணங்களில் சொல்வதுண்டு. அவர்களுடைய அழகு முற்றும் துறந்த முனிவர்களின் தவத்தையும் பங்கம் செய்ததாகக் கேட்டதுண்டு. ஆனால் இந்த உலகத்தில்!...... பெரிய பழுவேட்டரையர் இந்த மோகினியின் காலடியில் அடிமை பூண்டு கிடப்பதாக நாடு நகரங்களில் பேசுவதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். இருந்தால், அதில் வியப்பு ஒன்றும் இராது! நரைதிரை மூப்புக் கண்டவரும், தேகமெல்லாம் போர்க்காயங்களுடன் கடூரமான தோற்றங் கொண்டவருமான பழுவேட்டரையர் எங்கே? ஸுகுமாரியும் கட்டழகியுமான இந்த இளம் மங்கை எங்கே? இவளுடைய ஒரு புன்னகையைப் பெறுவதற்காக அந்தக் கிழவர் என்ன காரியந்தான் செய்ய மாட்டார்?......

வெகு நேரம் சாலை ஓரத்தில் நின்று இவ்விதச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த பிறகு வந்தியத்தேவன் குதிரைமேல் ஏறிக் கொண்டு மெள்ள மெள்ள அந்தத் தஞ்சைக் கோட்டையை நோக்கிச் செலுத்தினான்.

சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பிரதான கோட்டை வாசலை அடைந்தான். கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலேயே நகரம் ஆரம்பமாகியிருந்தது. விதவிதமான பண்டங்கள் விற்கும் கடைவீதிகளும், பலவகைத் தொழில்களில் ஈடுபட்ட மக்கள் வாழும் தெருக்களும், கோட்டையைச் சுற்றி அடுக்கடுக்காக அமைந்திருந்தன. வீதிகளில் போவோரும் வருவோரும் பண்டங்கள் வாங்குவோரும் விலை கூறுவோரும் மாடு பூட்டிய வண்டிகளும் குதிரை பூட்டிய ரதங்களும் நிறைந்து எங்கும் ஒரே கலகலப்பாயிருந்தது. அந்த வீதிகளுக்குள்ளே புகுந்து சென்று சோழ நாட்டுப் புதிய தலைநகரத்தில் வாழும் மக்களையும் அவர்கள் வாழும் விதத்தையும் பார்க்க வந்தியத்தேவனுக்கு மிக்க ஆவலாயிருந்தது. ஆனால் அதற்கெல்லாம் இப்போது அவகாசம் இல்லை. வந்த காரியத்தை முதலில் பார்க்க வேண்டும். வேடிக்கை பார்ப்பதெல்லாம் பிற்பாடு வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானத்துடன் வந்தியத்தேவன் தஞ்சை நகரின் பிரதான வாசலை அணுகினான். கோட்டை வாசலின் பிரம்மாண்டமான கதவுகள் அச்சமயம் சாத்தியிருந்தன. வாசலில் நின்ற காவலர்கள் மக்களை ஒதுங்கச் செய்து வீதி ஓரங்களில் நிற்கும்படி செய்துகொண்டிருந்தார்கள். மக்களும் ஒதுங்கி நின்றார்கள். ஆம், அவரவர்கள் தங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு போவதற்குப் பதிலாக ஏதோ ஊர்வலம் அல்லது பவனி பார்ப்பதற்காகக் காத்திருப்பவர்களைப்போல் நின்றார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர் எல்லாருமே ஆவலுடன் நின்றார்கள்.

கோட்டை வாசலுக்கு முன்னால் சிறிது தூரம்வரை வெறுமையாகவே இருந்தது. வாசலண்டை காவலர்கள் மட்டும் நின்றார்கள்.

விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் ஆவல் கொண்டான். எல்லாரும் ஒதுங்கி நிற்கும்போது தான்மட்டும் கோட்டை வாசல் காப்பாளரிடம் சென்று மாட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை. அதிலிருந்து வீண் வாதமும் சண்டையும் மூளலாம். இப்போது தனக்குக் காரியம் முக்கியமே தவிர வீரியம் பெரிது அல்ல. வீண் சண்டைகளில் இறங்க இது தருணமல்ல.

எனவே, வந்தியத்தேவன் கோட்டை வாசலைக் கவனிக்கக்கூடிய இடத்தில் வீதி ஓரத்தில் ஒதுங்கி நின்றான். பக்கத்தில் கம்மென்று மலரின் மணம் வீசியது. திரும்பிப் பார்த்தான். ஒரு வாலிபன், திருநீறு ருத்ராட்சம் முதலிய சிவச் சின்னங்கள் தரித்தவன், இரண்டு கைகளிலும் இரண்டு பூக்கூடைகளுடன் நிற்பதைக் கண்டான்.

“தம்பி! எல்லாரும் எதற்காக வீதி ஓரம் ஒதுங்கி நிற்கிறீர்கள்? ஏதாவது ஊர்வலம் கீர்வலம் வரப் போகிறதா?” என்று கேட்டான்.

“தாங்கள் இந்தப் பக்கத்து மனிதர் இல்லையா, ஐயா?”

“இல்லை, நான் தொண்டை நாட்டைச் சேர்ந்தவன்!”

“அதனால்தான் கேட்கிறீர்கள். நீங்களும் குதிரை மேலிருந்து இறங்கிக் கீழே நிற்பது நல்லது.”

வாலிபனோடு பேசுவதற்குச் சௌகரியமாயிருக்கட்டும் என்று வந்தியத்தேவன் குதிரைமீதிருந்து குதித்தான்.

“தம்பி! எதற்காக என்னை இறங்கச் சொன்னாய்?” என்று கேட்டான்.

“இப்போது வேளக்காரப் படை அரசரைத் தரிசனம் செய்துவிட்டு கோட்டைக்குள்ளிருந்து வரப்போகிறது. அதற்காகத்தான் இத்தனை ஜனங்களும் ஒதுங்கி நிற்கிறார்கள்.”

“வேடிக்கை பார்க்கத்தானே?”

“ஆமாம்.”

“நான் குதிரைமேல் உட்கார்ந்து கொண்டு பார்த்தால் என்ன?”

“பார்க்கலாம். ஆனால் வேளக்காரப் படை வீரர்கள் உங்களைப் பார்த்து விட்டால் ஆபத்து.”


“என்ன ஆபத்து? குதிரையைக் கொண்டு போய் விடுவார்களா?”

“குதிரையையும் கொண்டு போவார்கள். ஆளையே கொண்டு போய் விடுவார்கள். பொல்லாதவர்கள்.”

“குதிரையையும் ஆளையும் கொண்டு போனால் சும்மா விட்டுவிடுவார்களா?”

“விடாமல் என்ன செய்வது? வேளக்காரப் படையார் வைத்ததே இந்த நகரில் சட்டம். அவர்களைக் கேள்வி கேட்பார் கிடையாது. பழுவேட்டரையர்கள்கூட வேளக்காரப் படை விஷயத்தில் தலையிடுவது கிடையாது.”

இச்சமயத்தில் கோட்டைக்கு உட்புறத்தில் பெரிய ஆர்ப்பாட்ட ஆரவாரங்கள் கேட்டன. நகரா முழங்கும் சத்தம், பறைகள் கொட்டும் சத்தம், கொம்புகள் ஊதும் சத்தம் இவற்றுடன் பலநூறு மனிதர் குரல்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகளும் கலந்து எதிரொலி செய்தன.



வேளக்கார வீரர்படைகளைப் பற்றி வந்தியத்தேவன் நன்கு அறிந்திருந்தான். பழந்தமிழ் நாட்



டில், முக்கியமாகச் சோழ நாட்டில் இது முக்கிய ஸ்தாபனமாக இருந்து வந்தது. 'வேளக்காரர்' என்பவர் அவ்வப்போது அரசுபுரிந்த மன்னர்களுக்கு மெய்க்காப்பாளர் போன்றவர். ஆனால் மற்ற சாதாரண மெய்க்காப்பாளருக்கும் இவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவர்கள் 'எங்கள் உயிரைக் கொடுத்தாவது அரசரின் உயிரைப் பாதுகாப்போம்' என்று சபதம் செய்தவர்கள். தங்கள் அஜாக்கிரதையினாலோ, தங்களை மீறியோ, அரசர் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால், துர்க்கையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாவதாகச் சபதம் எடுத்துக் கொண்டவர்கள். அத்தகைய கடூர சபதம் எடுத்துக்கொண்ட வீரர்களுக்கு மற்றவர்களுக்கு இல்லாத சில சலுகைகள் இருப்பது இயல்புதானே?

கோட்டை வாசலின் கதவுகள் இரண்டும் படார், படார் என்று திறந்து கொண்டன.

முதலில் இரண்டு குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களது வலக் கையில் உயரப் பறந்த கொடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொடியின் தோற்றம் விசித்திரமாக இருந்தது. செக்கிரமான அக் கொடியில் மேலே புலியும், புலிக்கு அடியில் கிரீடமும் சித்திரிக்கப் பட்டிருந்தன. கிரீடத்துக்கு அடியில் ஒரு பலி பீடமும், கழுத்து அறுபட்ட ஒரு தலையும், ஒரு பெரிய பலிக் கத்தியும் காட்சி அளித்தன. கொடியைப் பார்க்கச் சிறிது பயங்கரமாகவே இருந்தது.

கொடி தாங்கிய குதிரை வீரர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய ரிஷபம் இரண்டு பேரிகைகளைச் சுமந்து கொண்டு வந்தது. இரண்டு ஆட்கள் நின்று பேரிகைகளை முழங்கினார்கள்.

ரிஷபத்துக்குப் பின்னால் சுமார் ஐம்பது வீரர்கள் சிறு பறை, பெரும் பறை, தம்பட்டம் ஆகியவற்றை முழக்கிக்கொண்டு வந்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து இன்னும் ஐம்பது பேர் நீண்டு வளைந்த கொம்புகளை 'பாம் பாம் பபாம்' என்று ஊதிக் கொண்டு வந்தார்கள்.

அவர்களுக்குப் பின்னால் வந்த வீரர்கள் ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் பெரும்பாலோர் பின்வரும் வாழ்த் தொலிகளை இடி முழக்கக் குரலில் எழுப்பிக் கொண்டு வந்தார்கள்.

"பராந்தக சோழ பூமண்டல சக்கரவர்த்தி வாழ்க!"

"வாழ்க, வாழ்க!"

"சுந்தர சோழ மன்னர் வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"கோழி வேந்தர் வாழ்க!"

"வாழ்க வாழ்க!"

"தஞ்சையர் கோன் வாழ்க!"

"வாழ்க வாழ்க!"

"வீரபாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமாள் வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"மதுரையும் ஈழமும் தொண்டை மண்டலமும் கொண்ட கோஇராஜ கேசரி வாழ்க!"

"வாழ்க வாழ்க!"

"கரிகால் வளவன் திருக்குலம் நீடூழி வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"துர்க்கை மாகாளி பராத்பரி பராசக்தி வெல்க!"

"வெல்க! வெல்க!"

"வீரப் புலிக் கொடி பாரெலாம் பரந்து வெல்க!"

"வெல்க! வெல்க!"

"வெற்றி வேல்!"

"வீர வேல்!"

நூற்றுக் கணக்கான வலிவுள்ள குரல்களிலிருந்து எழுந்த மேற்படி கோஷங்கள் கேட்போரை மெய் சிலிர்க்கச் செய்தன. கோட்டை வாசலின் வழியாக வந்தபோது அந்த கோஷங்கள் உண்டாக்கிய பிரதித்வனிகளும் சேர்ந்து கொண்டன. வீதி ஓரங்களில் நின்ற மக்களில் பலரும் கோஷத்தில் கலந்து கொண்டார்கள்.

இவ்விதம், * வேளக்காரப் படை வீரர்கள் தஞ்சைக் கோட்டை வாசல் வழியாக வெளி வரத் தொடங்கி, வீதி வழியாகச் சென்று, தூரத்தில் மறையும் வரையில் ஒரே அல்லோல கல்லோலமாக இருந்தது.

இருபத்திமூன்றாம் அத்தியாயம்

அமுதனின் அன்னை

வேளக்கார வீரர் படை பெரிய கடைவீதியின் வழியாகப் போயிற்று. படையின் கடைசியில் சென்ற சில வீரர்கள் கடைத்தெருவில் சில திருவிளையாடல்களைப் புரிந்தார்கள். ஒருவன் ஒரு பட்சணக் கடையில் புகுந்து ஒரு கூடை நிறைய அதிரசத்தை எடுத்துக்கொண்டு வந்து மற்ற வீரர்களுக்கு விநியோகித்தான். பிறகு வெறுங் கூடையைக் கடைக்காரனுடைய தலையிலே கவிழ்த்த போது, வீரர்களும் வீதியில் சென்றவர்களும் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று இரைந்து சிரித்தார்கள். இன்னொரு வீரன் வழியில் எதிர்ப்பட்ட ஒரு மூதாட்டியின் கையிலிருந்த பூக்கூடையைப் பிடுங்கினான். பூவையெல்லாம் வாரி இறைத்துக் கொண்டே "பூமாரி பொழிகிறதடா!" என்றான். அவன் வாரி வீசிய பூக்களைப் பிடிக்க முயன்ற வீரர்கள் குதித்தும் சிரித்தும் கொம்மாளமடித்தார்கள். எதிரில் வந்த ஒரு மாட்டுவண்டியை இன்னொரு வீரன் நிறுத்தி, மாட்டை வண்டியிலிருந்து பூட்டு அவிழ்த்து விரட்டி அடித்தான். மாடு மிரண்டு மக்கள் கூட்டத்

---

* தமிழ் நாட்டின் தெய்வமான முருகனுக்கு 'வேளக்காரன்' என்று ஒரு பெயர் உண்டு என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். 'பக்தர்களைக் காப்பாற்றுவதாகச் சபதம் பூண்ட தெய்வம்' என்பதனால் முருகனுக்கு அப் பெயர் வந்தது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இடையே புகுந்து சிலரைத் தள்ளிக் கொண்டு ஓடியது. மீண்டும் ஒரே கோலாகலச் சிரிப்புத்தான்!

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், "ஆகா! பழுவேட்டரையரின் வீரர்களைப் போல் இவர்களும் விளையாடுகிறார்கள். இவர்களுடைய விளையாட்டு மற்றவர்களுக்கு வினையாக இருக்கிறது. நல்ல வேளை. இவர்களுடைய பார்வை நம்மீது விழாமல் ஒதுங்கி நின்றோம். இல்லாவிடில் ஒரு சண்டை ஏற்பட்டிருக்கும். வந்த காரியம் கெட்டுப்போயிருக்கும்" என்று எண்ணிக் கொண்டான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசமும் அவனுக்குப் புலனாயிற்று. வேளக்காரப்படை வீரர்களின் விளையாடல்களை இங்குள்ள ஜனங்கள் அவ்வளவாக வெறுக்கவில்லை. அவர்களுடைய சௌமானத்தில் ஜனங்களும் சேர்ந்து சிரித்துக் குதூகலித்தார்கள்!

இதைப் பற்றிக் கேட்கலாம் என்று திரும்பிப் பார்த்தபோது பூக்குடலைகளுடன் நின்ற சிறுவனை வந்தியத்தேவன் காணவில்லை. கூட்டத்திலும் கோலாகலத்திலும் அந்த வாலிபன் எங்கேயோ போய்விட்டான். ஒரு வேளை அவனுடைய வேலையைப் பார்க்கப் போயிருக்கக் கூடும்.

வேளக்காரப்படை மாலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பிறகு மற்ற யாரையும் உள்ளே விடுவதில்லையென்று வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இரவு பகல் எந்த நேரத்திலும் கோட்டைக்குள் பிரவேசிக்கும் உரிமை பெற்றவர்கள் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அமைச்சர்களும், தண்ட நாயகர்களுந்தான். பழுவேட்டரையர்களின் குடும்பத்தாருக்கும் அவ்வுரிமை உண்டு என்று வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். எனவே, இராத்திரியே கோட்டைக்குள் போக வேண்டும் என்ற உத்தேசம் அவனுக்கு மாறி விட்டது. தன்னிடமிருந்த இலச்சினை மோதிரத்தைக் காட்டிச் சோதனை செய்ய வந்தியத்தேவன் விரும்பவில்லை. அதைவிட இரவு கோட்டைக்கு வெளியிலேயே தங்கி நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு நாளை உதயத்துக்குப் பிறகு கோட்டைக்குள் செல்வதே நல்லது. இராத்திரியில் அப்படியே கோட்டைக்குள் பிரவேசித்தாலும் அரசரைத் தரிசித்து ஓலை கொடுப்பது இயலாத காரியமே யல்லவா?

கோட்டை மதிளைச் சுற்றிலும் இருந்த வீதிகளின் வழியாக வந்தியத்தேவன் வேடிக்கை பார்த்துக் கொண்டே மெதுவாகச் சென்றான். அன்று பல காத தூரம் பிரயாணம் செய்திருந்த அவனுடைய குதிரை மிகக் களைத்திருந்தது. சீக்கிரத்தில் அதற்கு ஓய்வு கொடுக்க வேண்டியது தான். இல்லாவிடில் நாளைக்கு அவசியம் ஏற்படும்போது இக் குதிரையினால் பயனில்லாமல் போய்விடும்! வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் விரைவில் கண்டு பிடித்தாக வேண்டும்!

தஞ்சைபுரி அப்போது புதிதாகப் பல்கிப் பெருகிப் பரந்து வளர்ந்து கொண்டிருந்த நகரம். அதிலும் அப்போது மாலை நேரம். நூற்றுக்கணக்கான வீதி விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிவீசத் தொடங்கியிருந்தன.

வீதிகளெல்லாம் ஜே ஜே என்று ஒரே ஜனக்கூட்டம். வெளியூர்களிலிருந்து பல அலுவல்களின் நிமித்தமாக வந்தவர்கள் அங்கு மிங்கும் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் சோழநாட்டுப் பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வந்தவர்களும் இருந்தார்கள். புதிதாகச் சோழ சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளிலிருந்து வந்தவர்களும் காணப்பட்டார்கள். பொருனை நதியிலிருந்து பாலாற்றங்கரை வரையிலும் கிழக்கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரையிலும் பரந்திருந்த தேசங்களிலிருந்து தலைநகருக்குப் பலர் வந்திருந்தார்கள். விந்திய மலைக்கு வடக்கேயிருந்து வந்தவர்களும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்தவர்களுங் கூடச் சிலர் அம் மாநகரின் வீதிகளில் ஆங்காங்கே தோன்றினார்கள்.

ஆப்பம், அதிரசம் முதலிய தின்பண்டங்கள் விற்ற கடைகளில் மக்கள் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்து அப்பண்டங்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். வாழைப் பழங்களும் வேறு பலவிதக் கனிகளும் மலை மலையாகக் குவிந்து கிடந்தன. பூக் கடைகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. முல்லையும் மல்லிகையும் இருவாத்தியும்

செண்பகமும் புஷ்பக் குன்றுகளைப் போல் காட்சி தந்தன. அந்த மலர்க் குன்றுகளைச் சுற்றிப் பெண்மணிகள் வண்டுகளைப்போல் ரீங்காரம் செய்து கொண்டு மொய்த்தார்கள்.

புஷ்பக் கடைகளினருகில் சென்றதும் வந்தியத்தேவன் அந்தப் பூக்கார வாலிபனை நினைத்துக் கொண்டான். அவனை மறுபடியும் பார்க்கக் கூடுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்? இந்த நகரில் வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் அவனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமல்லவா?...... இப்படி எண்ணியபோதே சற்றுத் தூரத்தில் அந்த வாலிபன் வந்து கொண்டிருப்பதை வந்தியத் தேவன் கண்டான். குதிரையிலிருந்து இறங்கி அவனை அணுகினான்.

"தம்பி! பூக்குடலைகளில் ஒன்றையும் காணோமே? பூவெல்லாம் எங்கே? விற்றுவிட்டதா?" என்றான்.

"விற்பதற்காக நான் பூக் கொண்டு வரவில்லை. கோயில் பூஜைக்காகப் பூக் கொண்டு வந்தேன். பூவைக் கொடுத்தாகி விட்டது. வீட்டுக்குத் திரும்பிப் போகிறேன்."



"எந்தக் கோயிலுக்கு நீ இந்தப் புஷ்பக் கைங்கரியம் செய்கிறாய்?"

"தளிக்குளத்தார் ஆலயம் என்று கேட்டதுண்டா?"

"ஓகோ! தஞ்சைத் தளிக்குளத்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கோவில்தான் போலிருக்கிறது. பெரிய கோவிலா அது?"

"இல்லை; சிறிய கோவில் தான். கொஞ்ச காலமாக இத்தஞ்சையில் துர்க்கையம்மன் கோவிலுக்குத் தான் மகிமை அதிகம். அங்கே தான் பூஜை, பொங்கல், பலி, திருவிழா ஆர்ப்பாட்டங்கள் அதிகம். அரச குடும்பத்தாரும் பழுவேட்டரையர்களும் துர்க்கை அம்மன் கோவிலுக்குத்தான் அதிகமாகப் போகிறார்கள். தளிக்குளத்தார் கோயிலுக்கு அவ்வளவு மகிமை இல்லை. தரிசனம் செய்ய ஜனங்கள் அவ்வளவாக வருவதில்லை..."

"நீ இந்தப் புஷ்பக் கைங்கரியம் செய்து வருகிறாயே? இதற்காக, ஏதேனும் சன்மானம் உண்டா?"

"எங்கள் குடும்பத்துக்கு இதற்காக மானியம் இருக்கிறது. என் பாட்டனார் காலத்திலிருந்து கண்டராதித்த சக்கரவர்த்தி விட்ட நிவந்தம் உண்டு. தற்சமயம் நானும் என் தாயாரும் இந்தக் கைங்கரியத்தைச் செய்து வருகிறோம்."

"தளிக்குளத்தார் கோயில் செங்கல் திருப்பணியா? அல்லது கருங்கல் பணி செய்திருக்கிறார்களா?" என்று வல்லவரையன் கேட்டான். அவன் வருகின்ற வழியில் பல செங்கல் கோயில்களுக்குக் கருங்கல் திருப்பணி நடந்து கொண்டிருப்பதைப் பார்த்திருந்த படியால் இவ்விதம் கேட்டான்.

"இப்போது செங்கல் கோயில் தான். கருங்கல் திருப்பணி விரைவில் தொடங்கும் என்று கேள்வி. இந்தத் திருப்பணியை உடனே நடத்தவேண்டும் என்று பழையாறைப் பெரிய பிராட்டியார் விரும்புகிறாராம். ஆனால்..." என்று அந்த வாலிபன் தயங்கி நிறுத்தினான்.

"ஆனால் என்ன?..."



"பரம்பரையாகக் கேள்விப் பட்டதை யெல்லாம் சொல்வதில் என்ன பயன்? பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இதுவோ நாற்சந்தியும் கூடும் இடம். நம்மைச் சுற்றிலும் ஜனங்கள்..."

"இந்த மாதிரி இடத்திலே நின்றுதான் தைரியமாக எந்த ரகசியமும் பேசலாம். இந்தப் பெருங்கூட்டத்திலும் இரைச்சலிலும் நம்முடைய பேச்சு யார் காதிலும் விழாது."

"பேசுவதற்கு இரகசியம் என்ன இருக்கிறது?" என்றான் அந்த வாலிபன், வந்தியத்தேவனைக் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்த்து.

ஆகா! இந்தப் பிள்ளை நல்ல புத்திசாலி! இவனுடன் சிநேகம் செய்து கொள்வதில் லாபம் உண்டு! பல விஷயங்களை அறியலாம்! ஆனால் இவன் மனதில் வீண் சந்தேகத்தை உண்டாக்கக் கூடாது. — இவ்விதம் வந்தியத்தேவன் எண்ணி, "ஆமாம்; இரகசியம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லைதான். போனால் போகட்டும், தம்பி! இரவு எங்கேயாவது நான் நிம்மதியாகத் தூங்க வேண்டும். வெகுதூரம் பிரயாணம் செய்து மிகவும் களைப்படைந்திருக்கிறேன். எங்கே தங்கலாம்? ஒரு நல்ல விடுதிக்கு வழி காட்டி எனக்கு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

"இந்த நகரில் தங்குவதற்கு இடங்களுக்கு என்ன குறைவு? சத்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அயல் நாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கென்று ஏற்பட்ட இராஜாங்க விடுதிகளும் இருக்கின்றன. ஆனால், உங்களுக்கு இஷ்டமாயிருந்தால்,......"

"தம்பி! உன் பெயர் என்ன?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அமுதன்; சேந்தன் அமுதன்"

"அடாடா! எவ்வளவு நல்ல பெயர்? கேட்கும்போதே என் நாவில் அமுது ஊறுகிறதே...எனக்கு இஷ்டமாயிருந்தால் உன்னுடைய வீட்டுக்கு வந்து தங்கலாம் என்றுதானே நீ சொல்லத் தொடங்கினாய்?"

"ஆமாம், அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"என்னிடம் மந்திரவித்தை இருக்கிறது. அதனால் தெரிந்து கொண்டேன். உன் வீடு எங்கே இருக்கிறது?"

"நகர எல்லையைத் தாண்டிக் கூப்பிடு தூரத்தில் எங்கள் பூந்தோட்டம் இருக்கிறது. தோட்டத்துக்குள்ளேயே எங்கள் வீடும் இருக்கிறது" என்றான் அமுதன்.

"ஆகா! அப்படியானால் உன் வீட்டுக்கு நான் வந்தே தீருவேன். இந்தப் பட்டணத்துச் சந்தடியில் என்னால் இன்றிரவைக் கழிக்க முடியாது. மேலும் உன்னைப் போன்ற உத்தமப் புதல்வனைப் பெற்ற உத்தமியைத் தரிசிக்க விரும்புகிறேன்."

"என்னைப் பெற்ற அன்னை உத்தமிதான்; ஆனால் துர்ப்பாக்கியசாலி..."

"அடாடா! ஏன் அவ்வாறு சொல்கிறாய்? ஒருவேளை உன் தந்தை......"

"என் தந்தை இறந்துதான் போனார். ஆனால் அது மட்டுமில்லை. என் தாய் பிறவியிலேயே துர்ப்பாக்கியசாலி. பார்த்தால் தெரிந்து கொள்வீர்கள். வாருங்கள் போகலாம்."

அரை நாழிகை நேரம் நடந்து அவர்கள் நகர்ப்புறத்துக்கு அப்பாலிருந்த பூந்தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இரவில் மலரும் பூக்களின் இனிய மணம் வந்தியத்தேவனுக்கு அபூர்வ சுகமயக்கத்தை உண்டாக்கியது. நகரத்தின் வீதிகளில் எழுந்த கோலாகல இரைச்சலும் சந்தடியும் அங்கே அவ்வளவாகக் கேட்கவில்லை.

பூந்தோட்டத்தின் மத்தியில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. பக்கத்தில் இரு குடிசைகள் இருந்தன. தோட்ட வேலையில் உதவி செய்த இரு குடும்பத்தார் அக்குடிசைகளில் இருந்தார்கள். அவர்களில் ஒருவனை அமுதன் அழைத்து வந்தியத்தேவனுடைய குதிரைக்குத் தீனி வைத்து மரத்தில் கட்டி வைக்கும்படி கூறினான்.

பிறகு, வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். அமுதனுடைய தாயாரைப் பார்த்ததும் வந்தியத்தேவனுக்கு அவளுடைய துர்ப்பாக்கியம் இந்த

மையது என்று தெரிந்து விட்டது. அந்த மூதாட்டி பேசும் சக்தியற்ற ஊமை. காதும் கேளாது என்று தெரிந்தது. ஆனால் அந்த மாதரசியின் முகத்தில் கருணையும் அன்பும் நிறைந்து ததும்பியதை வந்தியத்தேவன் கண்டான். கூரிய அறிவின் ஒளியும் அம்முகத்திலிருந்து வீசியது. பொதுவாக, ஏதாவது ஒரு அங்கத்தில் ஊனமுள்ளவர்கள் மற்றப்படி சிறந்த அறிவுக் கூர்மையுள்ளவர்களாக விளங்குவது சிருஷ்டி விசித்திரங்களில் ஒன்று அல்லவா?

அமுதன் சில சமிக்ஞைகள் செய்ததும் அந்த மூதாட்டி வந்திருப்பவன் அயல் தேசத்திலிருந்து வந்த விருந்தாளி என்று தெரிந்து கொண்டான். முகபாவத்தினாலேயே தன்னுடைய பரிவையும் வரவேற்பையும் தெரிவித்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் இலை போட்டு அந்த அம்மாள் உணவு பரிமாறினாள். முதலில் இடியாப்பமும் இனிப்பான தேங்காய்ப் பாலும் வந்தன. அந்தமாதிரி இனிய பலகாரத்தை வந்தியத்தேவன் தன் வாழ்நாளில் அருந்தியதில்லை. பத்துப் பன்னிரண்டு இடியாப்பமும், அரைப்படி தேங்காய்ப் பாலும் சாப்பிட்டான். பிறகு புளிக்கறியும் சோளமாப் பணியாரமும் வந்தன. அவற்றையும் ஒரு கை பார்த்தான். அப்படியும் அவன் பசி அடங்கவில்லை. கடைசியாக, காற்படி அரிசிச் சோறும் அரைப்படி தயிரும் நுங்கினான்! பிறகுதான் அவன் இலையிலிருந்து எழுந்தான்.

சாப்பிடும்போதே சில விஷயங்களை அமுதனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். தஞ்சைக் கோட்டைக்குள்ளே அப்போது சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் அவருடைய அரண்மனைப் பரிவாரங்களையும் தவிர, இன்னும் முக்கியமாக யார் யார் இருக்கிறார்கள் என்று விசாரித்தான்.

பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் இவர்களின் மாளிகைகளும் பரிவாரங்களும் அங்கு இருந்தன. தன பொக்கிஷமும், தானிய பண்டாரம் இரண்டும் கோட்டைக்குள் இருந்தபடியால் அவற்றைப் பரிபாலிக்கும் அதிகாரிகளும் கணக்கர்களும் இருந்தார்கள். சுந்தர சோழரின் அந்தரங்க நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் பாத்திரரான அநிருத்த பிரமராயர் என்னும் அமைச்சரும் திருமந்திர ஓலை நாயகரும் கோட்டைக்குள்ளேதான் வசித்தார்கள். மற்றும் சின்னப் பழுவேட்டரையரின் தலைமையில் தஞ்சைக் கோட்டையைக் காவல் புரிந்த வீரர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் அங்கேயே தங்கியிருந்தார்கள். பொன் வெள்ளி நகை வியாபாரிகளும், நவரத்தின வியாபாரிகளும், பொன்னாசாரிகளும் கோட்டைக்குள் இடம் அளிக்கப்பட்டிருந்தார்கள். பெரிய பழுவேட்டரையரின் கீழ் வரி விதிக்கும் வேலை பார்த்த நூற்றுக்கணக்கான அலுவலாளர் இருந்தனர். துர்க்கையம்மன் கோவில் கோட்டைக்குள்ளேதான் ஒரு மூலையில் இருந்தது. கோவில் பூசாரிகளும் பணிவிடையாளரும் கணிகையரும் கோவிலுக்கு அருகில் குடியிருந்தார்கள்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட பிறகு "அமைச்சர்கள் அனைவரும் தற்சமயம் கோட்டையில் இருக்கிறார்களா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"எல்லாரும் எப்படி இருப்பார்கள்? பற்பல காரியமாக வெளியிலே போய்க் கொண்டும் வந்து கொண்டுந்தான் இருப்பார்கள். அநிருத்த பிரமராயர் சில காலமாகவே நகரில் இல்லை. அவர் சேரநாடு சென்றிருப்பதாகக் கேள்வி. பெரிய பழுவேட்டரையர் நாலு தினங்களுக்கு முன்னால் வெளியே சென்றார். கொள்ளிடத்துக்கு வடக்கே நடு நாட்டுக்குச் சென்றதாகக் கேள்வி."

"போனவர் ஒரு வேளை திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? உனக்குத் தெரியாதாக்கும்!"

"இன்று சாயங்காலம் பழுவூர் இளைய ராணியின் பல்லக்கு வந்தது. கோட்டை வாசலில் நானே பார்த்தேன். ஆனால் பழுவேட்டரையர் வரவில்லை. ஒரு வேளை வழியில் எங்கேனும் தங்கி விட்டு நாளை வரக்கூடும்."

"தம்பி! இளவரசர் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்குள்ளேதான் தங்கியிருக்கிறார்?"

"ஆமாம்; பழுவேட்டரையர் அரண்மனைக்குப் பக்கத்தில் மதுராந்தகரின் மாளிகை இருக்கிறது. சின்னப்

பழுவேட்டரையரின் திருமகளை மணம் புரிந்த மருகர் அல்லவா?"

"ஓஹோ! அதுவும் அப்படியா? எனக்கு இதுவரையில் தெரியாதே?"

"ரொம்பப் பேருக்குத் தெரியாது தான். சக்கரவர்த்தியின் தேக அசௌகரியத்தை முன்னிட்டுத் திருமணத்தைக் கோலாகலமாக நடத்தவில்லை."

"நல்லது; மதுராந்தகத் தேவர் இப்போது கோட்டைக்குள்ளே தானே இருக்கிறார்?"

"கோட்டைக்குள்ளேதான் இருக்க வேண்டும். ஆனால் மதுராந்தகத் தேவர் சாதாரணமாக வெளியில் வருவதில்லை. மக்கள் அவரைப் பார்க்க முடிகிறதும் இல்லை. சிவ பக்தியில் ஈடுபட்டுப் பெரும்பாலும் யோகத்திலும் தியானத்திலும் பூஜையிலும் காலங் கழிப்பதாகக் கேள்வி."

"ஆனாலும் இத்தனை நாளைக்குப் பிறகு கலியாணம் செய்து கொண்டிருக்கிறாரே?"

"ஆமாம்; அது கொஞ்சம் வியப்பான காரியந்தான். கலியாணத்துக்குப் பிறகு மாப்பிள்ளைத் தேவரின் மனமே மாறிப் போயிருப்பதாயும் சொல்கிறார்கள். நமக்கென்ன அதைப் பற்றி? பெரிய இடத்துப் பேச்சுப் பேசாமலிருப்பதே நல்லது..."

சேந்தன் அமுதனிடம் இன்னும் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் வந்தியத் தேவனுக்கு இருந்தது. ஆனால் அதிகமாக ஏதேனும் கேட்டுச் சந்தேகத்தைக் கிளப்பிவிட அவன் விரும்பவில்லை. இத்தகைய சாதுப் பிள்ளையின் சிநேகம் தனக்குப் பேருதவியாயிருக்கும். தஞ்சையில் தங்க இம்மாதிரி ஒரு வீடு அகப்பட்டதும் தன்னுடைய அதிர்ஷ்டந்தான். அதையெல்லாம் கெடுத்துக் கொள்வானேன்? மேலும், நீண்ட பிரயாணக் களைப்புடன் முதல் நாள் இரவு கண் விழித்ததும் சேர்ந்து கொண்டது. கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. சேந்தன் அமுதன் அவனுடைய நிலையை அறிந்து விரைவில் படுக்கை போட்டுக் கொடுத்தான்.

தூக்க மயக்கத்தில் கடைசியாக வந்தியத் தேவனுடைய மனதில் பழுவூர் இளைய ராணியின் திருமுகம் வந்தது. அப்பப்பா! என்ன அழகு! என்ன ஜொலிப்பு! அந்த மாய மோகன வடிவத்தைத் திடீரென்று அவன் பார்த்ததும் அடியோடு செயல் இழந்து கண் கொட்டாமல் திகைத்து நின்றது இன்னொரு அனுபவத்தை அவனுக்கு நினைவூட்டியது. சிறு பிராயத்தில் ஒரு சமயம் காட்டு வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று படமெடுத்து ஆடிய பாம்பு ஒன்று அவன் முன் எதிர்ப்பட்டது. அதன் அழகே அழகு! கவர்ச்சியே கவர்ச்சி! வந்தியத் தேவனால் பாம்பின் படத்திலிருந்து கண்ணை அகற்றவே முடியவில்லை. கண் கொட்டவும் முடியவில்லை. பார்த்தது பார்த்தபடி நின்றான். பாம்பும் ஆடிக் கொண்டேயிருந்தது! பாம்பு ஆடிய போது அதற்கிணங்க, இவன் உடம்பும் ஆடியது.—இதன் முடிவு என்ன ஆகியிருக்குமோ தெரியாது. திடீரென்று ஒரு கீரிப்பிள்ளை வந்து பாம்பின் மீது பாய்ந்தது. இரண்டும் துவந்த யுத்தம் தொடங்கின. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு வந்தியத் தேவன் ஒரே ஓட்டமாக ஓடி வந்து விட்டான்!......

சீச்சீ! என்ன உதாரணம்! இந்தப் புவன மோகினியான சுந்தராங்கியைப் படமெடுத்த பாம்புக்கா ஒப்பிடுவது? இவளுடைய பால்வடியும் முகத்தை ஒரு தடவை பார்த்தாலும் பசி தீர்ந்து விடுமே?...நாளைக்கு அவளை மறுபடி காணப் போகிறோமல்லவா! அவளுடைய குரலிலேதான் என்ன மதுரம்! இவள் ஒரு அபூர்வமான அழகிதான். ஆனால் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரசலாற்றங் கரையிலும் பார்த்த அந்த இன்னொரு பெண்?... அவளுடைய முகத்திலும் காந்தி ஒளி விட்டது! அழகு சுடர் விட்டது!... இரண்டு முகங்களும் சுந்தர முகங்களாயினும் அவற்றுக்குள் எத்தனை வேற்றுமை! அதில் கம்பீரமும் பெருந்தன்மையும்; இதில் மோகனமும் கவர்ச்சியும்.... இப்படி அவன் உள்ளம் அந்த இரு மங்கையரின் முகங்களையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்த போது, மற்றொரு மங்கை வந்து குறுக்கிட்டாள். சர்வாதிகாரக் கொடுங்கோல் அரசியான நித்திரா தேவி வந்தியத்தேவனைப் பரிபூரணமாக ஆட் கொண்டாள். (தொடரும்)

இலங்கை இந்தியர்களின் எதிர்காலம்

ரஜனி

—கொழும்பு, டிஸம்பர் 22.

இந்திய வர்த்தக ஸ்தாபனங்களிலுள்ள சிப்பந்திகளை இலங்கையர் மயமாக்குவதைப் பற்றி ராஜாங்க மந்திரி ஸ்ரீ ஏ. குணசிங்காவுடன் இந்திய வர்த்தகச் சங்கம் இன்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னால் இந்தியர், பாகிஸ்தானியர் வர்த்தகச் சங்கங்களின் தூதுகோஷ்டியொன்று ஸ்ரீ குணசிங்காவை அவருடைய அழைப்பின் மீது பேட்டி கண்டு இலங்கையர் மயமாக்கும் திட்டத்தைப் பற்றி விவாதித்தது. அப்பொழுது ஒரு நகல் ஒப்பந்தம் உருவாகியது. அந்த ஒப்பந்தத்தின் முக்கியமான ஷரத்துகள்: (1) 1948ம் வருஷ ஜூலை மீ முதல் தேதிக்குப் பிறகு வேலைக்கு அமர்த்திக் கொண்ட இந்தியர்களை உடனே வேலை நீக்கம் செய்யவேண்டும். (2) இனிமேல் புதிதாக இந்தியர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது. (3) தொழில் ஸ்தாபனங்களுடைய முதலாளிமார்களின் பிள்ளைகள் தற்சமயம் இலங்கையில் வசிப்பவர்களாயும், பெற்றோர்களின் ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களாயுமிருந்தால் அவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டியதில்லை. நம்பிக்கையான சில பதவிகளுக்கு மட்டும் இலங்கையரல்லாதார்களை நியமித்துக் கொள்ள ஆட்சேபனையில்லை. இதுதான் முக்கிய ஷரத்துகள்.

இந்த நகல் உடன்படிக்கையில் இந்திய, பாகிஸ்தானிகள் தூதுகோஷ்டி உடனே ஒப்பமிடாமல் தங்கள் தங்கள் சங்கங்களின் பொதுச் சபைகளைக் கலந்துகொண்டு பிறகு ஒப்பமிடுவதாகச் சொல்லியது. இதன்படி சென்ற சனிக்கிழமை நடந்த இந்திய வர்த்தகச் சங்க பொதுச் சபைக் கூட்டத்தில் ஒரு நீண்ட விவாதம் நடந்தது.

சேனநாயகா தர்பார்

1948-ம் வருஷம் — ஜூலை முதல் தேதிக்குப் பிறகு வேலையில் அமர்த்தப்பட்ட இந்தியர்கள் எல்லோரையும் வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற ஷரத்து எவ்வளவு பாரபட்சமானதென்பதை இங்குள்ள ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனியின் கிளைக் காரியதரிசி ஸ்ரீ ஸி. ஆர். ராஜன் எடுத்துச் சொன்னார். இந்தத் தேதிக்குப் பிறகு வேலைக்கு எடுத்துக் கொண்டவர்களை வேலை நீக்கம் செய்யச் சம்மதிப்பதானால் இதற்கு முன்பு வேலைக்கு அமர்த்தப் பட்டவர்களுக்காவது ஒரு பாதுகாப்பு ஏற்படவேண்டும். இமிகிரேஷன் சட்டப்படி இலங்கையில் குறைந்தது ஐந்து வருஷ காலம் வசித்தவர்களுக்கு மட்டுமே வாச பர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன. 1944-ம் வருஷம் நவம்பர் மாதத்துக்குப் பிறகு இலங்கைக்கு வந்தவர்கள் ஒரு முறை இந்தியாவுக்குப் போனால் இலங்கைக்குத் திரும்பிவர முடியாது. "இவர்கள் இலங்கையிலேயே இருக்கட்டுமே! யார் வேண்டாமென்றார்கள். இந்தியாவுக்குப் போனால் தானே இலங்கைக்குத் திரும்பக்கூடாதென்கிறோம்?" என்று நியாயம் கற்பிக்கிறது ஈவிரக்கமற்ற சேனநாயகா தர்பார். இந்தியாவை எட்டிப் பார்க்காமல் அங்கு விட்டுவந்த மனைவி, குழந்தைகளையாவது இலங்கைக்கே அழைத்து வந்து விடலாமென்றால் அதற்கும் அரசாங்கம் ஒரு நாசுக்கான முட்டுக்கட்டை போட்டிருக்கிறது. கணவனுக்கு வாச பர்மிட்டு இருந்தால்தான் மனைவிக்கும் கொடுப்பதென்று ஒரு சட்டம் இருந்து வருகிறது. இதனால் 1944-ம் வருஷ நவம்பருக்குப் பிறகு வந்தவர்களுக்கு வாச பர்மிட்டுகள் பெற உரிமை கிடையாதாகையால் வேலையை விட்டுப்போக மனமில்லாதவர்கள் இந்தியாவில் விட்ட மனைவி குழந்தைகளைப் பார்க்க முடியாமலும், இந்தியாவிலிருப்பவர்கள் இலங்கைக்கே வந்துவிட முடியாமலும் தனியாய்த் தவிக்கிறார்கள்.

பணக்காரர்களுக்கு வெற்றி

இதை இந்திய தூதுகோஷ்டி மந்திரியிடம் சுட்டிக் காட்டியது. "1948ம் வருட ஜூலைக்குப் பிறகு வேலைக்கு அமர்த்திய இந்தியர்களை உடனே டிஸ்மிஸ் செய்து விடுகிறோம். ஆனால் இந்தத் தேதிக்கு முன்பு வேலைக்கு வந்தவர்களெல்லோருக்கும் இமிகிரேஷன் கமிஷனரிடம் சொல்லி வாச பர்மிட் வாங்கித் தர வேண்டும்!" என்று இந்திய தூதுகோஷ்டி கேட்டது. இமிகிரேஷன் இலாகா வேறொரு மந்திரியின் கீழுள்ள இலாகாவாகையால் அதில் தாம் தலையிடுவதற்கில்லை யென்று மந்திரி முதலில் சொன்னார். மேலும் வற்புறுத்தப்

படியே இதைப் பற்றி யோசித்து முடிந்ததைச் செய்வதாகக் கூறினார். தவிர இவ் விஷயத்தில் குணசிங்கா உறுதிமொழி யொன்றும் கூறவில்லை. நேருவுக்குப் பிரதமர் சேனநாயகா எழுத்தில் எழுதிக் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறந்து விட்ட பொழுது பொறுப்பின்றிப் பேசுவாரென்று பெயரெடுத்த குணசிங்காவின் வீண் வார்த்தையில் நம்பிக்கை வைப்பது புத்திசாலித்தனமில்லை யென்பதைச் சென்ற சனிக்கிழமை நடந்த இந்திய வர்த்தகச் சங்கக் கூட்டத்தில் ஸ்ரீ ராஜன் எடுத்துக் கூறி விளாசினார். மந்திரியிடமிருந்து எவ்விதச் சலுகையையும் பதிலுக்குப் பெறாமல் நூற்றுக் கணக்கான இந்தியச் சிப்பந்திகளை வேலை நீக்கம் செய்ய எதற்காகச் சம்மதிக்க வேண்டும்? இலங்கை இந்திய காங்கிரஸ் சமர்ப்பித்த நியாயமான கோரிக்கைகளை யெல்லாம் பிரதம மந்திரி நிராகரித்து விட்டார். இந்தியர் உரிமைக்காக இந்திய காங்கிரஸ் போராடிக் கொண்டிருக்கையில் அதற்கும் இந்தியச் சமூகத்துக்கும் துரோகம் செய்வதைப் போன்ற ஒப்பந்தத்தில் கை எழுத்திட என்ன அவசியமும் அவசரமும் வந்துவிட்டது? "நம்முடைய வர்த்தகச் சங்கமே நம்மைக் காட்டிக் கொடுத்துச் சதி செய்து விட்டது" என்று எதிர்காலச் சந்ததியினர் சபிக்காமலிருக்க வேண்டும். இந்தத் தொனியில் ஸ்ரீ ராஜன் பேசினார். ஆனால் அரசாங்கத்தினிடம் நல்ல பெயரெடுக்க வேண்டுமென்று ஒரு காலில் நின்ற பணக்காரக் குழுவின் காதில் இது விழவில்லை. இலங்கையிலுள்ள சகல இந்திய வியாபாரிகளையும் கட்டுப் படுத்தக் கூடிய முறையில் ஒரு தலைப் பட்சமான ஒப்பந்தத்தில் இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர் இன்று கை ஒப்பமிட்டு விட்டார். இது அரசாங்கத்துக்கும் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்து நிற்கும் பணக்கார இந்திய வர்த்தகப் பிரமுகர்களுக்கும் ஒரு பெரிய வெற்றி. ஏழை எளிய சிப்பந்திகளுக்கு வயிற்றலடி.

ஸ்ரீ தொண்டமான் திரும்பினார்

ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த இலங்கைப் பார்லிமெண்ட் சபை இந்திய அங்கத்தினர் ஸ்ரீ எஸ். தொண்டமான் இப்பொழுது இலங்கைக்குத் திரும்பி விட்டார். மேனாடுகளில் தொழிலாளர் நிலைமை மிகமிக முன்னேற்ற மடைந்திருக்கிறதென்றும் விவசாயத்தில் மிகவும் முற்போக்கான பல விஞ்ஞானக் கருவிகளை மேனாட்டவர்கள் உபயோகிக்கின்றனர் என்பதையும் அவர் சொன்னார். முக்கியமாக விவசாயத் தொழிலில் அவர் அரிய பல ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வந்திருக்கிறார். கொழும்பில் இறங்கித் தமது சொந்த ஊரான கம்பொளைக்குச் செல்லும்வரை வழிநெடுகத் தொழிலாளர்கள் நூற்றுக் கணக்கில் கூடியிருந்து அவருக்கு உற்சாகமான நல்வரவு கூறினார்கள். அவர் மேல்நாடுகளுக்குச் சென்றிருந்தபடியினால் அவர் தலைமையில் நிறுவப்பட்டிருந்த காந்திஜி ஞாபகார்த்த ஸ்தாபன நிதிக் கமிட்டியும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அந்தக் கமிட்டி இனித் தீவிரமாக வேலையில் இறங்கலாம்.

பெங்களூர் நாகரத்தினம்மாள்

ஸ்ரீ துரையப்ப பாகவதர்

ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் இப்படிப் பெயரும் புகழும் அடைந்து சந்தோஷமாக இருந்து வரும்பொழுது அவருக்கு எதிர்பாராத ஒரு அபாயம் ஏற்பட்டது. அவருடைய உப்பைத் தின்றவர்களால் அவருடைய உயிருக்கே ஆபத்து உண்டாகும் போலிருந்தது. இந்தச் சமயத்தில் ஒரு நாள் தியாகப் பிரம்மம் கனவில் தோன்றி நாகரத்தினம்மாளுக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தைச் சொல்லி மறைந்தார்.

தர்ம சாதனத்திற்கான இந்தச் சரீரத்தைக் காப்பாற்றிய பிரபு தியாகப் பிரம்மம், பேரின்ப சாதனத்தையும் காட்டிக் கொடுக்க எண்ணி மற்றொரு நாள் கனவில் தோன்றினார். அன்று சமாதியிலிருந்து அதைப் பிளந்து கொண்டு எழுந்திருந்து அபயஹஸ்தம் அருளிக் காட்சியளித்தார். இதன் விவரம் புரியாத நாகரத்தினம்மாள் கனவு காணும் அவஸ்தையிலேயே, "நனிம்முடு உதயிஞ்செனு" என்ற சதாசிவ ராயரின் கிருதியைப் பாடி, கர்ப்பூர நீராஞ்சனமும் சமர்ப்பித்தாள். அந்த ரூபம் மறுபடியும் சமாதியிலேயே புகுந்து விட்டது. பக்தை நாகரத்தினம்மாள் கனவு கலைந்து எழுந்தவுடன் பரம ஆனந்தத்தை யடைந்து 'இந்த அடிமைக்குப் பகவான் கனவில் தோன்றி என்ன சொன்னார்' என்ற விவரத்தை யறிய முடியாமல் தவித்தார்.

மறுநாள் காலையில் மைசூர் ஆஸ்தான வித்துவான் பிடாரம் கிருஷ்ணப்பா அவர்களிடமிருந்து நாகரத்தினம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் திருவையாற்றிலுள்ள சத்குரு சமாதியின் தரிசனத்திற்குச் சென்றிருந்ததாகவும், அங்கு சமாதியைச் சுற்றிலுமுள்ள நிலைமை மிகவும் கேவலமாயும் பார்ப்பதற்கு அருவருப்பாயும் மனதிற்குச் சங்கடத்தையுண்டு பண்ணுவதாயும் இருந்ததால் இதற்கு ஏதாவது விமோசனம் உண்டா! என்ற சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில், நாகரத்தினத்தம்மாளின் ஞாபகம் வந்தபடியால் இந்தக் கடிதம் எழுத நேர்ந்ததென்றும் அந்தச் சமாதி யிடத்தைச் செப்பனிட்டு ஆலயம் அமைத்தால் குரு கடாக்ஷம் உண்டாவதுடன், மைசூர் சமஸ்தானத்திற்கே பெருமை என்றும் எழுதியிருந்தார். இதைப் பார்த்த நாகரத்தினம்மாளுக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. தான் கண்ட கனவின் மர்மமும் அதன் மூலம் தமக்கேற்பட்ட குருவின் ஆணையும் விளங்கிவிட்டபடியால் மற்ற விவரங்களை விசாரித்தறியச் சென்னை பக்தி மார்க்கப் பிரசங்க சபையின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் முனுசாமி நாயுடு அவர்களின் வீட்டுக்கு விரைந்தார்.

அச்சமயம் தஞ்சாவூர் பிரம்மஸ்ரீ நாகராஜ பாகவதரவர்கள் நாயுடு அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். எல்லா விஷயங்களையும் அவர்களிடம் பரபரப்புடன் தெரிவித்து, அவர்கள் சம்மதத்தையும் பெற்று நாகரத்தினம்மாள் அவ்விருவருடனும் அன்று இரவே திருவையாற்றுக்குப் புறப்பட்டார்கள். இது 1921ம் வருஷம் அக்டோபர் மாதம் நடந்தது. அன்று குருவாரம். காலையிலேயே திருவாதியில் சத்குருவின் அதிஷ்டான தரிசனம் செய்து ஆனந்தமடைந்தனர். ஆனால் அதிஷ்டானத்தை அணுக முடியாமல் கல்லும் முள்ளும் குத்தும் போது நாகரத்தின அம்மாளின் இதயம் படாத பாடு பட்டது. அதே கணம் ஆலயம் அமைக்க வேண்டியதற்கு வேண்டிய பூர்வாங்க யோசனைகளையும் செய்து முடித்து, சில அன்பர்களிடம் முன் பணத்தையும் கொடுத்து விட்டுச் சென்னைக்குத் திரும்பினார்கள்.

நல்ல காரியங்களுக்கு எப்போதுமே இடைஞ்சல்கள் ஏற்படுவது போல இதற்கும் சொல்ல முடியாத பல இடையூறுகள் ஏற்பட்டன.

"முன்பின் அறியாத எங்கிருந்தோ வந்த ஸ்திரீக்கு, சுவாமிகளின் அதிஷ்டானத்தை நெருங்க என்ன உரிமை! ஆதியில் பிருந்தாவனப் பிரதிஷ்டை செய்த சுவாமிகளின் சிஷ்யர்கள் இந்த அம்மாளுக்கு ஏதாவது அனுமதி கொடுத்திருக்கிறார்களா!" இப்படியெல்லாம் வீணான வம்புப் பேச்சில் பொழுதைப் போக்கினார்கள் சிலர். ஒரு நல்ல காரியத்தைத் தன்னால் சாதிக்க முடியாவிட்டாலும் பிறர் அதில் சிரத்தையாய் ஈடு பட்டிருப்பதைக் கண்டு சகியாத பிரகிருதிகள் பலர் உண்டல்லவா! இவர்கள் நிரம்பிய இந்த உலகில், ஒன்றையும் லட்சியம் செய்யாமல், உள்ளன்போடு உதவும் சில பக்தியான்களின் ஒத்துழைப்பு, சத்குருவின் ஆணை, வைராக்ய சீலம், தியாக உணர்ச்சி ஆகியவற்றின் பலத்தாலும் இயற்கையில் அமைந்த ஸ்திரீ சாகஸத்தினாலும் முன் வைத்த காலைப் பின் வாங்காமல் என்ன செலவானாலும் எப்பாடு பட்டாலும், இந்தக் கைங்கர்யத்தை முடிப்பது என்ற திடமனதுடன் திருப்பணி வேலைகளை நடத்தி வந்தார் நாகரத்தினம்மாள்.

சத்குருவின் கடாட்சத்தால் மகா கும்பாபிஷேக தினமும் நெருங்கிக் கொண்டிருந்தது. அதை யுத்தேசித்துச் சென்னை, கோகலே ஹாலில் நாகரத்தினம்மாள் ஒரு சங்கீதக் கச்சேரி செய்தார். அதில் கிடைத்த திரவியத்தைக் கொண்டு 1925-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி ஆலய விக்கிரகப் பிரதிஷ்டையும் அதிஷ்டான கும்பாபிஷேகமும் நடைபெற்றன. சத்குருவின் ஆணையும் நிறைவேறிற்று. கும்பாபிஷேகம் நடப்பதற்கு முன், அதிஷ்டானத்தில், அபிஷேக ஆராதனை அலங்காரங்களுக்கு ஏற்ற உருவம் சிவலிங்கமா! ராம விக்கிரகமா! அல்லது யதீந்திர ஸ்வரூபமா! என்ற சந்தேகம் உண்டாயிற்று. சரியான முடிவு ஏற்படாமல் பலர் தடுத்ததால் சத்குருவின் சந்நிதானத்தில் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்துப் பலர் முன்னிலையில் கிடைக்கும் ஆணைப்படி நடப்போம் என்று நாகரத்தினம்மாள் எண்ணினார். அப்படியே பலர் முன்னிலையில் கிடைத்த சீட்டின் தீர்மானமே சத்குருவின் அனுமதி என்று சிரமேற் கொண்டு, யதீந்திர உருவத்தையே பிரதிஷ்டை


செய்து முடித்தார். இதைப் பற்றிய ஆட்சேபணைகள் அக்காலத்தில் அதிகம் எழவில்லை. என்றாலும் காலம் செல்லச் செல்ல ஆட்சேபணைகளும் அனாவசியமான கற்பனைகளும் எழும்பின. இதற்கு முக்கிய காரணம் இப்பேர்ப்பட்ட பிரகிருதிகள் கனவில்கூட எதிர்பாராத வண்ணம் கட்சிகள் ஒன்றுபட்டு அதிஷ்டான சந்நிதானத்திலேயே சிறந்த முறையில் இந்த உற்சவம் பிரமாதமாக நடக்க ஆரம்பித்ததுதான்.

ஒரு சிலர் "யதீந்திர விக்கிரகத்தை எடுத்து விட்டுத் துளசிச் செடியை வைத்து வளர்க்க வேண்டும். அது வளருவதற்குச் சௌகர்யமாக அதிஷ்டான பிருந்தாவனத்தின் மேல் கோபுரத்தை இடித்துவிட வேண்டும்" என்றெல்லாம் கிளர்ச்சி செய்தனர். இப்படியாக ஸ்ரீ தியாகப்பிரம்ம மஹோத்சவம் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து நடந்து வந்தது. திருவையாற்றில் பெரிய கோஷ்டியார் உற்சவத்தை பிடில் வித்வான் கோவிந்தசாமிப் பிள்ளை முன்னின்று நடத்தி வந்தார். சின்ன கோஷ்டியாரின் உற்சவத்தை, குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், பல்லடம் சஞ்சீவிராவ், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் போன்ற வித்துவான்கள் நடத்தி வந்தனர். அந்த இரண்டு கோஷ்டியாரும் சிற்சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு உற்சவத்தை நடத்தி வந்தபடியால், அந்த இரண்டு கோஷ்டியிலும் ஸ்ரீமதி பங்களூர் நாகரத்தினம்மாளுக்கு கச்சேரி செய்யும் வசதி கிடைக்கவில்லை. ஆகவே தானும் தம்மைப் போன்ற இதர வித்வாம்சினிகளும் கைங்கரியம் செய்ய வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து அவர், 1929-ம் வருஷத்தில் அதிஷ்டானத்திற்கு மேற்புறம் உள்ள இடத்தில் கொட்டகை அமைத்துத் தனிமையில் ஓர் உற்சவத்தை ஆரம்பித்தார். பெண் வித்வான்களைத் தவிர வேறு சில வித்துவான்களும் அந்த உற்சவத்தில் கைங்கர்யம் செய்ய முன் வந்தனர். இப்படியாக மூன்று கோஷ்டியாகப் பிரிந்து நடந்து வந்தது. ஸ்ரீ தியாகப்பிரம்ம அதிஷ்டான ஆலய விஷயமாக ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்ததுடன், நித்யபடி பூஜையும் குருவாரம், பகுள பஞ்சமி போன்ற தினங்களில் விசேஷ பூஜையும், வருஷந்தோறும் ஆராதனை மஹோத்சவமும் நடந்து வர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் அநேகமாயிர ரூபாய்கள் செலவழிந்தன. என்றாலும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் சத்குரு விஷயத்தில் அர்ப்பணம் செய்ய எப்போதும் தயாரா யிருக்கும் நாகரத்தினம்மாள் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் நடத்தி வந்தார்.

இப்படியாக ஸ்ரீமதி நாகரத்தினம்மாளின் புகழ் இந்தியா முழுவதும் பரவிற்று. 1929-ம் வருஷத்தில் சென்னையில் சியாமசுந்தர சக்கரவர்த்தி அவர்களின் தலைமையில் நடந்த "அகில இந்திய சநாதன மகாநாட்டில்" கலந்து கொண்டார். சில சமஸ்கிருத சுலோகங்களைப் பாடி இவர் தெய்வ வணக்கஞ் செய்தபின் மகாநாடு ஆரம்பமாயிற்று. தென்னிந்திய ஸ்திரீ சமூகத்தின் பிரதிநிதியாக வந்திருந்த நாகரத்தினம்மாளின் சமஸ்கிருத சங்கீத ஞானத்தைப் புகழ்ந்து பாபு நரேந்திரநாத் சென் பேசினார்.

சத்குருவின் சேவையில் ஈடுபட்டிருந்த நாகரத்தினம்மாள் 1935-ம் வருஷத்திற்குள்ளாக அதிஷ்டானத்திற்குக் கிழ்புறமுள்ள நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாக விலைக்கு வாங்கித் தென்னை, பலா, கமுகு, வாழை, மா, தேக்கு முதலிய மரங்களைப் பயிரிட்டு அதிஷ்டானத்திற்குப் போகும் வழியைச் செப்பனிட்டு பக்தகோடிகளின் உள்ளங்களைக் கவர்ந்ததுடன் ஸ்ரீ தியாகராஜ ஆஸ்ரமத்திற்குச் சோலையை உண்டாக்கி அதிஷ்டான சந்நிதானத்திலேயே தம்முடைய உற்சவத்தை நடத்தி வந்தபடியால் மற்ற இரண்டு கட்சியாரும் ஏகோபித்து ஒரே உற்சவமாய் ஸ்வாமிகளின் சந்நிதானத்தில் கொண்டாட வேண்டும் என்பது அந்தச் சபையின் பிரார்த்தனை.


1931-ல் பிடில் கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் காலமானதிலிருந்து பெரிய கோஷ்டியின் பலமும், மாங்குடி சிதம்பர பாகவதரவர்கள் காலமான பிறகு சின்ன கோஷ்டியாரின் பலமும் குறைந்தது. அந்தக் காலத்தில் சங்கீத உலக கோஷ்டியில் பிரக்யாதியுடன் விளங்க ஆரம்பித்த முசிரி சுப்பிரமணிய அய்யர், செம்மங்குடி சீனிவாச ஐயர், பாலக்காடு மணி அய்யர் போன்ற வித்துவான்கள், இரண்டு கோஷ்டிகளும் ஒன்றுபடாத வரையில் தாங்கள் உற்சவத்திற்கு வர இயலாது என்று தெரிவித்து விட்டார்கள். ஆகவே இரண்டு கட்சிகளும் கலவரத்திருப்பதைக் கவனித்து வந்த ரசிகர்களில் பிரமுகர்களான சிலர், பங்களூர் நாகரத்தினம்மாள் அபிப்பிராயப்படி எல்லா கோஷ்டிகளையும் ஒன்று சேர்த்து, அதிஷ்டான சந்நிதானத்தில் ஒரே உற்சவமாய் நடத்துவதற்கு ஏற்ற தருணம் சமீபித்திருப்பதை



(புருஷனும் மனைவியும் ஊருக்குப் போயிருந்து திரும்பி வந்தார்கள்.)

மனைவி:—ஐயையோ! எவனோ திருடன் பூட்டை உடைத்து உள்ளே புகுந்திருக்கிறானே! கதவு திறந்திருக்கிறதே!

புருஷன்:—ரொம்ப சௌகர்யமாய்ப் போச்சு! ஊரிலே விட்டுச் சாவியை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டோமே என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்!



சினிமா டிக்கட் கொடுக்குமிடத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் மூன்று தரம் தமது சில்லறையை எண்ணினார். பொறுமை இழந்த டிக்கட் கொடுப்பவர்:— என்ன ஸார்! கடைசியாகச் சில்லறை சரியாயிருக்கிறதைப் பார்த்துத் திருப்தியடைந்தீர்களா?

வாங்குபவர் (கோபத்துடன்):— ஆமாம்! சில்லறை காலணாக்கூட அதிகமாயிராமல் சரியாகவே இருந்து தொலைக்கிறது!

உணர்த்தார்கள். அவர்களில் முக்கியமான இருவரின் பெயர்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். திருவையாறு வக்கீல் சி. வி. ராஜகோபாலாச்சாரியாரும், தஞ்சை பூவராக ஐயங்காரும் 1939ம் வருஷத்திய உற்சவம் பூர்த்தியடைந்தவுடனேயே ஒரு பதினைந்து பேர் கொண்ட கமிட்டியைத் தேர்ந்தெடுத்து உற்சவத்தை நடத்த முயன்றார்கள். அதுவும் சரியான பலன் தரவில்லை. பிறகு திருவையாறு வக்கீல் அவர்கள் முயற்சியாலும் குலமங்கலம் வைத்தியநாத பாகவதரின் சம்மதத்தினாலும் ஒரு முடிவுக்கு வந்து கூட்டாக உற்சவத்தை நடத்த முயன்றார்கள். அந்தச் சமயம் சென்னை பிரதம மந்திரியாயிருந்த ராஜாஜி தஞ்சைக்கு வந்திருந்தார்கள். அவர்களை ஸ்ரீ பூவராக ஐயங்கார் அழைத்து வந்து, ஒன்றுபட்ட உற்சவத்திற்குத் தலைமை வகித்து ஆரம்பித்து வைக்கக் கேட்டுக் கொண்டார். அந்த சமயம் நாகரத்தினம்மாளின் பக்தி விசேஷத்தையும் சேவையையும் பாராட்டி அவர் கூறிய ஆசி மொழிகள், இன்றைக்கும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "அம்மாள்" என்ற சொல்லைத் தவிர "நாகரத்தினம்" என்ற பெயர் ஒரு முறையாவது அவர் பேச்சில் இடம் பெறவில்லை. அந்த மகான் இந்த வருஷத்திய உற்சவத்தையும் தலைமை வகித்து நடத்திக் கொடுக்கச் சம்மதித்து ஒப்புக் கொண்டிருப்பது நமது பாக்கியமே.

சங்கீத வித்தையால் தேடிய திரவியத்தை சங்கீத குருவுக்கே சமர்ப்பணம் செய்தார். குருநாதன் ஸந்நிதியிலேயே தொண்டு புரிந்து, எஞ்சிய நாட்களைக் கழிக்க எண்ணிச் சென்னையில் உள்ள வீட்டை விற்று விட்டுத் திருவையாற்றுக்கே சென்றுவிடத் தீர்மானித்தார். இந்தச் சமயம் குருநாதன் அருள் பிரபல சினிமா நடிகரான சித்தூர் நாகய்யா மனதில் புகுந்தது. தான் நடித்த "தியாகய்யா" படம் வெளிவருமுன் தியாகராஜஸ்வாமிகளின் கைங்கரியத்திற்கு சாஸ்வதமான ஒரு ஸமர்ப்பணம் செய்ய வேண்டுமென்று திருவையாறு வந்து, நாகரத்தினம்மாளைக் கலந்து ஆலோசித்தார். அதன் முடிவாய் இப்போது அந்தம்மாள் இருந்துவரும் "தியாகப்பிரம்ம நிலையம்" என்ற கட்டிடம் நாகய்யாவின் ஸமர்ப்பணம். ஸ்வாமிகள் தரிசனத்திற்காக வெளியூரிலிருந்து வரும் பக்தர்களுக்கு அதுவே ஆச்ரமமாயிருந்து வருகிறது.

நிற்க. நாகரத்தினம்மாள் திருவையாற்றிலேயே ஸ்திர வாஸமாய் இருக்க நிச்சயித்திருப்பதையறிந்த சென்னை வாஸிகள் அம்மாளுடைய அரிய சேவைகளைப் பாராட்ட ஒரு வித்வத் சபை கூட்டினார்கள். அதில் சென்னை வித்வன்மணிகளின் தலைவியாகிய விஜய நகரம் மகாராணி வித்யாவதி தேவி அவர்கள் அம்மாளுக்கு "தியாக ஸேவா ஸக்த" என்ற பட்டத்தையும் சம்மானப் பத்திரத்தையும் சமர்ப்பித்தார். கேஸரி அவர்களால் அம்மாளுக்குத் தங்கக் காப்பும் அளிக்கப்பட்டது.

திருவையாற்றுக்கு வந்த பிறகும் அம்மாள் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறார். தம் தலைமையில் "மாதர் சங்கம்" என்ற ஸ்தாபனத்தை நிறுவி தியாகப்ரம்ம நிலயத்தில் நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு குரு வாரத்திலும் மாதர்கள் கூடி ராமநாம பஜனை செய்வதுடன் ஸத்விஷயங்களையும் கேட்டு வருகிறார்கள். பிரதி பகுள பஞ்சமியிலும் ஸ்வாமிகளின் சமாதியில் அபிஷேக ஆராதனைகளை நடத்தி சங்கீத சமர்ப்பணமும் செய்யப்பட்டு வருகிறது. வெளியூர்களிலிருந்து அடிக்கடி பக்தர்களும் ரஸிகர்களும் அதிஷ்டான தரிசனத்திற்காக வந்து கொண்டிருப்பதால், சமாதியிலும் தியாகப் பிரம்ம நிலயத்திலும் நித்தியோத்ஸவ, நித்தியமங்கள, நித்தியானந்தமே அனுபவமாயிருந்து வருகிறது.

இப்படியாக உலக ரீதியில் ஏழையாய், உத்தம அருளில் செல்வியாய், சபரி ஆச்ரமம் அமைத்து சத்குருவின் பாதத்தை நாடித் தாரக நாமத்தையே பஜித்து வரும் வைராக்ய சீலைக்கு உலகப் பற்றுகள் நிவர்த்தியாகி விட்டதாகச் சொல்வதற்கில்லை. தமக்கு ஏற்பட்டிருக்கும் சில உன்னத லக்ஷியங்கள் நிறைவேற வேண்டும் என்ற அவா இருந்து வருகிறது. அந்த அவா தம்முடைய ஜீவிய காலத்திலேயே பூர்த்தியாக வேண்டும் என்று அவர் அனவரதமும் குருநாதனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்.

'சாந்திநிகேதனம்' போல, இந்தத் தியாகராஜ ஆச்ரமும் சங்கீதக் கலையை வளர்க்கத் தகுந்த சூழ்நிலையையுடையது. தியாகப்பிரம்மம் வாழ்க்கையை நடத்தி சித்தியடைந்த திருவையாற்றில் அவர் பெயரால் ஒரு சங்கீத பாடசாலை, குருகுல வாசம், சத் சபா மண்டபம் ஆகியவை வெகு சீக்கிரம் ஏற்படவேண்டும். நாம் சத்குருவின் கிருபையினால் அந்த அம்மையாரின் லக்ஷியங்கள் பூர்த்தியாக வேணும்!


இன்று உங்கள் பற்களை
மக்ளீன் செய்தீர்களா?
"நான் எத்தனையோ டூத் பேஸ்டுகளைச் சோதித்திருக்கிறேன். மக்ளீன்ஸ் போல சிறந்த தொன்றை இதுவரை கண்டதில்லை. என் பற்கள் எவ்வளவு நன்றாயிருக்கின்றன என்று என் நண்பர்கள் எல்லோரும் பாராட்டு கிறார்கள்."
வாயைச் சுத்திகரித்து மூச்சின் நாற்றத்தை போக்குகிறது.
கெடுதலைத் தடுத்து ஈறுகளைப் பாதுகாக்கிறது.
மேலே உள்ள கறைகளை அகற்றி பற்களுக்கு வெண்மை தருகிறது.
மக்ளீன்ஸ் பெராக்ஸைட் டூத் பேஸ்ட் உபயோகிக்கும்போது நீங்கள் உங்கள் பற்களுக்கும், ஈறுகளுக்கும் சிறந்த பாதுகாப்பு அளிக்கிறீர்கள். பற்கள் வெண்ணிறமாகி பளபளக்கிறது ; அதே சமயத்தில் சுவாசத்திலும் நறுமணம் உண்டாகிறது. அதனால்தான் லக்ஷக் கணக்கான மக்கள் மக்ளீன்ஸைத் தவிர வேறு எதையும் உபயோகிப்பதில்லை.
இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்!
MACLEANS
PEROXIDE TOOTH PASTE
MTX-5 TM

குலப்பெருமை

ஆசிரியர்: கே. எம். முன்ஷி — தமிழாக்கம்: ரா. வீ.

'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை' என்று சமத்துவம் பாராட்டுவதில் எல்லாருமே சூரர்கள் தான். ஆனால் அதற்காக அவனவன் தன் குலாசாரத்தையும் சாதிப் பெருமையையும் விட்டுவிட வேண்டும் என்று எந்தச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? என்னைக் கேட்டால் அப்படிப் பெருமை பாராட்டிக் கொள்ளுவது குற்றமாகவே இருந்தாலும் கூடப் பாராட்ட வேண்டிய விஷயம். மாபெரும் மனித சமுதாயத்தின் கடைசிக் களங்கமாயிருந்தாலும் அதைப் பாராட்டாமல் இருக்கக் கூடாது என்றுதான் சொல்லுவேன். அப்படியிருக்கும்பொழுது சுமதி சங்கரின் குடும்பம் இந்தக் குற்றத்தைப் பூஷணமாக உடைத்தானதாக இருந்ததென்றால் அதில் தவறென்ன?

இன்று எங்கு பார்த்தாலும் நடப்பதென்ன? எல்லா ஜனங்களுமே தன் இரண்டு மூன்று தலைமுறைகளை எடுத்துச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ளுகிறார்கள். சுமதி சங்கரோ சுத்த ருக்வேதி. ஆச்வலாயனி சாகையில் அத்ரேயஸ கோத்திரத்தில் உற்பத்தியான உயர்ந்த உத்தமமான பிராம்மணன். பூமியிலே ஓடும் நதிகள் மறைமுகமாக 'அந்தர் வாஹினி'யாக ஓடினாலும் சரி, வெளிப்படையாக 'பஹிர் வாஹினி'யாக ஓடினாலும் சரி, அவற்றின் உற்பத்தி ஸ்தானம் மலைகள் என்னும் முடிவுக்கு வரத்தானே வேண்டும்? அதே போல சுமதி சங்கரின் வம்ச கௌரவத்தையும் குலப் பெருமையையும் ஆராயப் புகுந்தால், அவன் பிரதி தினமும் தன் பெயரையும் குலத்தையும் மறந்துவிடாமல் இருப்பதற்காக, மூன்று வேளைகளும் 'அத்ரேய ஸகோத்ரோத் பன்னோஹம்' என்று சொல்லி 'அபிவாதயே' செய்யும் பொழுது அநுசூயாவின் வயிற்றிலிருந்துதான் அவனுடைய வம்சத்தார்கள் உண்டாகியிருக்கிறார்கள் என்பது ருசுவாகிறது. அதுமட்டும் அல்ல; வம்ச விருக்ஷம் என்னும் வனத்தில் புகுந்து திரிந்து கடைசியில் மூலபுருஷரான அத்ரியையும் தேடிக் கண்டு பிடித்து விடுகிறோம். அந்த அத்ரி மகரிஷி என்ன சாமான்யப் பட்டவரா? பிரும்மா, விஷ்ணு, சிவன்—இம்மூவரையும் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவர். பிரும்மாவே தன் சூத்திரத்தின் மூலம் இதை நிர்வில்லங்கமாக ஒப்புக்கொள்கிறார் என்றால், சுமதி சங்கரின் குலகௌரவத்தைக் குறை கூற எவனுக்குத்தான் துணிவு உண்டாகும்? இழுக்குக் கற்பிக்க உரிமை தான் ஏது?

இந்த சுத்த வம்ச விருக்ஷத்துக்கெதிரே, சைனாவின் நிலைதவறிய அரசர்களின் வம்சப் பெருமையே விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்றால், சுமதி சங்கரின் குலப் பெருமையை எவ்வாறு வர்ணிக்க முடியும்? அதுமட்டும் அல்ல: அத்ரி சம்பந்தமாகச் சுமதி சங்கர் பேசுவதை யாராவது கேட்க நேர்ந்து விட்டால், 'பிரும்மா, விஷ்ணு, சிவன் இம்மூவரையும் அநுசூயை மடியில் வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் பொழுது, சுமதி சங்கரின் முன்னோர்களில் யாராவது ஒருவர் அவர்களுடைய பராக்கிரமச் செயல்களைத் தம் கண்களாலேயே கண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் சுமதிசங்கர் இப்படிப் பேச முடியுமா?' என்று தான் எண்ணுவார்கள். ஏதாவது விசேஷத்தையோ சுப காரியத்தையோ முன்னிட்டு, யாராவது சப்த ரிஷிகளுடன் அதாவது ஏழு பாக்குகளுடன் அழைத்துப் போக வந்தால் சுமதி சங்கரின் சித்தப்பா விமதி சங்கருக்கு இதயம் பெருமையினால் பூரித்துவிடும். அத்ரி ரூபத்தில் வந்திருக்கும் பாக்குகளுக்கு—இல்லை, இல்லை, பாக்கின் உருவத்தில் வந்திருக்கும் அத்ரிக்கு நான்கு சொட்டுச் சந்தனம் அதிகமாக அபிஷேகம் செய்து பெரிய பெரிய பூவிதழ்களாகப் பார்த்து இரண்டு இதழ்கள் போட்டுப் பூஜை செய்யாமல் இருக்க மாட்டார். அதற்குப் பிறகு பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன் கொஞ்சம் சுப்பிர புத்தியுள்ளவன் என்று தோன்றினால், அவனுக்கு அத்ரி-பாக்கைக் காண்பித்து, 'இவர்கள் தான் எங்கள் முன்னோர்கள்!' என்று சொல்லி மிகவும் மரியாதையாக இரு கண்களிலும் ஒற்றிக் கொள்ளுவார்.

ஆனால் குலத்தைப் பற்றி பெருமை பாராட்டிக் கொள்ளுவது இத்துடன் நின்றால் அதை ஒரு புதிய விஷயமாகவோ பெரிய விஷயமாகவோ நாம் எதற்காக எண்ணப் போகிறோம்? ஏனெனில் பிரும்மாவின் ரிஷி புத்திரர்கள் மூலமாகத் தானே பாரத நாட்டின் பிராம்மணர்கள் உண்டாகியிருக்கிறார்கள்! மற்ற நாட்டவர்களோ பிரும்மாவின் விரல் வழியாக

உண்டான புத்திரர்களுக்குப் பிறந்தவர்கள். நம் பூதேவர்களோ பிரும்மாவின் வாயிலிருந்தே உண்டானவர்கள் என்பது ஐயந்திரிபற சர்வ நிச்சயமாகிப் போய்விட்ட விஷயம்.




ஆனால் சுமதி சங்கரின் குலப் பெருமைக்கு வேறு பல காரணங்களும் இருந்தன. அவரும் அவர் குடும்பத்தாரும் அந்தப் பெருமையைப் பொதுவாக வெளியிடுவதில்லை. மனத்துள்ளேயே மறைத்து வைத்திருந்தார்கள். நமக்கு வெளிப்படையாகத் தெரிந்த விஷயம் என்னவென்றால், அந்தக் குடும்பத்தார்களில் ஒவ்வொருவருடைய பெயருடனும் ‘மதி’ என்னும் சொல் சேர்ந்தே இருக்கும். ஒருவன் சுமதி என்றால் இன்னொருவன் விமதி. மற்றவன் திரமதி. அவனுடைய அப்பாவின் பெயர் சங்கர்மதி.

இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களுடைய முன்னோர்களில் கௌமதி என்ற பெயருடன் மிகமிகப் பிரதாபம் வாய்ந்த ஒருவர் இருந்திருக்கிறார் ஆகவே, அந்த வம்சத்தார்கள் மற்ற வம்சங்களைக் காட்டிலும் தங்களுடைய வம்சம்தான் மேலானது என்ற முறையில் நடந்து வந்திருக்கிறார்கள். பெருமையுடனும் படாடோபத்துடனும் வாழ்ந்திருக்கிறார்கள். சுமதி சங்கரின் சித்தப்பா ஜாதி - ஜனம், கல்யாணம்-கல்லெடுப்பு, இன்பம்-துன்பம், கஷ்டம்-சுகம் எல்லாவற்றிலும் முதன்மை ஸ்தானமே அதாவது அக்ர தாம்பூலமே பெற்றிருக்கிறார். எந்தக் காரியத்துக்கும் அவர் தான் முன் னின்று அதிகாரம் செய்வார். அவருடைய பெண்கள் மற்றப் பெண்களுடன் விளையாடக் கூடாது. பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிமார்களுக்குக் கூட, ‘ஜாக்கிரதை! என் பெண்களை மற்றப் பெண்களுடன் உட்காரவோ விளையாடவோ விடக்கூடாது!” என்று கடுமையாக உத்தரவிடப்பட்டிருந்தது. இதற்கெல்லாம் காரணம், ‘நாங்கள் கௌமதி வம்சத்தில் பிறந்தவர்களாக்கும்!’ என்று சொல்லப்பட்டு வந்தது. அவருடைய நடை உடை, பாவனையும் மிடுக்குமே அலாதி!

‘நான்மட்டும் கௌமதி வம்சத்தில் பிறந்தவனாயிருந்தால் இந்தக் காரியத்தைச் செய்யாமல் இருக்க மாட்டேன்’ என்று மார் தட்டிக் கூறுவதில் தங்களுக்கு அலாதி கௌரவமும் மதிப்பும் ஏற்பட்டு விட்டதாகவே அந்தக் குடும்பத்தார்கள் எண்ணி வந்தார்கள். கௌமதி வம்சத்தாரின் செல்வாக்குக் குறையாமல் இருப்பதற்கும் மதிப்பு உயர்வதற்கும் வேண்டிய சகல விதமான முயற்சிகளையும் அக் குடும்பத்தினர் செய்து வந்தனர்.

சுமதி சின்னவன். கௌமதி வம்சத்தில் பிறந்திருந்தும் கூட அவனுக்கு அந்தக் குடும்பத்தின் கௌரவம் குறைந்திருப்பதாகவேதான் தோன்றியது. குறிப்பிட்ட பெண்ணுடன் விளையாடக் கூடாது. பள்ளிக்கூடத்தில் மற்ற வீட்டுப் பெண்களுடனோ பையன்களுடனோ சேர்ந்து உட்காராமல தனித்தே உட்கார வேண்டும். அவர்களுடன் பட்டாணிக் கடலை, வேர்க்கடலை முதலியவை சாப்பிடக் கூடாது. மழையில் அவர்களுடன் காகிதக் கப்பல் விட்டு விளையாடக் கூடாது—இவ்வாறெல்லாம் எதற்காகத்தான் தடை உத்தரவு போடுகிறார்கள் என்று அவனுக்கு விளங்கவே இல்லை. எப்பொழுதாவது இதைப் பற்றி அவன் யாரிடமாவது கேட்டு விட்டால், ஹரமதியும் திரமதியும் அவனுடைய இந்த வக்கிர புத்தியைக் கண்டு கடிந்து கொள்ளுவார்கள். கௌமதி குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு என்று சொல்லித் திட்டுவார்கள். ‘அறிவுள்ளவனாக இரு’ என்று உபதேசம் செய்வார்கள்.

அந்தக் குடும்பத்துப் பெண்களுக்குள்ளே அத்தை ஹரமதிக்குத்தான் தன் குடும்ப கௌரவத்தைப் பற்றிக் கவலை அதிகம். அவள் நல்ல தைரியசாலியும் கூட. ஏழு வருஷங்கள் வரை அவள் தன் மாமியாரிடமும் தன் புருஷனிடமும் தன் குலப் பெருமையை நிலைநாட்டுவதற்காகக் கடுமையான வாய்ப் போர் புரிந்தாள். அப்படியும் அவர்களுடைய சின்ன புத்தியில் கௌமதி குடும்பத்தின் குலப் பெருமை பதியவில்லை. ஆகவே குல விளக்கான ஹரமதி அத்தை சின்னப் புத்தி படைத்த புக்ககத்தாருடன் குப்பை கொட்ட மனம் இல்லாமல், கணவன் உயிருடன் இருக்கும்



பொழுதே கணவனை இழந்தவள் போல வாழா வெட்டியாக, தன் குல விளக்கை அணையாமல் பாதுகாக்கும் நோக்கத்துடனோ என்னவோ, பிறந்த வீட்டுக்கே வந்து சேர்ந்தாள்!

சுமதி அசட்டுப் பிசட்டு என்று ஏதாவது இல்லாத கேள்விகள் எல்லாம் கேட்டு விட்டால், ஹரமதி அத்தை 'சன்னுப் புன்னு' என்று எரிந்து விழுவாள். 'பிள்ளையாண்டானின் வக்கிர புத்தியைப் போக்க மாட்டாயா, பகவானே!' என்று பெருமூச்சுடன் ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்பாள். அடுத்த நிமிஷம் அந்த இடத்தில் நிற்க மனம் இல்லாமல் பூஜை அறைக்குள்ளே புகுந்து விடுவாள். அவள் அப்படிச் செய்வதற்கு ஏதாவது ஒரு முக்கிய காரணம் இல்லாமல் இருக்குமா?

பூஜை அறைக்குள்ளே ஏதோ தெய்வ ரக சியம் போன்ற அற்புத ரகசியம் இருக்கத்தான் இருந்தது. கௌமதி என்ற பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே எல்லோருடைய கண்களும் பூஜை அறைப் பக்கம் சென்று விடும். கௌமதி சங்கர உயிருடன் அந்த அறைக்குள்ளே உட்கார்ந்திருப்பது போன்ற பிரமை ஏற்பட்டு எல்லோரும் பீதி உறுவார்கள். வருஷத்தில் ஒரு நாள், அதாவது வைகாசி மாதம் சுக்ல பக்ஷ சதுர்த்தசி அன்று வீட்டிலுள்ள பெரியவர்கள் எல்லோரும் ஒன்று கூடிக் குழந்தைகளின் அறையிலே நெய் விளக்கு ஏற்றி வைத்துவிட்டுப் பூஜை அறையிலே சென்று நைவேத்தியம் செய்வது தொன்று தொட்டு வந்த வழக்கம்.

சுமதிக்கு அந்தக் காட்சியை யெல்லாம் காண வேண்டும் என்று ஆவலா யிருக்கும். ஆனால் சித்தப்பாவின் கட்டளையை மீறுவது என்றால் அவனுக்குச் சிம்ம சொப்பனம். பெரியவன் ஆனதும், அவனுக்குப் பூஜை அறைக்குள்ளே கௌமதி தாத்தா உடுத்தி வந்த ஆடை அலங்காராதிகளும் மகுடங்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த ஆபரணங்கள் கெடாமல் இருக்கும் வரை அந்தக் குடும்பத்தின் பெருமை கடுகளவும் குறையாது என்ற நம்பிக்கை அந்தக் குடும்பத்தார்களிடையே பரிபூரணமாக நிலவி யிருந்தது. ஜாதி ஜனங்கள் என்னதான் சொன்ன பொழுதிலும் அவர்களிடையேயும் சில கட்டுக் கதைகள் பரவி யிருந்தன. அந்தக் கதைகள் அனைத்தும் அக்குடும்பத்துக்குப் பெருமை அளிப்பதாகவே தான் அமைந்திருந்தன. சுமதி சங்கர் இன்னும் கொஞ்சம் பெரியவன் ஆனதும், இன்னொரு விஷயமும் அவனுக்குத் தெரியவந்தது. அது என்ன வென்றால், இருபத்திரண்டு வயது பூர்த்தி ஆனதும் கௌமதி தாத்தாவின் ஆடை ஆபரணாதிகளைப் பார்க்கும் பாக்கியம் அந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கிடைக்கும் என்பதுதான்.

சுமதி பெரியவன் ஆக ஆக அவனும் அந்தக் குடும்பத்துக்குக் குலவிளக்காகவே விளங்குவான் என்றுதான் தோன்றியது. அவன் தலை கனத்தது. அவன் சுபாவத்தில் தானாகவே மிடுக்கு

ஏறியது; மெருகும் ஏறியது. அவனும் 'தான் கௌமதி வம்சத்தில் பிறந்தவன்' என்பதை அடிக்கடி சொல்லாலும் செயலாலும் நிரூபிக்கலானான். இருபத்திரண்டு வயது ஆவதற்கு முன்னால் அவன் பூஜை அறைக்கு வேண்டுமானால் போக வேண்டாம். ஆனால் கற்பனைக் குதிரையைக் கூடவா தட்டி ஓட்ட முடியாது? அவன் கற்பனைக் குதிரைக்கெதிரே வாயு வேகம், மனோவேகம் எல்லாம் தோற்றுத்தான் போக வேண்டும்!

எந்த எந்த மாதிரியான பகட்டான பட்டாடைகள் இருக்குமோ? 'பள பள பப் பள பள'வென்று கண்களைப் பறிக்கும் என்ன என்ன ஆபரணங்கள் எல்லாம் இருக்குமோ? கிரீடம் வைரம் வைத்து இழைத்ததாக இருக்கலாம். அவர் அணிந்து கொள்ளும் மாலைகளில் எத்தனை விதமோ? — இவ்வாறெல்லாம் கற்பனையில் இறங்கி விடுவான். கற்பனையில் லயித்த பின் அவனுக்கு விக்ரமாதித்ய மகாராஜாவை எல்லாம் தன் கௌமதி தாத்தாவின் காலில் கட்டித்தான் அடிக்க வேண்டும். தாத்தா அவ்வளவு மேலானவராக இருப்பார் என்ற எண்ணம் எழும். ஆங்கிலம் படிக்க ஆரம்பித்ததும் அவன் முதல் காரியமாக மெட்ரிகுலேஷன் வகுப்புக்கென்று ஏற்பட்டதான சரித்திர புஸ்தகங்களைப் புரட்டிக் கௌமதி தாத்தாவின் பெயர் எங்கேயாவது வந்திருக்கிறதா என்று துருவித் துருவித் தேடிப் பார்த்தான். ஏனெனில் அவனுடைய அந்தக் காலத்து அறிவுக்கு அவைதானே பெரிய புஸ்தகங்கள்! அவற்றில் அகப்படாமற் போகவே, சிறிது சிரத்தை குறைந்தது. இருந்தாலும் பள்ளிக்கூடத்து லைப்ரரியிலிருந்து 'மில்' எழுதிய சரித்திரத்தை வாங்கி கௌமதி தாத்தாவின் பெயரை அதிலும் தேடிப் பார்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்த்தான்.

யாரோ சொன்னார்கள் என்பதை வைத்துக் கொண்டு சுமதி சங்கரைக் காலேஜில் சேர்ப்பதாக நிச்சயித்து விட்டார்கள். போர்டிங்கில் வைத்தால் பையன் கெட்டு விடுவானோ என்று எண்ணிச் சுமதியைத் தெரிந்தவர்கள் வீட்டில் வைத்தார்கள். குலப் பெருமையையும் ஆசாரத்தையும் பாதுகாத்தவாறே, இந்தப் பாழும் வயிற்றுப்பாட்டை உத்தேசித்துச் சுமதி சங்கர் மிலேச்ச பாஷையில் சொல்லித் தரப்படும் மேல் நாட்டுக் கல்வியைப் பயில ஆரம்பித்தான்.

ஆங்கிலக் கல்வியிலே உள்ளே அசுத்தத் தன்மையும் ஆசாரக் குறைவும் சுமதி சங்கரின் பரிசுத்தமான கௌமதி சுபாவத்தைச் சிறுகச் சிறுக மாற்றி விட்டன. கொஞ்சங் கொஞ்சமாக அவன் 'சுதந்திரம், மனிதனின் பிறப்புரிமை' போன்ற மேல் நாட்டின் தொந்தரவு தரும் வார்த்தைகளைச் செவி மடுத்தான். கடைசியில் கங்கையைப் போலக் கீழ் நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டான்.

மிக முக்கியமான, ஆனால் பரம ரகசியமான ஒரு விஷயம் என்ன வென்றால், அவன் ஒரு தடவை மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல சந்தியா வந்தனம் செய்யவில்லை. ஒரு தடவை காலேஜ் 'டிபேடிங் ஸொஸைட்டி'யிலே 'எல்லாரும் ஓர் இனம்' என்பது பற்றிக் காரசாரமாகப் பேசிக் கலக்கி விட்டான். 'நாம் நம் முன்னோர்களின் பெருமையைச் சொல்லி அதன் பலத்தில் உயிர் வாழ்கிறோம்; இது நமக்கு மிக மிக இகழ்ச்சிதரும் விஷயமாகும்' என்று சொல்லித் 'தாழ்வுற்று நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை'ச் சுட்டிக் காட்டினான். இதை விட அவன் தாழ்வுக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

சுமதிக்கு இதைவிட வேறு வீழ்ச்சி ஏது? கௌமதி குலத்துக்கு உலை வைக்க வந்த கொள்ளி என்றுதானே சுமதியைச் சொல்ல வேண்டும்? கௌமதியின் ஆத்மா சொர்க்கத்திலிருந்ததோ, அல்லது வேறு எங்கு இருந்ததோ, இதைக் கேட்டுக் கதி கலங்கி நடுநடுங்கிப் போய்விட்டது. பிரும்மலோகத்தில் இருந்த அத்ரி ரிஷியின் கையிலிருந்த கோமுகி கீழே நழுவி விழுந்து விட்டது. அவருடைய அர்த்தாங்கினியான அநுசூயையின் கண்களிலிருந்து அத்யாத்மக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

பையன் கெட்டுப் போகக் கெட்டுப் போக, அவனுடைய உள்ளத்திலே பூஜை அறையின் சிதம்பர ரகசியத்தைக் காண வேண்டும் என்ற ஆசை நெய்யில் தீயாக வளர்ந்தது. ஏனெனில் எங்குமே சரித்திரச் சான்றுகள் கிடைக்க வில்லையாதலால் கௌமதி தாத்தா ஜமீன்தாராகவோ, ஜாகீர்தாராகவோதான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அதுமட்டும் அல்ல; இருபதுக்கும் இருபத்திரண்டுக்கும் நடுவே உள்ள நாட்கள் இருக்கின்றனவே, அவை அவன் பிராணனையே வாங்கிவிட்டன. கடைசியில் ஒரு விதமாக இருபத்திரண்டாவது வயது பூர்த்தியாகும் காலமும் வந்தது. இதற்குள் சித்தப்பாவும் சிவலோகப் பிராப்தி அடைந்து விடவே, பெருமைக்கு ஆதாரமான அந்த ரகசியத்தைத் தனக்குக் காட்டுமாறு அவன் தன் அத்தையைக் கேட்டான். அந்த ரகசியத்தை அறிந்து கொள்ள அவன் உள்ளம் துடித்த துடிப்பை, இம் மாதிரி ரகசியத்தை அறிந்து கொள்ள

ஆவலுள்ளவர்களைத் தவிர வேறு யாரால் உணர முடியும்?

குறிப்பிட்ட நாள் வந்ததும் சுமதி தன் கிராமத்தை அடைந்தான். வீட்டு மாட்டுப் பெண்கள் எல்லோரும் பிறந்தகத்துக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள். குழந்தைகள் பக்கத்து வீட்டில் விளையாடுவதற்கென்று அனுப்பப்பட்டார்கள். இரண்டு அத்தைகளும் மருமானும் கௌமதி தாத்தாவின் பொருள்களைப் பார்ப்பதற்காகப் பூஜை அறைக்குச் சென்றார்கள். பயம், பக்தி - சிரத்தை முதலியவை தாண்டவமாட அத்ரிக்கும் அநுசூயைக்கும் மானசீகமாகப் பூஜை செய்தார்கள். பிறகு கௌமதி தாத்தா உள்ளே உறங்கிக் கொண்டிருப்பது போலவும் அவரை எழுப்ப விருப்பமில்லாமல் பயந்து கொண்டு நுழைவது போலவும் மூவரும் மிகவும் மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைத்து உள்ளே சென்றனர். ஒரு அத்தையின் கையில் நெய் விளக்கு இருந்தது. இன்னொருத்தியின் கையில் நைவேத்தியம் இருந்தது. பூஜை அறை கும்மிருட்டாக இருந்தது. ஆகவே, பற்பல விதப் பூச்சிகள் அங்கே குடியிருந்தன. உயரத்தில் இருந்த மாடத்திலிருந்து ஒரு அத்தை பெட்டி ஒன்றை எடுத்தாள்.

அப்பொழுது சுமதியின் காதுகளில் கொம்பு ஊதுவது போன்ற சத்தம் கேட்டது. இருபத்திரண்டு வருஷங்களாகக் கண்டு வந்த கனவு நனவாகும் நன்னாள் இன்றுதான் வந்தது. அவனுடைய கைகள் நடுங்கின. நா வறண்டது. உதடுகள் துடித்தன. ஒரு அத்தை பெட்டியைக் கீழே வைத்து அத்துடனேயே சேர்க்கப்பட்டிருந்த சாவியைக் கொண்டு அதைத் திறந்தாள். பிறகு இரண்டு அத்தைகளும் பெறுதற்கரிய பொக்கிஷம் கிடைத்து விட்டது போன்ற பெருமையுடன் சுமதி சங்கரைப் பெட்டியைப் பார்க்குமாறு சொன்னார்கள். இருட்டில் சுமதி குனிந்து பார்த்தான். உண்மையாகவே வெல்வெட்டு உடை ஒன்று காணப்பட்டது. அதில் பளபளவென்று வெள்ளி போல ஒரு நாற்கோணமுள்ள பொருள் மின்னிக் கொண்டிருந்தது. சுமதிக்குத் தான் கனவில் கண்டு கொண்டிருந்த ஜரிகை தலைப்பாக்களும் மகுடமும் பொய்த்துப் போவது போலத் தோன்றியது. அந்த வெள்ளிப் பதக்கத்தில் ஏதோ பொறித்திருப்பது போலத் தெரிந்தது. கூர்ந்து கவனித்ததில் ஆங்கிலத்தில் 'சூரத்' என்று எழுதப்பட்டிருப்பது தெரிந்தது.

"அத்தை! இதில் என்னவோ எழுதியிருக்கிறது. வெளியில் எடுத்துப் பார்க்கலாமா?" என்று கேட்டான் சுமதி.

"அதெல்லாம் கூடாது. வெளியில் எடுப்பதாவது? நன்றாயிருக்கிறது!"

"அது சரி, அத்தை! கௌமதி தாத்தா யார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்றான் சுமதி.

"பார்த்தாயோ, இல்லையோ? இது இங்கிலீஷ் படிப்புப் படித்ததனால் வந்த வினை!" என்றாள் ஒரு அத்தை.

அத்தைகள் 'ஆஹாம்-ஊஹூம்' என்று சொன்ன பிறகு கடைசியாகத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். சுமதியின் மனத்தில் பலத்த யோசனை எழுந்தது. ஒரு வேளை கௌமதி தாத்தா சூரத்துக்குத் திவானாக இருந்திருக்கலாம் அல்லவா? அல்லது அவருக்கு சூரத் ஜாகீராகக் கிடைத்திருக்கலாம். அப்படியிருந்தால் அதற்குக் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துத் திருப்பி வாங்கிவிடலாம். அதற்காக அயல் நாடு வரை போக நேர்ந்தாலும் சரி, ஒரு கை பார்த்துவிட வேண்டும்; கை விட்டுப் போன உரிமை திரும்பக் கிடைத்து விடும் அல்லவா?

இவ்விதம் யோசித்தவாறே அவன் பெட்டியிலிருந்த பொருள்களை வெளியே எடுக்கலானான். மிகவும் ஜாக்கிரதையாக வெல்வெட்டுக் கோட்டில் சூரத் என்று எழுதியிருக்கும் பதக்கத்தைப் பிடித்துத் தூக்கினான். அதில் எழுதியிருந்த எழுத்துக்கள் எல்லாமே தெரிந்தன. எழுதியிருந்தது இதுதான்:—

"பியூன் ஆவ் மிஸ்டர் ஹாவர்ட் ஹெமல், சூரத்."

அதைப் படித்ததுதான் தாமதம்; சுமதிக்கு மூர்ச்சை போட்டுவிடும் போலத் தோன்றியது. அவன் கையிலிருந்து அந்தக் கோட்டு கீழே விழுந்துவிட்டது. கௌமதி தாத்தா என்ன செய்து வந்தார் என்பது தெரிந்துவிட்டது. மனம் ஒரு நிலைக்கு வந்ததும் அவன் 'கட கட' வென்று அட்டகாசச் சிரிப்புச் சிரித்தான்.

அத்தைகளுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. ஆனால் மருமானின் பிரமை விலகிவிட்டது. இருவருடைய குலப் பெருமையும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது!

* * *

இரவு இரண்டு மணி சுமாருக்கு இரண்டு அத்தைகளும் மருமானும் புழைக்கடை வழியாகப் புறப்பட்டனர். பிறகு பக்கத்து வீட்டிலிருந்த கிணற்றங்கரைக்குச் சென்று கையில் கொண்டு வந்திருந்த பொட்டணத்தைக் கிணற்றில் போட்டு விட்டுப் பேசாமல் திரும்பினர். கௌமதி தாத்தாவின் கௌரவம் கிணற்றிலே 'விஸர்ஜனம்' செய்யப்பட்டு விட்டது!



சோமாஸ்

4. கண்ணீர் வெள்ளம்

ராஜகுமாரனும் அந்தப் பெண்களும் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போகும் வரையில் சுந்தரி கண்ணை இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ராஜகுமாரன் அவளைப் பற்றிச் சொன்னதெல்லாம் அவள் காதில் விழுந்தது. ராஜகுமாரன் நீலக் கடலையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போனது சுந்தரியின் இருதயத்தைக் கலக்கிவிட்டது.

"நடுக் கடலில் உங்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்த பெண் நான்தான்! நான் ஒரு கடல் கன்னிகை!" என்று தன் குரல் கொண்ட மட்டும் கத்திவிட வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. ஆனால் கடலில் வாழும் இனத்தைச் சேர்ந்த சுந்தரியால் மனித பாஷையில் பேச முடியாதே?

சுந்தரியின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகி அலைமோதும் கடலில் கலந்தது. அவள் துக்கத்தைப் பார்த்த கடலும் 'ஓ'வென்று கதறித் தன்னுடைய ஆற்றமாட்டாத துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டது. கண்ணீர் பெருக்குவதைத் தவிர அவளால் வேறென்ன செய்ய முடியும்?

சுந்தரிக்குத் தன் இனத்தின் மேல் ஒரு வெறுப்பு உண்டாயிற்று. கடவுள் மேலேயே அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. மனித உருவத்தையும் மனிதனுடைய இருதயத்தையும் தங்கள் இனத்துக்குக் கொடுத்த கடவுள் அவர்களோடு சேர்ந்து வாழும் வாய்ப்பைத் தரவில்லையே என்று சுந்தரியின் மனம் ஏங்கியது. எவ்வளவு நேரம் அவள் துக்கப்பட்டுக் கொண்டிருந்தாளோ!

"சுந்தரி, என்ன இது! நேற்று முழுவதும் உன்னைக் காணோமே! எங்கே போயிருந்தாய்? நேற்று இரவு வீசிய புயல் காற்றில் நீ என்ன செய்தாய்? அம்மா எங்களையெல்லாம் ரொம்பவும் கோபித்துக் கொண்டாள், 'அவளை ஏன் தனியாக விட்டீர்கள்?' என்று. இராத்திரி முழுவதும் அம்மா தூங்கவேயில்லை. உன்னை எங்கேயெல்லாம் தேடிப் பார்ப்பது? வா, போகலாம். அங்கே வந்து எல்லா விவரங்களையும் சொல்லு!" என்று ஒரு பழகிய குரல் கேட்கவே, திரும்பிப் பார்த்தாள் சுந்தரி. அவளுடைய இரண்டு சகோதரிகளும் பக்கத்தில் இருந்தனர். சுந்தரி அவர்களைத் தொடர்ந்தாள்.

சுந்தரியைக் கண்டதும் அவள் தாயாருக்கு உண்டான சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. ஆனந்தக் கண்ணீர் அவள் கண்களிலிருந்து பெருகிக் கடல் நீரில் கலந்தது.

"அம்மா, சுந்தரி! நீ எங்கே போய் விட்டாய்? கடலுக்குமேலே போனவள் ஒரு நாள் முழுதும் என்ன செய்தாய்? பயங்கரப் புயலுக்கு எங்கே ஒதுங்கினாய்?" என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டாள் அவள் தாயார்.

சுந்தரிக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரியவில்லை. அவள் கண்களிலிருந்து 'கட கட' வென்று கண்ணீர் வெள்ளம் பெருகியது.

"என்ன சமாசாரம்! அழாதே! நடந்ததைச் சொல்லு!" என்று அம்மா அவளைச் சமாதானப்படுத்தினாள்.

சுந்தரி பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள்:

"அம்மா, இதுவரையில் நான் சமுத்திர ஜலமட்டத்துக்கு மேலே போய் நீந்திப் பார்த்ததில்லையல்லவா? எனக்கு மேலே போனதும் ஒரே அதிசயமாயிருந்தது. நீ அடிக்கடி சொல்வாயே, அந்த நீல வானத்தைப் பார்த்தேன். பெரிய ஆரஞ்சுப் பழத்தைப் போல, சூரியன் கிழக்குத் திக்கில் உதயமான காட்சியைப் பார்த்தேன். அடாடா! என்ன அழகு! அந்த அற்புதமான காட்சி அழகில் மனசைப் பறிகொடுத்து, மனம் போனபடி வெகு தூரம் போய்விட்டேன். அப்பொழுது இன்னொரு அதிசயம் நிகழ்ந்தது. வெகு தூரத்திலிருந்து ஒரு வெளிச்சம்

நகர்ந்து வந்தது. அது சமீபத்துக்கு வந்ததும், புகையைக் கக்கிக் கொண்டு ஒரு பெரிய மாளிகை நகர்ந்து வந்ததாகத் தெரிந்தது. நீ கதை சொல்லுவாயே கப்பலைப் பற்றி! அது தான் அந்தக் கப்பல் என்று ஊகித்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் பயங்கரமான புயல் வீச ஆரம்பித்துக் கப்பல் இப்படியும் அப்படியும் தத்தளித்தது; சிறிது நேரத்தில் அந்தக் கப்பல் தூள் தூளாக நொறுங்கிப் போய் விட்டது. கப்பலில் இருந்தவர்களெல்லாம் மூழ்கி விட்டனர். அவர்களில் ஒரு ராஜகுமாரன் மட்டும் சமுத்திர ஜலத்தில் திணறிக் கொண்டிருந்தான். அவன் கப்பலின் மேல் தளத்தில் ராஜ உடையுடன் உலாவிக் கொண்டிருந்தபோதே ராஜகுமாரன் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. நான் அவனைச் சிரமப்பட்டுக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டு வந்தேன்! அந்தப் பயங்கரப் புயல் என் மனசுக்கு மிகவும் சோர்வைத் தந்துவிட்டது. உன்னை மீண்டும் பார்ப்பேனா என்று சந்தேகமாய்ப் போய்விட்டது. அதனால்தான் கண்ணீர் விட்டேன்!''



"குழந்தாய் சுந்தரி, நீ நல்ல காரியம் செய்தாய். அப்படித்தான் ஆபத்தில் சிக்கிக் கொண்டு தவிப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால், சுந்தரி! மனிதர்கள் மிகப் பொல்லாதவர்கள். உன்னை மட்டும் பார்த்து விட்டால் இலேசில் விடமாட்டார்கள். நீ அவர்களிடம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உன்னை வலை போட்டுப் பிடித்து எங்கேயாவது ஒரு மிருகக் காட்சிச் சாலையில் கொண்டு போய் வைத்து விடுவார்கள். கடல் கன்னிகைகளை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டும் என்று மனிதர்களுக்கு எப்போதும் ஓர் ஆசை உண்டு!'' என்று அம்மா சொன்னதைக் கேட்ட சுந்தரி 'கலீர்' என்று சிரித்தாள். அவள் முகத்தில் படர்ந்திருந்த சோகக் களை கூட அப்போது கொஞ்சம் நீங்கியிருந்தாற் போலத் தோன்றியது.

"சுந்தரி, ஏன் சிரிக்கிறாய்? உனக்குப் பித்துப் பிடித்துவிட்டதோ? சற்று நேரத்துக்கு முன்னால் உன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. இப்போது உன் முகம் களையாயிருக்கிறது!'' என்றாள் அம்மா சிரித்துக் கொண்டே.

சுந்தரி இப்போது சிரிக்கவில்லை. அவள் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

"அம்மா, நாம் எல்லாம் பூலோகத்துக்குப் போய் மனிதர்களோடு சேர்ந்து வாழ முடியாதா? எனக்குக் கடல் வாழ்க்கை அலுத்துப்போய் விட்டது!'' என்று கூறிச் சுந்தரி முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

"உன் பதினைந்து வருஷ வாழ்க்கையில் அதற்குள் அலுப்புத் தட்டி விட்டதா? திடீரென்று மனிதர்களிடம் உனக்கு என்ன அப்படி ஆசை வந்து விட்டது?'' என்று அம்மா கேட்டாள்.

அதற்குச் சுந்தரி, "இல்லை. எனக்கு மனிதர்களிடம் ஒன்றும் ஆசை வந்து விட வில்லை. கப்பலில் .... பார்த்தேனே.........அந்த ராஜகுமாரனிடம் தான் எனக்கு...... ஆசை ஏற்பட்டு விட்டது!'' என்றாள். அப்பப்பா! இதைச் சொல்லி முடிப்பதற்குள்ளே தான் அவளுக்கு எத்தனை வெட்கம்? அவள் முகம் எப்படிச் சிவந்தது!

"சுந்தரி, இது என்ன வேடிக்கை! கடல் கன்னிகைகள் மனிதனைக் கண்டு ஆசைப்படுவதாவது! மனிதர்களை விட நாம் எவ்வளவு உயர்ந்தவர்கள் தெரியுமா? அவர்களிடம் பொறாமை, பொய், திருட்டு, முதலிய கெட்ட குணங்களெல்லாம் குடிகொண்டு அவர்களை எப்படியெல்லாமோ பாடாய்ப் படுத்தி வைக்கிறது. நம்

மிடம் அம்மாதிரிக் கெட்ட குணங்கள் எதுவும் தலை காட்டாது. மனிதர்கள் எப்போதும் பிறரைக் கெடுப்பதற்கே பார்ப்பார்கள். நம் இனத்தில் அந்த மாதிரி கெட்ட குணமே கிடையாது. இருபத்துநாலு மணி நேரமும் நாம் ஜலத்திலேயே வாழுபவர்கள். மனிதர்களால் ஒரு மணி நேரம்கூட ஜலத்தில் இருக்க முடியாது. ஆகையினால் உன் ஆசை நிறைவேறாது!" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள் அம்மா.

சுந்தரியின் முகம் வாடிவிட்டது. அவள் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. அவள் மனம் அம்மா சொன்னதைக் கண்டு திருப்தி யடைகிற வழியா யில்லை. ராஜகுமாரனுடைய முகம் சதா அவள் நினைவில் இருந்து அவளைத் தன்னிடம் அழைத்தது.

இரண்டு நாட்களுக்குமேல் சுந்தரியால் நீல மாளிகையில் இருக்க முடியவில்லை. ராஜகுமாரனுடைய ஆசை முகத்தை நினைத்து இரவு பகல் ஓயாமல் கண்ணீர் விட்டாள் சுந்தரி. எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாவதைத் தவிர அவளால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

மூன்றாவது நாள் சுந்தரியின் இருதயம் வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது. ராஜகுமாரனைப் பார்க்க வேண்டும், அவன் என்ன செய்கிறான் என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை அவளைச் சமுத்திர ஜலமட்டத்துக்குமேல் இழுத்தது. உடனே புறப்பட்டுவிட்டாள் சுந்தரி. அவளுடன் கூட அவளுடைய சகோதரிகள் இருவரும் புறப்பட்டார்கள்.

சுந்தரியும் அவளுடைய சகோதரிகளும் சமுத்திரத்தில் நீந்தினார்கள், நீந்தினார்கள், அப்படி நீந்தினார்கள். அன்றைக்குச் சுந்தரி ராஜகுமாரனைக் கரையேற்றினாளே, அந்தத் தீவை நோக்கித்தான் மூவரும் போனார்கள்.

அந்தத் தீவின் கடற்கரையைப் பார்த்ததும் சுந்தரி மனம் கலங்கி அப்படியே சிறிது நேரம் நின்றுவிட்டாள். மூன்று நாட்களுக்கு முன் தான் ராஜகுமாரனைக் கப்பல் பலகையில் கொண்டு வந்து இதே கடற்கரையில் சேர்த்தது அவள் மனக் கண் முன்னால் தோன்றியது. உடனே சுந்தரியின் கண்களிலிருந்து அருவி போலக் கண்ணீர் பெருகியது.

மிகவும் சிரமத்துடன் சுந்தரி தன் சகோதரிகளிடம் தான் ராஜகுமாரனைக் காப்பாற்றிய விதத்தையெல்லாம் சொன்னாள். அன்று வர்ணப் பட்டாடை யணிந்த பெண்கள் ராஜகுமாரனை அழைத்துச் சென்ற பெரிய சாலையைப் பார்த்ததும் சுந்தரி மிகவும் வருந்தினாள். பிறகு அவர்கள் அன்று ராஜகுமாரன் சென்ற அரண்மனைப் பக்கமாகப் போனார்கள். அந்த அதியற்புத அரண்மனை கடற்கரை ஓரமாகத்தான் இருந்தது. அரண்மனை மதில் சுவரின் மேல் கடல் அலைகள் 'தடால், தடால்' என்று மோதின.



சுந்தரி அரண்மனையைக் கூர்ந்து நோக்கினாள். ஆகா! என்ன ஆச்சரியம்! ராஜகுமாரன் அரண்மனை மேல் மாடியில் நின்று கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவன் பார்வை யெல்லாம் கண்ணுக்கு எட்டிய தூரம் பரந்து கிடக்கும் சமுத்திரத்திலேயே லயித்திருந்தது.

'ஆகா! நடுக்கடலில் அவரைக் காப்பாற்றிய நம்மைத் தான் அவ்வளவு கவனமாகத் தேடுகிறார்! அவர் கண்களில் தான் என்ன கவர்ச்சி! எத்தனை ஏக்கம்!' என்று சுந்தரி வருந்தினாள்.

மூன்று சகோதரிகளும் ராஜகுமாரனை நன்றாய்ப் பார்த்தார்கள். ஆனால் அவன் அவர்களைப் பார்க்கவில்லை. அவர்கள் தான் அவன் கண்ணில் படாமல் சுருண்டு விழும் அலைகளின் வெண்ணுரைக்கு மத்தியில் மறைந்து மறைந்து, தோன்றுகிறார்களே! அவன் அவர்களை எப்படிப் பார்க்க முடியும்? சுந்தரியின் சகோதரிகள் ராஜகுமாரனின் அழகைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார்கள். "சுந்தரி, வா, போகலாம். இங்கேயிருந்து கண்ணீர் வடிப்பதில் என்ன பிரயோஜனம்?" என்று கூறி மூத்த சகோதரி சுந்தரியை நீல மாளிகைக்கு அழைத்தாள்.

"அக்கா, என் மனவருத்தம் தெரியாமல் பேசுகிறாய். ராஜகுமாரர் என்னை நினைத்துத்தான் உருகுகிறார். இப்பொழுது எனக்குத் திடீரென்று மனித பாஷையில் பேசும் சக்தி வந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? 'இளவரசே, இதோ நான் இங்கே இருக்கிறேன். என் விழிகளைப் பாருங்கள்! அவை எத்தனை நேரம் தங்களை நினைத்துக் கண்ணீர் விட்டன தெரியுமா?' என்று அவர் உள்ளம் உருகும் வண்ணம் கேட்டிருப்பேனே!" என்று சுந்தரி கண்ணீர் விட்டாள்.

பிறகு வேறு வழியின்றி, சுந்தரி தன் சகோதரிகளுடன் நீல மாளிகைக்குத் திரும்பி வந்தாள். (தொடரும்)

குப்பனும் சுப்பனும்

"ஏன் குப்பா! நீ எங்கேயோ வெளியூருக்குப் போகப் போகிறாயாமே! வரும்பொழுது எனக்கு ஒரு கிளி வாங்கி வருகிறாயா?" என்று கேட்டான் சுப்பன்.

"கிளிதானே? கட்டாயம் வாங்கி வருகிறேன். ஆமாம், நீ இது வரையில் கிளியே பார்த்ததில்லையா, என்ன?" என்று கேட்டான் குப்பன்.

"பார்த்ததே இல்லை. அதனால்தான் எனக்கு ஒரு பச்சைக்கிளி வளர்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது!" என்றான் சுப்பன்.

"கவலைப்படாதே! உனக்கு ஒரு கிளி கட்டாயமாய் வாங்கித் தருகிறேன்!" என்று சொல்லிச் சென்றான் குப்பன்.

வெகு நாட்கள் வெளியூர்ப் பிரயாணம் செய்ததில் குப்பன் கிளி வாங்கவே மறந்து விட்டான். ஊருக்கு வெகு அருகில் வந்த பின்தான் அவனுக்குக் கிளி வாங்க மறந்துபோன விஷயம் நினைவுக்கு வந்தது. 'சுப்பன் வருத்தப்படுவானே! என்ன செய்வது?' என்று யோசித்தான். வரும் வழியில் ஒரு ஆந்தைக்குஞ்சு விழுந்து கிடந்தது. அதைக் கண்டதும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதை வீட்டுக்கு எடுத்து வந்து அதன் மேல் பச்சைச் சாயத்தைப் பூசினான். பிறகு சுப்பன் வீட்டுக்குச் சென்று, அவனுக்கு அதைப் பரிசாக அளித்தான்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் சுப்பனைப் பார்க்கக் குப்பன் அவன் வீட்டுக்குச் சென்றான். பேச்சு வாக்கில், "ஏன் சுப்பா! உன் கிளி நன்றாகப் பேசுகிறதா?" என்று விசாரித்தான். அவன் கேட்ட அந்தக் கேள்வியில் குறும்பு தாண்டவமாடியது.

"இல்லை குப்பா! இந்தக்கிளி ஏனோ தெரியவில்லை, பேசவே இல்லை! ஆனால் எப்பொழுது பார்த்தாலும் 'குருட்டுக் குருட்டு' என்று கண்களை உருட்டி விழித்துக் கொண்டு யோசனை செய்த வண்ணமே இருக்கிறது. அப்புறம் நான் யோசித்தேன். 'இது குப்பன் வாங்கி வந்த கிளிதானே! குப்பன் வகுப்பில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஆந்தைபோல விழிப்பானே! அவன் வாங்கி வந்த கிளி அவனைப் போலத்தானே இருக்கும்' என்று எண்ணி மனத்தைத் தைரியப் படுத்திக் கொண்டு விட்டேன்!" என்றான் சுப்பன். அதைக் கேட்டதும் குப்பனிடம் தாண்டவமாடிக் கொண்டிருந்த குறும்பு இருந்த இடம் தெரியாமல் பறந்து விட்டது! — அஜயம்.

வக்கீல் வீட்டுப் பெண்

கஸ்தூரி

ஒரு குறிப்பிட்ட நோக்கம் ஏதுமின்றிப் பைத்தியக்காரனைப் போல் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டே இருந்தேன். இதனால் என் வாழ்க்கை நிறைந்து விடுமா என்ற சந்தேகம் எழவேயில்லை. கைதவறி விட்டு விட்ட பணத்தைப் பற்றியே சதா எண்ணமிடும் கருமியைப் போல் என் மனம் என்னை விட்டுச் சென்ற லக்ஷ்மியைப் பற்றியே எண்ணி வருந்திக் கொண்டிருந்தது. ஒரு மனைவி தவறின அன்றே புது மனைவியைப் பற்றிக் கனவு காண ஆரம்பிக்கும் கணவனை ஒத்திருந்தாள் அம்மா. "பொறுமைக்குப் பூமாதேவியைப் போன்றவள்தான். நாம் பண்ணிய பாவம் நமக்குக் கொடுத்து வைக்கவில்லை. பருந்து கொண்டு போன பக்ஷணத்திற்காக அழும் குழந்தையைப் போல் நீ பிடிவாதம் பிடிக்கிறாயே! நான் சொல்வதைக்கேள். பேசாமல் அந்த வக்கீல் வீட்டுப் பெண்ணை மணந்து கொள். இந்த வயசிலே நான் நிம்மதியாகக் காசி, ராமேசுவரம் என்று கிளம்பி விடுவேன்" என்று அம்மா துளைப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் அம்மாவிற்கு முன்னதாக நானே யாத்திரை கிளம்பி விட்டேன். விரக்தி அடைந்த என் வாழ்க்கையில் பக்தி புகுவது இயற்கைதானே? ஒவ்வொரு புது ஊரைப் பார்க்கும்போதும் சற்று உற்சாகம் பிறக்கும். நான்கு நாட்களுக்குப் பிறகு அந்த ஊர் அடியோடு கசந்துவிடும். இன்னொரு ஊருக்குக் கிளம்பி சிடுவேன்.

ஐம்பது மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்த என் ஹட்சன் கார் குற்றாலம் லக்ஷ்மி விலாசத்தை அடைந்ததும், இரவு அவிழ்த்து விடப்பட்ட வாடகை வண்டிக் குதிரை போல் நிம்மதி அடைந்தது. இந்த வெய்யிலில் ஊர் சுற்றுவது முடியாத காரியம்; இந்தக் கோடையைக் குற்றாலத்தில் நிம்மதியாகக் கழிக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்டேன். மேலும் எனக்குச் சற்று இயற்கைப் பயித்தியமும் கலைப் பயித்தியமும் உண்டு. தென்காசிச் சிற்பங்களையும் குற்றால அருவிகளையும் சுற்றிப்பார்த்துப் பொழுது போக்கிக் கொண்டிருந்தேன்.

மற்ற ஊர்களிலே கிட்டாத சாந்தி குற்றாலத்திலே கிடைத்தது. லக்ஷ்மி விலாசத்தில் நான் இருந்த போர்ஷன் தவிர மற்ற பாகமெல்லாம் காலியாகவே கிடந்தது. "சோ" வென்ற காற்றின் சத்தமும் அப்போதைக்கப்போது சமையல் உள்ளில் சமையல்கார செல்லப்பாவினால் உண்டாக்கப்படும் சிறு சத்தமும் தவிர அந்த லக்ஷ்மி விலாசம் அமைதியாகவே இருந்தது.

அன்று மத்தியானம் மூன்று மணி இருக்கும். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த நான் ஏதோ 'தடால்' என்ற சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். என்ன சத்தம் என்று எரிச்சலுடன் ஜன்னல் வழியாக நோக்கினேன். 'சரிதான்! பக்கத்துப் போர்ஷனுக்கு யாரோ குடி வருகிறார்கள். வரும்போதே ஒரே கலாட்டா செய்யும் இந்த ஆசாமிகளால் நம் நிம்மதி பறி போகப் போகிறது!' என்று நினைத்ததுமே எனக்கு கோபம் கோபமாக வந்தது.

நான் நினைத்ததொன்றும் தவறில்லை; ஒரு வாயாடி வேலைக்காரி, ஒரு வம்புக்காரப்பெண், அரைக் கண் பார்வையும் காது முக்கால் செவிடுமான கிழவர், மூன்று வயதுள்ள அடங்காப் பிடாரி பெண் குழந்தை—இத்தனை பேர் கொண்ட குடும்பம் என்றால் ரகளைக்குக் குறைவேது? போதாததற்கு பால்காரி முதல் கறி காய் விற்பவள் வரை ஒருவரைக் கூட விடாமல் சண்டை பிடிக்கும் சுபாவமுடையவள் அவர்கள் சமையற்காரி. அவள் குரல் ஐந்து வீடுகளுக்கு அப்பால் கேட்கும்; சின்னப் பெண் பேபி, பார்க்கும் ஒவ்வொன்றையும் தனக்கு அளிக்கும்படி பிடிவாதம் பிடித்து ரகளை செய்யும். அந்தக் 'குழந்தை' இருக்கிறதே, (குதிர் மாதிரி வளர்ந்திருக்கும் அந்தப் பெண்ணைக் கிழவர் அப்படித்தான் கூப்பிடுகிறார்.) அது இந்த இருவரையும் நல்லவர்களாக்கி விடுகிறது. போகும்போதும் வரும்போதும் ஒரு சினிமாப்பாட்டை அபஸ்வரமாகப் பாடுகிறது. தடதடவென்று ஓடுகிறது; காற்காலியை பரபரவென்று இழுக்கிறது. தாத்தா பக்கத்திலே உட்கார்ந்து கொள்கிறது; இயற்கை அன்னையின் எழிலை தாத்தாவிற்கு எடுத்துச் சொல்லி வர்ணிக்கிறது. சில சமயங்களில் கிழவர் ராமரைப் பற்றிப் பாடச் சொல்லுவார். அவ்வளவுதான்; அந்தத் தியாகய்யர் க்ருதிகள் படும் பாட்டைக் கேட்கப் பரிதாபமாக இருக்கும். அதுவும் தவிர தினமும் தினப பத்திரிகையைத் தலையங்கத்திலிருந்து வால் அங்கம் முடிய தாத்தாவிற்குக் கேட்கும்படி இரைந்து படிக்க ஆரம்பித்து விடுவாள்.

'சட்! இதென்ன பெரிய நியூஸென்ஸாகப் போயிற்றே!' என்று வாய் விட்டு மெள்ளச் சொல்லிக் கொண்ட நான் துண்டை உதறித் தோள்மேல் போட்டுக் கொண்டு நடந்தேன். எதிரிலிருந்த குமரகுரு கொண்டாடும் பாறையின் உச்சியிலே உட்கார்ந்து கொண்டேன். அந்தச் சுகமும் இரண்டு நாள்தான் நீடித்தது. மூன்றாவது நாள் அந்தக் குடும்பமும் அந்தப் பாறைக்கே வரத் தொடங்கி விட்டது. எனக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை! என்றாலும் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குற்றாலத்தில் சீசன் சமயத்தில், வீடு கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாயிற்றே!

அன்று மத்தியானம் சாப்பிட்டு விட்டுத் தூங்க நினைத்த நான், ஜன்னல் ஓரமாக இருந்த என் படுக்கையில் படுத்தேன். அதற்கென்றே காத்திருந்தாற் போல் அடுத்த போர்ஷனில் பாட்டுக் கச்சேரி ஆரம்பமாகி விட்டது. ஜன்னல் கதவைப் படீரென்று சாத்தினேன். பாடிக்கொண்டிருந்த பாட்டைப் பாதியிலே நிறுத்தி விட்டு அந்தப் பெண் "சேவிக்க வேண்டும் ஐயா சிதம்பரம்" என்று பாடலானாள். எனக்காகத்தான் இந்தப் பாட்டைப் பாடினாளா? என் பெயர் சிதம்பரநாதன் என்பது அவளுக்கெப்படித் தெரியும்? ஏதோ தற்செயலாகப் பாடி இருக்கலாம் என்றெண்ணிக் கொண்டு தூங்க முயற்சித்தேன். அக்கா பாட்டிற்குத் தகரடின் ஒன்றைக் கொம்பால் அடித்துத் தாளம்போட ஆரம்பித்தாள் பேபி. மணியும் மூன்றாயிற்று; தூக்கம் வரும் வழியாக இல்லை. எழுந்து வீட்டின் பின்னால் ஓடிக் கொண்டிருந்த வாய்க்காலில் முகம் அலம்புவதற்குச் சோப்புடன் சென்றேன். நீர் பளிங்குபோல் ஓடிக் கொண்டிருந்தது. என்னை மறந்து அந்த ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். 'தொப்' என்ற சத்தம் மிக அருகில் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினேன். மடித்துக் கட்டியிருந்த என் வேஷ்டி எல்லாம் தண்ணீர்! வளைந்திருந்த புன்னை மரக்கிளையிலிருந்து குதித்திருக்கிறாள் அந்தப் பெண். அவள் சேலை எல்லாம் நனைந்திருந்தது. 'இவள் பெண்ணா அல்லது? ......என்று சந்தேகித்த நான் கோபத்தோடு அவளைப் பார்த்தேன்.



"ஆட்டுக் குட்டியை ஓனாய் முறைத்ததைப் போல் பார்க்கிறீர்களே!" என்றாள் அந்தப் பெண்.

"உபமானம் அழகாய்த்தான் இருக்கிறது! பெண்ணாய்ப் பிறந்தவர்களிடம் அடக்கம் என்பது அணுவளவும் இல்லாவிட்டால் சகிக்க முடியவில்லை" என்று வெறுப்புடன் சொன்னேன்.

"அதைப்போலவே ஆணாய்ப் பிறந்தவர்களிடமும் ரசிகத்தன்மை கொஞ்சமாவது இருக்கத்தான் வேணும்" என்றாள்.

"உன்னிடம் எதைக் கண்டு ரசிக்கச் சொல்கிறாய்?"

"என் பாட்டு, என்பேச்சு......"

"உன் பாட்டு, ஆட்டம் எதையும் பார்க்கச் சகிக்கவில்லை" என்று பொறுமையை இழந்து கூறினேன்.

சட்டென்று வாடியது அவள் முகம். பேசாமல் பதுமைபோல நின்றிருந்தாள் அவள். நான் அவள் வாயை அடக்கி விட்டேன் என்ற பெருமையிலே சோப்புக் கட்டியைப் போட்டுத் தேய்க்கலானேன்.

அவள் அசையக்கூட இல்லை. அவள் விழிகள் தூரத்தில் எங்கோ எதையோ பார்த்துக் கொண்டிருந்தன. நான் பேசாமல் என் விடுதிக்கு வந்துவிட்டேன்.

அதன் பிறகு நான்கு நாளாயிற்று. அந்தப்பெண் என் கண்ணில் படவேயில்லை. அவள் குரலைக்கூட நான் கேட்கவில்லை. ஒருக்கால் அந்தப் பெண் மட்டும் ஊருக்குப் போய் விட்டிருப்பாளோ என்று கூட நினைத்தேன். அன்று மாலை டிபனுக்கு 'சந்தேஷ்' கொண்டுவந்து வைத்திருந்தான் என் சமையல்காரன் செல்லப்பா. "நீ எப்போது கற்றுக் கொண்டாய் இதைச் செய்ய?" என்று கேட்டேன் நான்.

ஒரு நிமிஷம் மென்று விழுங்கிய அவன், "பக்கத்துப் போர்ஷனிலிருக்கிற அம்மா கொடுத்தார்கள். 'உங்களுக்கு சந்தேஷ் என்றால் பிடிக்கும். நீயே செய்ததாகச் சொல்லிக் கொடு' என்றாங்கள்" என்றான்.

நான் திகைத்துப் போய் விட்டேன்! 'இவள் யார்? நான் யார்? இவள் ஏன்

என்னிடம் நெருங்கவேண்டும்? எனக்கு 'சந்தேஷ்' பிடிக்கும் என்பது இவளுக்கு எப்படித் தெரிந்தது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பாவம்! அன்று என்ன என்னவோ சொல்லிவிட்டேன். அதன் பிறகு அவள் என் கண்ணில்கூடப் படவில்லையே! அன்று நான் சொன்னதும் மலர் போல் மலர்ந்திருந்த அவள் முகம் வாடிச் சுருங்கி விட்டதே!' என்றெண்ணிப் பரிதவித்தேன். மறுபடியும் அவளைப் பார்க்கும்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

மேலும் இரண்டு நாட்களாகியும் அவளைப் பார்க்க முடியவில்லை. என் உள்ளம் உருகித்தவித்தது. என் சொல்லுக்கு எத்தனை மதிப்புக் கொடுத்திருக்கிறாள்! எனக்கும் அவள் பேச்சைக் கேட்காமல் பொழுது போவது கஷ்டமாக இருந்தது. நிச்சப்தமான தனிமை புளிக்க ஆரம்பித்துவிட்டது. என் லக்ஷ்மி பொறுமையாக இருப்பாள். அவள் நடப்பதில் அடக்கம்; பேசுவதில் அடக்கம்; பார்வையிலும் அடக்கம். அவளுக்கு இந்தப் பெண் முற்றும் மாறான சுபாவமுடையவள். இவள் பேச்சில் விறுவிறுப்பு; நடப்பதில் விறுவிறுப்பு; பார்வையிலும் குறுகுறுப்பு. அது ஒருவிதத்தில் அழகாக இருக்கிறதென்றால் இதுவும் ஒருவிதத்தில் அழகாகத்தான் இருக்கிறது. இது என்ன மடமை! என் மனம் ஏன் லக்ஷ்மியுடன் இவளை ஒப்பிட்டுப் பார்க்கிறது என்று எண்ணியபோது எனக்கே அவமானமாக இருந்தது. எங்கெங்கோ மனம்போன வழியெல்லாம் நடந்துவிட்டு இருட்டும் வேளைக்கு அந்தப் பாறைக்குப் போனேன். தூரத்தில் வரும்போதே கிழவர், அந்தப் பெண், பேபி மூவரும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அந்தப் பெண் எதையோ எழுதிக் கொண்டிருந்தாள். அவர்களைத் தாண்டிச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்து கொண்டேன். அவள் நான் வந்ததைக் கவனிக்கவில்லை. எழுதி முடிந்துவிட்டது போலிருக்கிறது. நோட்டை மூடிக் கீழே வைத்தாள். அடுத்த நிமிஷம் 'ஜில்'வென்று ஒரு காற்று வீசியது. நோட்டு ஒரு தடவை புரண்டு அலறியது. அடுத்த கணம் அதிலிருந்த ஒரு காகிதம் காற்றில் அடித்துக்கொண்டு என் முகத்தில் வந்துவிழுந்தது. சட்டென்று பிடித்துக்கொண்டேன். 'எனக்குத்தான் எழுதியிருப்பாளோ? வேண்டுமென்று தான் காற்றில் விட்டாளோ!' என்று எண்ணிக் கொண்டே அவசர அவசரமாகப் படிக்க ஆரம்பித்தேன். 'சௌபாக்கியவதி சரஸ்வதிக்கு' என்று ஆரம்பித்திருக்கவே மேலே படிக்கக்கூடாது என்று நினைத்தேன். என்றாலும் அந்தக் கையெழுத்தை எங்கோ பார்த்திருப்பது போல் தோன்றியது. அப்போது அங்கே வந்த அந்தப் பெண் "அதை என்னிடம் கொடுத்துவிடுங்கள்" என்று பரபரப்புடன் கேட்டாள். பழைய குறும்பிற்குப் பதில் அவள் கண்களிலே ஆழ்ந்த சோகம் படர்ந்திருந்தது.



"நான் இதைப் படிக்கவில்லை. இந்தக் கை எழுத்து எனக்கு மிகவும் பழக்கப்பட்டதாக இருப்பதுபோலத் தெரிகிறது. இதை யார் எழுதியது என்று மட்டும் பார்க்கலாமா?" என்று பணிவாகக் கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. "உனக்கு இஷ்டமில்லாவிட்டால் நான் பார்க்கவில்லை" என்று சொல்லி அந்தக் கடிதத்தைக் கொடுக்கப் போனேன். அவள் அதை வாங்கவில்லை. என் ஆவலையும் அடக்க முடியாமற் போகவே கடிதத்தின் கீழே போட்டிருந்த கை எழுத்தைப் பார்த்தேன். தூக்கிவாரிப் போட்டது எனக்கு. "சௌந்தரம்மாள்" என்ற என் அம்மாவின் கை எழுத்து தெளிவாகத் தெரிந்தது. மடமடவென்று கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தேன் :—

க்ஷேமம்; க்ஷேமம் தெரிவிக்கவும். சிதம்பரநாதன் முன்போலவே தான் இருக்கிறானா? அவன் கவலையே எனக்குப் பெரிதாகப் போய்விட்டது. அந்தக் குற்றாலநாதனாகிலும் அவன் மனதைத் திருப்பமாட்டானா என்று தினமும் பிரார்த்திக்கிறேன். அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை நீதான் கவனித்துக் கொள்ளவேண்டும்.

இப்படிக்கு,
உன் கோடிவீட்டு மாமி,
சௌந்தரம்மாள்

"நீ யார்? அம்மாவை உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஆவலுடன்

கேட்டேன். அப்போதும் மௌனம் சாதித்தாள் அவள்.

என் பொறுமை எல்லை கடந்துவிட்டது. "நீ இப்படிப் பேசாமடந்தையாக மாறிப் போனது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. நீ பழையபடி இருந்தால்தான் எனக்குப் பிடிக்கிறது. ஊம், நான் கேட்பதற்குப் பதில் சொல்" என்று உரிமையுடன் அதட்டினேன்.

"நான் வக்கீல் சாம்பசிவ ஐயரின் பெண் சரசா!" என்று மெள்ளக் கூறினாள் அவள்.

"அம்மா சொல்லிக் கொண்டிருந்த வக்கீல் வீட்டுப் பெண் நீதானா?" என்று வியப்புடன் கூறிய நான் "போக்கிரிப் பெண்ணே! நீ யார் என்று சொல்லாமலேயே இத்தனை ஆட்டம் ஆடினாயே! ஆகட்டும். சொல்கிறேன்" என்று பொய்க் கோபத்துடன் கூறினேன்.

அடுத்த கணம் அவள் முகத்திலே பழைய குறும்பு மிளிர்ந்தது. ஓடிப் போய்த் தன் தாத்தாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"எங்கே குழந்தை எழுந்து போனாய்?" என்றார் கிழவர்.

"ஒரு தேவாரத் தாள் காற்றிலே பறந்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டு வந்தேன், தாத்தா!" என்று உரக்கச் சொன்னாள்.

நான் அவளைத் திரும்பிப் பார்க்காமல் கோபமாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டேன்.

அடுத்த நிமிஷம் அவள் பாட ஆரம்பித்தாள்:—டிடிம டிடிம டிடிம டிம டிம.

"என்ன பாட்டு குழந்தை பாடுகிறாய்?" என்றார் கிழவர்.

"ராமாபி ராமா" என்றாள் பேத்தி.

நான் என் நடிப்பை மறந்து 'களுக்' என்று சிரித்துவிட்டேன்.

அமர சிருஷ்டி

வ. சா. நாகராஜன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆகா! அங்கே தங்கியிருந்த அந்தச் சில மாதங்களில் தேவ லோகத்தைச் சேர்ந்தவர்கள் கூட அனுபவிக்க முடியாத ஆனந்தத்தை அனுபவித்தேன்.

காஞ்சனையுடன்கூட நான் கொண்டு வந்திருந்த ஒரே பொருள் என் வாத்தியம் தான். ஆகா! அந்த நாட்களில் நிலவு பாயும் இரவுகளில், மொட்டை மாடியில் நான் என்னை மறந்து, காஞ்சனையையும் மறந்து, இந்த உலகையும்கூட மறந்து வாத்தியம் வாசிப்பேன். நான் வாசிப்பது ராகமோ, கீர்த்தனையோ, சரணமோ, பாட்டோ எதற்கும் காஞ்சனை நாட்டியம் ஆடுவாள். என் மனத்திலே லய ஞானமோ, பாவமோ ஒன்றும் இல்லை. காஞ்சனையின் கருநீல விழிதான் என் உள்ளத்தில் தோன்றியது.

கடைசி வரையில், அவள் சாகும் வரையில்—ஆமாம்; அவள் செத்துவிட்டாள்; அவள் உடலுக்கு இந்தப் பாவியே என் கைகளால் கொள்ளிவைத்து விட்டேன். அந்த மிருனை நதிக்கரையில்—ஒரு நாளாவது "பாறு தாங்கிய காடரோ" பாடி அபிநயம் பிடிக்காமல் இருக்கமாட்டாள்.

இந்தமாதிரி எங்களுடைய இன்ப வாழ்வு போய்க் கொண்டிருந்த போது தான் கஷ்டங்கள் ஆரம்பித்தன.

திடீரென்று அவள் உடலுடன் மனமும் சோர ஆரம்பித்தாள். அதைக் கண்டதும் இருந்த உற்சாகம் எல்லாம் எங்கோ பறந்து விட்டது.

ஒரு நாள், "காஞ்சனா, இந்த மாதிரி இருந்து என் மனத்தை வதைக்கிறாயே! நீ ஏன் இப்படி மாறிவிட்டாய்? உனக்கு அம்மாவையும் ஊரையும் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதா? சொல்லு. அழைத்துக் கொண்டு போகிறேன்" என்றேன். அவள் என்னை மிகவும் பரிதாபமாகப் பார்த்தாள். ஐயோ! அந்தப் பார்வையில் அவள் ஒரு அன்னியனைப் பார்ப்பது போன்ற பாவம் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். "என்ன காஞ்சனா? உன் மனத்தில் இருப்பது என்னவானாலும் சொல்லு. எனக்காக உன் அம்மா, ஊர்—எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்த நீ வருத்தப்படுவதைக் கண்டு என் மனம் தாங்காது" என்றேன். அவள் முதலில் ஒன்றுமே சொல்லவில்லை. என் மனத்தின் உள் ஆழத்தைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தாள். "உங்களுக்கு ஊருக்குப் போகவேண்டும்போல் இருக்கிறதா?" என்று கேட்டாள். "இல்லை காஞ்சனா! ஆனால் உன் உடம்பு மெலிவதைக் காணும் பொழுது அப்படியாவது செய்யலாமோ என்று நினைக்கிறேன்" என்றேன்.

காஞ்சனா ஒன்றுமே சொல்லவில்லை. நாளாக ஆக அவள் துரும்பாக ஆனாள்.

நான் செய்வது என்னவென்றே புரியாமல் தடுமாறினேன். மருந்தும் மாயமும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை. கடைசியில் ஒருநாள், எனக்காக, என் ஒருவனுடைய ஆனந்தத்துக்காக, என் வார்த்தையை நம்பி, சகலத்தையும் துறந்து, பெற்ற தாயைக் கூட மறந்து என்னுடன் கிளம்பிவந்த காஞ்சனா என்னை எங்கேயோ கண்காணாத காட்டில் தவித்து உருகச் செய்து விட்டுப் போய்விட்டாள். பாவி! கடைசி வரையில் மனத்திற்குள் எதையோ நினைத்து நினைத்து உருகிக் குமைந்து அதனாலேயே சீக்கிரம் போய் விட்டாள்.

என் உயிருக்கு உயிராக இருந்த அவளை மிதுனா நதிக் கரையில் வைத்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, நமக்காகச் சர்வத்தையும் துறந்த அவளுக்காக நாமும் ஏன் அந்த எரிகிற நெருப்பிலே விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளக் கூடாது என்று எண்ணினேன். ஆனால் அப்படிச் செய்ய வில்லை. காஞ்சனா போன பின் எனக்கு அந்த வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை.

ஆகவே, அன்று இரவே, அங்கிருந்து கிளம்ப ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். காஞ்சனையின் ஒவ்வொரு சாமானும் என் சோகத் தீயில் எண்ணெயை வார்த்தது. அவளுடைய துணிமணிகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு மூட்டையாகக் கட்டினேன். அப்பொழுது ஒரு புடவைக்குள்ளிருந்து கடிதம் ஒன்று கீழே விழுந்தது. தாங்கமுடியாத ஆவலுடன் அதை எடுத்துப் படித்தேன்.

என் உள்ளம், சுக்கு சுக்காகச் சிதறியிருந்த என் உள்ளம், அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் இரும்பாக மாறியது. கடிதத்தைப் படிப்பதற்கு முன்பு பைத்தியம் பிடிக்கும் நிலையில் இருந்த நான், கடிதத்தைப் படித்து முடித்த பிறகு என் உள்ளத்தை வைரம் போல உறுதியாக ஆக்கிக் கொண்டேன்.

அந்தக் கடிதத்தைப் பூரணம் எழுதியிருந்தாள். அவளுக்கு எப்படி நான் மிதுனப் பூரில் இருந்த வீட்டு விலாசம் தெரிந்தது? அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது கிட்டத்தட்ட இதுதான்:

"காஞ்சனா என்ற பெயரில் என் உடமையையும் உயிரையும் ஒரே சமயத்தில் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்ட பாதகியான உனக்கு என்ன எழுதுவது என்றே தெரியவில்லை. இப்படி கட்டின மனைவி ஒருத்தி இருக்க அவளுக்கு வாழ்க்கை முழுவதும் துரோகம் செய்து விட்டு ஓடி வரும்படி அவளுடைய கணவரைச் சதி செய்து விட்ட நீயாகிய நீ வாழ்வாயா? உலகமும் சத்தியமும் நீ இன்பத்துடன் இருப்பதைப் பார்த்து கொண்டே இருக்கும் என்று நினைக்கிறாய்! நீ வாழமாட்டாய்; சாப்பாட்டுக்கும் குடிக்கத் தண்ணீருக்கும் கூட இல்லாமல் சாவாய்! ஒரு பெண் கண்ணீர் விட ஒரு பெண் வாழ முடியுமா?"


இந்த மாதிரி இன்னும் என்னவெல்லாமோ இருந்தது அந்தக் கடிதத்தில். பூரணம் எழுதியிருந்த அந்தக் கடிதம் எங்கெங்கெல்லாமோ போய்விட்டுப் பிறகு என் பாங்கு விலாசத்துக்கு எப்படியோ வந்து சேர்ந்திருந்தது. நான் வெளியூர் போயிருந்த அன்று அந்தக் கடிதம் காஞ்சனையின் கையில் கிடைத்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் இருந்த சாப மொழிகளைப் படித்துவிட்டுத்தான் என் காஞ்சனை பித்துப் பிடித்தவள் மாதிரி ஆகிவிட்டாள். சாபம் பலித்துவிடுமோ என்ற பீதியிலேயே அவள் மடிந்து போயிருக்கிறாள்.

காஞ்சனை இவ்வுலகைவிட்டு மறைவதற்குக் கடைசியில் பூரணமா காரணமாக இருக்க வேண்டும்? காஞ்சனையின் வாழ்வைப் பார்த்து மனம் பொறாத பூரணமும் இனி இவ்வுலகில் இருக்கக் கூடாது என்று அந்தக் கணமே தீர்மானித்தேன். என் மனம் இரும்பாகியது.

மறுநாளே கல்கத்தா வழியாகக் கிளம்பி மாயவரத்துக்கு வந்தேன். என்னைக் கண்டவுடன் என்ன சாமர்த்தியமாக நடித்தாள் அவள்! "என்றைக்காவது ஒரு நாள் நீங்கள் திரும்பி வந்து விடுவீர்கள் என்று நான் நினைத்துக் கொண்டே இருந்தேன்" என்றாள்.

அன்று பகல் முழுவதும் அவளுடனும் அவள் தாயுடனும், என் மனத்திலிருப்பதை மறைத்துக் கொண்டு நடித்தேன்.





டாக்டரின் மனைவி:-ஆமாம்; நீங்கள் உங்களிடம் வந்த நோயாளிகளையெல்லாம் கஞ்சியே ஒரு வாரம் சாப்பிடச் சொன்னீர்களே, ரொம்ப சந்தோஷம்!

டாக்டர் (ஆச்சரியத்துடன்) :-ஏன்?

டாக்டரின் மனைவி:-அவர்களுடைய ரேஷன் கார்டை வாங்கிக் கொள்ளலாமல்லவா?

இரவு வந்தது. பூரணத்தின் எண்ணத்துடனே காஞ்சனை இறந்தது மாதிரி காஞ்சனையின் எண்ணத்துடனேயே பூரணமும் மடியவேண்டும் என்ற தீர்மானத்தில் காஞ்சனை அணிந்து கொண்டிருந்த வைர மோதிரத்திலிருந்த வைரத்தைப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு, பூரணத்தின் வரவை எதிர்நோக்கி அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தேன்.

அவள் வந்தாள். மிகவும் சரளமாகப் பேசுவதுபோல நடித்தேன். நான் காஞ்சனையை நம்பவே இல்லை என்றும், அவளுடைய அழகுக்காகத்தான் அவளுடன் போனதாகவும் சொன்னேன். என்ன விசித்திரம்! காஞ்சனைக்குக் கடிதம் எழுதத் தெரிந்திருந்த அந்தக் கள்ளி ஒன்றுமே தெரியாததுபோலக் 'கல கல' வென்று சிரித்தாள். "நீங்கள் வந்துவிடுவீர்கள் என்றுதான் எனக்குத் தெரியுமே! காஞ்சனை என்ன இருந்தாலும்........." என்று இழுத்தாள். நான் பல்லைக் கடித்துக் கொண்டேன்.

கடைசியில் அவள், "கோபிக்காதீர்கள்...... ஒன்றை உங்களுக்குக் காண்பிக்கணும்" என்று சொல்லிவிட்டு வெளியில் போனாள். நான் கூஜாவிலிருந்த பாலை டம்ளரில் விட்டு அதில் வைரப் பொடியைத் தூவுவதற்கும் பூரணம் ஒரு கடிதத்துடன் அறை வாயிலில் வருவதற்கும் சரியாக இருந்தது.

"அது என்னங்க அது?" என்றான்.

"இது மருந்து. இதைக் குடிக்காவிட்டால் எனக்குத் தூக்கமே வருவதில்லை" என்று சொல்லிக் கொண்டே இருந்தபோது அவள் தன் கையிலிருந்த கடிதத்தை என்னிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்.

'அது என்ன கனவா,.........காஞ்சனா தன் தாய்க்கு எழுதி யிருந்தாள்.

அம்மாவுக்கு. இங்கே நானும் அவரும் சௌக்கியம். அதுக்குள்ளே அவரை விட்டுவிட்டு நான் வந்தால் நன்றாயிருக்குமா? அவருடைய சொத்தைப் பற்றி நேற்றுக் கேட்டேன். எல்லாவற்றையும் என் பேரிலேயே எழுதி வைத்து விடுவதாக நேற்றுத்தான் என்னிடம் சொன்னார். இன்னும் சில நாட்கள் பொறுத்துப் பார்த்துக் காரியத்தை முடித்துக் கொண்டு வரலாம் என்றிருக்கிறேன்."

எனக்கு அந்தக் கடிதத்தை மேலும் படிக்கப் பிடிக்கவில்லை. என் காஞ்சனாவா அதை எழுதி யிருப்பாள்? ஒரு போதும் இராது. எல்லாம், என் மனத்தைத் திருப்ப இந்தக் கள்ளி, இந்தப் பாதகி, இந்தப் படு பாவி செய்யும் வேலையாகத்தான் இருக்கும்!

கடிதத்தைப் பாதி படித்தவுடனேயே, அதைக் கீழே எறிந்துவிட்டுப் பூரணத்தை முரட்டுத் தனமாகப் பிடித்துக் கீழே தள்ளினேன். அடுத்த நிமிஷமே வைரப் பொடி கலந்த அந்தப் பாலை அவளுடைய வாயில் என் கையால் ஊற்றினேன். அவள் முதலில் மிரண்டவள், என் கையால் பால் கொடுப்பதை நினைத்து ஆனந்தத்துடன் கண்களைப் பாதி மூடியபடியே குடித்தாள்.

சில நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும். பூரணம் துடிக்க ஆரம்பித்தாள். அவளுடைய வாயிலிருந்தும் காதுப் பக்கத்திலிருந்தும் ரத்தம் கொட்ட ஆரம்பித்தது. அவள் பேசவே முடியாமல் என்னைப் பார்த்து மிரண்டு மிரண்டு விழித்தாள்.

"காஞ்சனைக்குக் கடிதம் எழுதி அவளைக் கொன்றதும் இல்லாமல் இப்பொழுது என்னிடமே உன் வரிசையைக் காண்பிக்க ஆரம்பித்து விட்டாயா? நீ குடித்தது என்ன, தெரியுமல்லவா? காஞ்சனையின் கை விரலில் இருந்த வைர மோதிரத்தின் பொடி ...... படு பாவி! ...... அவளையும் பறி கொடுத்து என்னையும் உயிருடன் சாக அடித்து விட்டாயே........." என்று உள்ளக் குமுறல் அடங்க ஆங்காரத்துடன் வார்த்தைகளைக் கொட்டினேன்."

பூரணம் ஏதோ பேச முயன்றாள். அவள் தொண்டையில் வார்த்தைகள்

வருவதற்குள் ரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ஏதோ ஜாடை காட்டியபடியே உயிரை விட்டுக் கொண்டிருந்தாள். காஞ்சனையைக் கொன்றதன் வினைதான் இது என்று அவளுடைய மனதில் படும்படி சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதற்குள் அவளுக்குப் பிரக்ஞை தவறி விட்டது. தான் குடித்தது வைரப் பொடி என்பதும் தான் இனிப் பிழைக்க முடியாது என்பதும் தெரிந்த பின்னருங் கூட அவள் முகத்தில் கலக்கத்தின் அறிகுறி தோன்றவில்லை. இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவளுடைய உடலில் உயிர் இல்லாவிட்டாலும் முகத்தில் ஒரு நிம்மதி இருந்தது. காஞ்சனை கூடத்தான் ஒரு நாள் இவள் மாதிரிக் கிடந்தாள். ஆனால் இறந்த பிறகு காஞ்சனையின் முகத்தில் பீதி அல்லவா குடிகொண்டிருந்தது!

பூரணத்தின் நிம்மதி தோய்ந்த முகம் என்னை என்னவோ செய்தது. இத்தனை நேரம் வைரம் போல் உறுதியுடன் இருந்த என் மனம் 'ஒருகால் பூரணம் அந்தக் கடிதத்தை எழுதினாள் என்று நான் நினைப்பது தவறாக இருக்குமோ?' என்று நினைத்தது. அந்த யோசனை என் நினைவில் தோன்றியதுதான் தாமதம்; என் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை நடுங்கியது.

குனிந்து பூரணத்தைப் பார்த்தேன். அவளுடைய நடுநெற்றியிலிருந்த குங்குமப் பொட்டு அவளுடைய உள்ளம் களங்கமற்றது என்று சொல்வது போலிருந்தது.

மேலும் அங்கேயே நின்று கொண்டிருந்தால் பைத்தியம் பிடித்து விடும் போல் தோன்றியது. கடைசியாக ஒரு தடவை பூரணத்தைப் பார்த்தேன். நான் தொட்டுத் தாலி கட்டியவள். பாவம், அவளுக்கு இந்த முடிவா ஏற்படவேண்டும்? ஆனால் காஞ்சனைக்குக் கடிதம் எழுதிய அந்த நீலி சாகவேண்டியதுதான். ஆனால் பூரணம்தான் அந்தக் கடிதத்தை எழுதினாள் என்பதற்கு என்ன ருசு?

இப்படி நினைக்க நினைக்க, கலங்காத என் நெஞ்சமும் கலங்கியது. பயம் மனத்தை உந்த உந்த எதிரே பூரணத்தின் பேய் நிற்பது போன்ற பிரமை ஏற்பட்டது. அதையாவது சமாளித்துக் கொள்ளலாம் என்றால், மறுநாள் போலீஸ் விசாரணை......

மாயவரத்திலிருந்து ராத்திரி சென்னையை நோக்கிக் கிளம்பிய போட் மெயிலில் ஏறி விழுப்புரத்துக்கு வந்து அங்கிருந்து புதுச்சேரியில் போய் இறங்கும்வரை என் உயிர் என் உடலில் இல்லை.

புதுச்சேரிக்கு வந்த பிறகும் என் மனத்தில் நிம்மதி இல்லை. எப்படி இருக்கும்? பைத்தியமே பிடித்துவிட்டது. அந்த மாதிரிப் பைத்தியமாக எவ்வளவு காலம் இருந்தேன் என்று கூட எனக்குத் தெரியாது!

அப்போதெல்லாம் காஞ்சனாவின் அபிநயப் பாடல்தான் எனக்குச் சிறிது ஜீவாதாரத்தைத் தரும்! அதை எனக்குள் அடிக்கடி பாடிக்கொண்டிருப்பேன்!

ஒருக்கால் காஞ்சனா இவ்வளவு இளம் வயதில் இறக்க நேரிடும் என்று தெரிந்துதான் கடவுள் அவளுக்கு அவ்வளவு அருமையான கலையை அளித்தாரோ என்னவோ? அன்று சக்கரபாணி கோயிலில் 'பாறு தாங்கிய காடரோ' என்ற பாட்டுக்கு அவள் அபிநயம் பிடித்ததை மறந்து விட்டாயா?" என்ற கேள்வியுடன் தங்கப்பன் நிறுத்தினான்.

★

நான் வாய் திறக்காமல் கேட்டுக் கொண்டிருந்தேன். வெகுநேரம் இருவருமே மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தோம். கடைசியில் தங்கப்பனே மௌனத்தைக் கலைத்து, "நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய், தியாகு?" என்று கேட்டான்.

"நான்......நான் கதை எழுதிப் பிழைக்கும் வாழ்வை மேற்கொண்டிருக்கிறேன். இன்றுதான் இந்தப் பிழைப்பை ஏன் மேற்கொண்டோம் என்று இருக்கிறது" என்றேன்.

"என்ன தியாகு?" என்று கேட்டான் தங்கப்பன். நான் பதில் சொல்லாமல் கடலை நோக்கினேன்.

இரவு வெகு நேரம் ஆகியிருந்ததால் கடலிலிருந்து அடித்த காற்று மிகவும்



குளிர்ந்ததாக இருந்தது. தங்கப்பன் தன் மேல் வஸ்திரத்தைப் பிரித்து உடலைப் போர்த்திக் கொண்டு, "பேசிக்கொண்டே போகலாம், தியாகு! எழுந்திரு!" என்றான்.

நான் எழுந்திருக்கவில்லை. "நீ போ, தங்கப்பா! நான் உன்னை நாளைக்குப் பார்க்கிறேன்" என்றேன். "நாளை நான் பாண்டிக்குப் போகிறேனே!" என்றான். "நிச்சயம் நாளைக் காலையில் உன்னை வந்து பார்க்கிறேன்!" என்றேன்.

தங்கப்பன் எழுந்து நடந்தான். அவனுடைய வேஷ்டி பீச் ரோடில் மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து விட்டுத் தண்ணீர்க் கருகில் சென்றேன்.

பல வருஷங்களுக்குப் பின் பார்த்த நண்பனைப் பிரிந்து தனியாகச் சில நேரம் நான் இருக்க விரும்பியதற்குத் தகுந்த காரணம் இல்லாமல் இல்லை! என் மனம் அப்பொழுது குழம்பிக் கொண்டிருந்த அவஸ்தையைக் கேட்டால் ......!

நடேச பிள்ளை இறந்த பிறகு ஒவ்வொரு தடவை நான் மாயவரம் போகும் போதும், "இனிமேல் அவரு திரும்பியே வரமாட்டாருங்களா?" என்று குமுறும் உள்ளத்துடன் பூரணம் கேட்பாள். அவள் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல், "வருவான், என்றைக்காவது ஒரு நாள் நிச்சயம் வருவான்!" என்று ஆறுதல் சொல்வேன். "அவரு விலாசம் தெரிந்தால் கடிதமாவது போட்டுப் பார்க்கலாம்" என்று ஒரு நாள் பூரணமே என்னிடம் சொன்னாள்.

அன்றிலிருந்து சென்னையில் இருந்த சில நண்பர்களுக்கும் வேறு ஊர்களில் இருந்த நண்பர்களுக்கும் தங்கப்பனைப் பற்றிக் கடிதம் எழுதினேன். கடைசியில்தான் தங்கப்பன் மிதுனப்பூரில் இருக்கிறான் என்று எப்படியோ தெரிந்தது.

பூரணம் படும் கஷ்டத்தைச் சகியாததனால் நானே நேரில் போய்த் தங்கப்பனை அழைத்து வந்துவிடலாம் என்று முதலில் நினைத்தேன். ஆனால் தங்கப்பன் என் பேச்சை மதித்துக் காஞ்சனையை விட்டு விட்டு என்னுடன் வரவேண்டுமே! அது நடக்கக் கூடிய காரியமா?

ஆகவேதான் வேறு என்னென்னவோ வழிகளையெல்லாம் கையாண்டு பார்த்தேன்.

ஆம், தங்கப்பனுக்குக் காஞ்சனை மீது வெறுப்பு ஏற்படச் செய்ய முயன்றேன். அதற்காகப் பூரணம் காஞ்சனைக்கு எழுதுவது போல நானே ஒரு கடிதம் எழுதி அதைத் தங்கப்பன் விலாசத்துக்கு அனுப்பினேன்.

ஆனால் நடுவில் விதி குறுக்கிடவே, தங்கப்பன் ஊரில் இல்லாத சமயம் பார்த்து அந்தக் கடிதம் மிதுனப்பூருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. அதைப் படித்த காஞ்சனை பீதிக்குப் பலியாகிவிட்டாள்.

இதையெல்லாம் சற்றும் எதிர்பாராத நான், காஞ்சனைக்குக் கடிதம் எழுதியதுடன் நிற்கவில்லை. கதை எழுதும் என் மூளை விசித்திரமாக வேலை செய்தது.

வெறும் வார்த்தைகளால் பூரணத்தைத் தேற்றுவதை விட வேறு வழிகளால் அவளைத் தேற்ற நினைத்தேன். அதனால் காஞ்சனை தன் தாய்க்கு எழுதிய மாதிரி ஒரு கடிதம் நானே எழுதி அதைக் கொண்டு போய்ப் பூரணத்தினிடம் கொடுத்தேன்.

பேதைப் பெண்! அந்தக் கடிதத்தைப் படித்ததும், தன் கணவன் சீக்கிரம் திரும்பி வந்து விடுவான் என்று நினைத்தாள். அவள் நினைத்தபடி அவள் கணவன் வரத்தான் வந்தான். ஆனால் அவள் கனவு கண்டுகொண்டிருந்தபடி நடக்கவில்லையே!

தங்கப்பனையும் பூரணத்தையும் முதலில் சேர்த்து வைத்து விட்டுப் பிறகு காஞ்சனையையும் அவர்களுடன் சேர்த்து வைத்துவிடலாம் என்ற நினைவில் நான் செய்த பைத்தியக்கார யோசனை அந்த மூன்று பேர்களுடைய வாழ்க்கையையுமே அல்லவா குலைத்துவிட்டது?

அற்ப ஆயுசில் பயங்கரமாக இறந்த காஞ்சனையின் ஆவியும் பூரணத்தின் ஆவியும் என்னைச் சும்மா விடுமா?



திருடன்:—இந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் சுட்டு விடுவேன்!

வீட்டுக்காரர்:—நான் எங்கேயும் போகவில்லை! ஆனால் மாடியிலிருக்கும் என் மனைவியை அழைப்பதில் ஆட்சேபனையில்லையே?

திருடன் (திகைப்புடன்):—ஏன்?

வீட்டுக்காரர்:—என் மனைவி இருபது வருஷங்களாகத் திருடனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். அவளுக்கு உன்னைக் காட்டலாம் என்பதற்காகத்தான்!

சித்தியின் பெண்

வி. எஸ். ஆர்.

"உடன் தகப்பனாரின் தேக நிலை மோசமாக இருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்" என்ற தந்தியைத் தன் கணவன் படித்ததும் திடுக்கிட்டாள் அம்புஜு. அவளது தகப்பனார் நடேச ஐயருக்கு எண்பதுக்கு மேலாகியிருந்தது. நிச்சயமாக அப்பா பிழைக்கமாட்டார் என்று அம்புஜுவின் உள்ளுணர்வு அறிவித்தது. இருபது வருஷகாலமாகத் தந்தைக்கும் மகளுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு, போக்குவரத்து இல்லாமலிருந்தாலும், பெற்ற தகப்பனல்லவா! கண்களில் பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "சரி, இன்று இரவு கிளம்ப வேண்டியதுதான்!" என்றாள்.

"காய்ச்சலில் கிடந்து இன்றுதான் தலைக்கு ஜலம் விட்டுக் கொண்டிருக்கிறாய். ரயில் பிரயாணம் செய்ய முடியுமா!" என்றார் அம்புஜுவின் கணவர் கோபாலஸ்வாமி.

"கண்ணை மூடுமுன் முகவிழிப்புக் கூட இல்லாமல் போக வேண்டுமா! உங்களுக்கு நாலு நாள் லீவு கிடைக்குமா!" என்றாள் அம்புஜு.

"நானும் வரவேணுமா!" என்றார் கோபாலஸ்வாமி.

"அப்பா கண்ணை மூடினால் கவனிப்பதற்கு மனிதர்கள் வேண்டாமா! வீடு வாசல், நில புலன் இருக்கின்றன. விவகாரம் என்று வந்தால்......" என்று இழுத்தாற்போல் சொன்னாள் அம்புஜு.

"......ஆமாம், ஆமாம், உனக்கு நியாயமாகச் சேரவேண்டிய ஆஸ்தி கிடைக்க வேண்டாமா! ஞானகியைப் போல் நீயும் அவர் பெண்தானே! என் அம்புஜு! அந்தக் கிழவன் எமகாதகனாச்சே, எல்லாச் சொத்தையும் ஞானகிக்கு உயில் எழுதி வைத்திருப்பானே! உனக்கு ஒரு சல்லிக் காசு கூட வைக்காமல் போயிருந்தால் நாம் வேலை மெனக்கட்டு அங்கே போவதில் என்ன பிரயோஜனம்!"

"பரவாயில்லை, வாருங்கள்" என்றாள் அம்புஜு.

"முந்நூறு மைல்கள்தானே! நெய்யூருக்கு நம் காரிலேயே போய் விடலாமே!" என்றார் கோபாலஸ்வாமி.

ஞானகி என்று கோபாலஸ்வாமி குறிப்பிட்டது, நடேச ஐயரின் இளைய தாரத்தின் பெண்ணான ஞானகியைத்தான். அம்புஜு, மூத்தாளின் பெண். நடேச ஐயர் நெய்யூர்க் கிராமத்தில் பெரிய மிராசுதாராக விளங்கி வந்தார். எவ்வளவோ குணவானான நடேச ஐயர் செய்த பெரும் பிசகு இரண்டாந்தாரக் கல்யாணம் செய்து கொண்டதுதான். ஆனால் இரு மனைவியர்களுக்கும் சண்டை சச்சரவு ஏற்படாமல் சாமர்த்தியமாக அவர் நிர்வகித்து வந்தார். இந்தச் சமயத்தில் எதிர் பாராதது நடந்தது. அம்புஜு பிறந்ததும் அவள் தாயார் பிரசவ அறையிலேயே காலமாகி விட்டாள். அதுவரை மேலுக்கு ஒற்றுமைபோல் இருந்த குடும்பம் பிளவுபட்டது. குடும்பத்தில் குரோதமும் மனக் கசப்பும் ஏற்பட ஆரம்பித்தன. நடேச ஐயர் எதிர்பார்த்தபடி இளையாள், மூத்த தாரத்தின் பெண்ணை அன்புடன் போஷித்துக் காப்பாற்றவில்லை. சில வருஷங்களுக்கெல்லாம் இளையாளுக்கு ஞானகி பிறந்தாள். இதனால் நிலைமை மேலும் சிக்கலாயிற்று. மூத்தாள் பெண்ணான அம்புஜுவை ஒருவிதமாகவும் தன் பெண் ஞானகியை வேறுவிதமாகவும் தான் நடத்தி வந்தாள். ஆரம்பத்தில் இளையாளைத் தம் வழிக்குக் கொண்டு வர முயற்சித்துக் கடைசியில் நடேச ஐயர் தோல்வியுற்றார். சித்தி தன்னை படுத்தி வைத்ததை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் அம்புஜுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

கடைசியில், பட்டணத்தில் ஒரு ஏழைக் குமாஸ்தாவுக்கு அம்புஜுவைக் கொடுக்க சித்தி நிச்சயித்தாள். நடேச ஐயரின் அந்தஸ்துக்கு வேறு நல்ல மாப்பிள்ளை கிடைத்திருக்கக் கூடும். அதற்காக அம்புஜு குறைப் பட்டுக் கொள்ளவில்லை. சித்தியின் கொடுமையிலிருந்து தனக்குக் கிடைத்த விடுதலையை எண்ணி மகிழ்ந்தது அவள் மனம்.

கல்யாணமாகிப் புக்ககம் வந்த அம்புஜு பிறந்தகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. நடேச ஐயரும் மகளுக்குக் கடிதம் எழுதவில்லை. சில வருஷங்களுக்கெல்லாம் சித்தி இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. "இந்த ராட்சஸி இறந்ததற்கு நான் ஏன் போகவேண்டும்!" என்று போகாமலிருந்து விட்டாள் அம்புஜு.

பின்னர், நெய்யூரிலிருந்து முகூர்த்தப் பத்திரிகை வந்தது. ஞானகிக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதைத் தெரிந்து கொண்டாள் அம்புஜு. அவள் கணவனாக வரப்போகிறவன் எம். ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்தான். அம்புஜுவின் உள்ளத்தில் பொறாமை உண்டாகத்தான் செய்தது. "என்னை முப்பது ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தா கழுத்தில் கட்ட வேண்டும். ஆனால் ஞானகிக்கோ எம். ஏ. படித்த கணவன்! நாளைக்கு நூறு, ஆயிரம் சம்பாதிக்கக் கூடியவன். என்ன அக்கிரமம் இது! என்ன ஓர வஞ்சனை!" என்று அம்புஜு மனம் புழுங்கினாள். முகூர்த்தப் பத்திரிகையுடன் ஞானகியிடமிருந்து கடிதமும் வந்தது.

"அன்புள்ள அக்கா, உனக்கு எவ்வளவு தான் கோபம் இருந்த போதிலும் என் கல்யாணத்துக்குக் கட்டாயம் வர வேண்டும்" என்று எழுதியிருந்தாள் ஞானகி.

அம்புஜு கோபத்துடன் தன் கணவனிடம் இந்தக் கடிதத்தையும் படித்துக் காண்பித்தாள். "அம்மாளுடன் சேர்ந்து கொண்டு இந்தக் கர்வம் பிடித்த கழுதை அடித்த கொட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. என்னைக் கூப்பிடுவதற்கு என்ன திமிர், பாருங்கள்! இவள் அகமுடையானின் பவிஷையும், அப்பா இவளுக்குச் செய்யும் சீர் வரிசைகளையும் பார்த்து நான் நொந்து சாக வேண்டும் என்று என்னைக் கூப்பிடுகிறதைப் பார்த்தீர்களோ இல்லையோ!" என்றாள் அம்புஜு ஆத்திரத்துடன்.



இதெல்லாம் பல வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள். ஆனால் இப்பொழுதோ அம்புஜுவின் வாழ்க்கையில் ஆச்சரியமான பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அவள் கணவர் கோபாலஸ்வாமி குமாஸ்தா வேலையை விட்டு ஒரு நகைக் கடையில் வேலையில் சேர்ந்தார். பிறகு, தம் மதி நுட்பத்தால், அந்தக் கடையிலே ஒரு கூட்டாளியாகி விட்டார். பங்குகளும் வைரங்களும், வாங்குவதிலும் விற்பதிலும் நிபுணராகி லட்சாதிபதியாகி விட்டார். இந்தச் சமாசாரத்தைக் கேள்விப் பட்ட நடேச ஐயர் மகளிடம் உறவு கொண்டாடிச் சில கடிதங்கள் எழுதினர். ஆனல் அம்புஜு ஒன்றுக்கும் பதில் எழுதவில்லே.

இந்தச் சமயத்தில் அம்புஜு கேள்விப்பட்ட ஒரு விஷயம் அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. ஜானகியின் கணவன் ஆரம்பித்த ஒரு கம்பெனி கொடித்துப் போய் விட்டதென்றும், அதற்குப் பண உதவி செய்த நடேச ஐயருக்குக்கூடப் பல ஆயிர ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிய வந்தது. "நன்ருக வேண்டும் அப்பாவுக்கு. அப்பொழுதுதான் புத்திவரும்!" என்று எண்ணிக் குதூகலப் பட்டாள். தன் கஷ்டங்களேச் சொல்லி ஜானகி எழுதியிருந்த சில கடிதங்களுக்கு அம்புஜு பதில் எழுதாமல் போகவே, அவளிடமிருந்து கடிதம் வருவதும் நின்று போய்விட்டது.

இப்பொழுது அம்புஜு இருப்பதோ பெரிய பங்களா; வெளியில் செல்ல புத்தம் புதிய கார்; செல்வம் கொழிக்கும் வீட்டை விளங்க வைக்கப் பதினேந்து வயது நிரம்பிய அழகே உருவான பெண் சாந்தா இருந்தாள். சாந்தாவின் கல்யாணத்தைத் தடபுடலாக நடத்துவதற்கு திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் கெய்யூரிலிருந்து மேற் கண்ட தந்தி வந்தது.

தந்தி கிடைத்ததும் அம்புஜுவும் அவள் கணவனும் ஊருக்குப் பிரயாணமானர்கள். அன்று சாயங்காலமே கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். நடேச ஐயரின் உயிர் அன்று இரவு இழுத்துப் பறித்துக் கொண்டிருந்தது. மறு நாள் அவர் மூச்சு நின்றது. இளையாள் பெண் ஜானகி தன் பெண்ணுடன் காலே ரயிலில் வந்து சேர்ந்தாள். ஜானகியைப் பார்த்த அம்புஜுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் கழுத்திலும் கையில் நகையே இல்லே. வாடி உலர்ந்து, களே யிழந்து, கிழிசல் புடவையுடன் நின்ற அவளேப் பார்த்ததும் அம்புஜுவுக்கு என்னவோ செய்தது. அவள் பெண்ணுக்கும் சாந்தாவின் வயதிருக்கும். மூக்கும் முழியுமாக அழகாக இருந்தாள். ஆனல் அவள் தோற்றமும் ஏழ்மை நிலேயை வாய்விட்டுக் கூறியது.

"அக்கா!" என்று கூறி ஜானகி தன் சகோதரியை அணேத்தபோது, அம்புஜு தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள். பின்னர் அவளுடன் பேசியதில் ஜானகியின் கணவன் எண்பது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாக இருப்பதாகவும், அவளுக்கு நான்கு குழந்தைகள் இருப்பதாகவும் தெரிய வந்தது. அவர்கள் கஷ்டப்படுவதை அறிந்ததும் தன் மனம் ரகசியமாகச் சந்தோஷப்படுவதை அம்புஜு உணர்ந்தாள். பல தடவை ஜானகியும், அவள் பெண் ருக்மணியும் வலிய அவளுடன் பேச வந்தனர். ஆனல் அவள் அவர்களுடன் முகம் கொடுத்துப் பேசவில்லே.

★

ஒருவாறு காரியங்கள் நடந்து முடிந்ததும் விவகாரங்களேக் கவனிக்க ஆரம்பித்தனர். நடேச ஐயர் உயில் ஒன்றும் எழுதி வைத்திருக்கவில்லே. "உங்கள் அகத்துக்காரர் வர வேண்டுமா!" என்று ஜானகியைக் கேட்டார் கோபாலஸ்வாமி. "அவருக்கு லீவே கிடைக்கவில்லே. சொத்தில் எங்களுக்கு எவ்வளவு நியாயமாகச் சேர வேண்டுமோ அதைக் கொடுத்தால் வாங்கிக் கொண்டு போகிறேன்" என்ருள் ஜானகி.

வீடு, நிலபுலன்களே விற்ருல் நடேச ஐயரின் கடனேக் கொடுக்க முடியும் என்று தோன்றியது. பங்கிட்டுக் கொள்ளக் கூடிய சாமான்கள், நடேச ஐயர் இரும்புப் பெட்டியில் வைத்திருந்த நகைகள்தான். உள்ளூர்ப் பிரமுகர்கள் சிலரை வைத்துக் கொண்டு பெட்டியைத் திறந்து நகைகளே எடுத்தனர். நடேச ஐயர் இருதாரங்களுக்கும் செய்து போட்ட நகைகளில் முக்கியமானவை அங்கே இருந்தன. வைர மாலே, வைர வங்கி, தங்க ஒட்டியாணம், மோதிரங்கள், ஜடைவில்லே—எல்லாம் ஒரு ஜோடி இருந்தன. குடும்பத்தில் அமைதியை உத்தேசித்து, மூத்தாளுக்குச் செய்து போட்டிருந்த நகைகளேப் போலவே ஒரு ஜோடி இளேயவளுக்கும் செய்து போட்டிருந்தார் நடேச ஐயர்.

இதைப் பார்த்த ஜானகியின் கண்களில் நீர் கசிந்தது. "நான் பிழைத்தேன். இனிமேல் கவலேயில்லே. எப்படி ருக்மணியின் கல்யாணத்தைச் செய்யப் போகிறேம் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன். அப்பா இந்த நகைகளே யெல்லாம் விற்று விட்டாரோ, என்று எனக்குப் பயம். வைரமாலேயே நாலாயிரம் பெறும் என்று சொல்லுவார். அது ஒன்றை விற்று விட்டாலும் ருக்மணியின் கல்யாணத்தை நடத்தி விடலாம்" என்று கூறி ஆறுதல் அடைந்தாள்.

பஞ்சாயத்தார் நகைகளேப் பரிசோதனை செய்தனர். நகைகளே ஜானகிக்கும் அம்புஜு

வுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துக் கையெழுத்தும் வாங்கிக் கொண்டனர். அவரவர்கள் நகைகளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்கள்.

அன்றிரவு எதிர்பாராத ஒரு செய்தியை கோபாலஸ்வாமி தம் மனைவியிடம் வெளியிட்டார். "அம்புஜு! ஒரு ரகசியமான தகவலை உன்னிடம் சொல்ல வேண்டும்; ஜோடி நகைகளில் ஒரு ஜதை அசல் வைரம். இன்னொன்று போலி வைரம். ஆனால் என்னைப் போன்ற நிபுணர்களால்தான் இதைக் கண்டு பிடிக்க முடியுமே தவிர எல்லோராலும் முடியாது. அப்படியிருக்க நடேசய்யர் பேச்சை நம்பி இளையாள் இதை அசல் வைரம் என்று நினைத்ததிலோ, இப்பொழுது இந்தப் பஞ்சாயத்தார்கள் நம்பியதிலோ என்ன ஆச்சரியம் இருக்க முடியும்! அந்த வைரமாலை மட்டும் இப்பொழுது ஆருயிரம் பெறும். அந்த வைர செட்டை நான் முன் ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு விட்டேன்" என்றார் குதூகலத்துடன்.

"ஆமாம். ஜானகியிடம் கொடுத்ததுகூட போலி வைர வங்கிதானா!"

"ஆமாம். வைர செட்டை அப்படியே எடுத்துக் கொண்டு விட்டேன். நான் ஏமாறுகிறவனா!" என்றார் கோபாலஸ்வாமி.

அம்புஜுவின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. "நல்ல வேலை! இதற்குத்தான் நீங்களும் கூட வரவேண்டும் என்று சொன்னேன்!" என்றாள்.

★

மறுநாள், அவர்கள் புறப்படும் தினம். வாசலில் டிரைவர் கோபாலஸ்வாமியின் காரை பள பள வென்று துடைத்து நிறுத்தி வைத்திருந்தான். அம்புஜு புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டாள். ஜானகி முகத்தில் புன்னகை தவழ அம்புஜுவிடம் வந்து, "அக்கா! ருக்மணியின் கல்யாணத்துக்குப் பணம்கூடக் கிடைத்து விட்டது. வருஷம் பிறந்ததும் கல்யாணம் செய்து விடலாம். நீ கட்டாயம் வரவேண்டும். எனக்குத்தான் வேறு யார் மனிதர்கள் இருக்கிறார்கள்! நான் அநாதைதானே! பழைய விரோதத்தை மறந்து விடு" என்றாள். அவள் கண்களின் ஓரத்தில் முத்துப் போல் நீர் அரும்பியது.

"போய் வருகிறீர்களா, பெரியம்மா!" என்று கெஞ்சும் பாவனையில் கூறினாள் ருக்மணி. கள்ளம் கபடற்ற, ஏழ்மை தவழும் அவள் முகத்தையும் நம்பிக்கையும் ஆறுதலும் குடிகொண்ட ஜானகியின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, சட்டென்று வாசலைப் பார்க்க நடந்தாள் அம்புஜு. நான்கு அடிகள் கூட எடுத்து வைத்திருக்க மாட்டாள். அவள் கால்கள் தடுமாறி நின்றன. திரும்பி, "ஜானகி!" என்று கூப்பிட்டாள். அவ்வளவு நாளாக தன்னைக் கூப்பிடாத அம்புஜு தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு, காதுகளை நம்ப முடியாமல் "ஏன் அக்கா!" என்றாள் ஜானகி விழிகள் மலர. சற்று முன் அம்புஜுவின் முகத்திலிருந்த கோபம், கண்டிப்பு எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன. அவள் உள்ளத்திலிருந்த பழைய விரோதமும் வருத்தமும் ஓடி ஒளிந்தன.

"ருக்மணி கல்யாணத்துக்கு இந்த வைர மாலையையா நம்பிக் கொண்டிருக்கிறாய்......!" என்றாள் அம்புஜு. அவள் தொண்டை உணர்ச்சியால் அடைத்துக் கொண்டது.

"ஆமாம், அக்கா......" என்றாள் ஜானகி.

"ஆனால் உன்னிடம் இருப்பது நிஜ வைர மாலை அல்ல......" என்றாள் அம்புஜு.

"நிஜமாகவா!"


"ஆமாம், ஜானகி!" இந்த வைரங்களின் தாரதரத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டமாம். ஜோடி நகைகளில் ஒன்றுதான் வைர செட். நிஜ வைர மாலையும் வைர நகைகளும் இதோ இருக்கின்றன. விற்று ருக்மணியின் கல்யாணத்தை நடத்து. உன் நிலைமையை நன்ருகத் தெரிந்து கொண்ட பிறகு, இரக்கமில்லாத உன்னை ஏமாற்றிப் போலி வைரத்தை உன்னிடம் கொடுத்துவிட்டு, நிஜ வைரத்தைக் கொண்டு போக, நாங்கள் என்ன இரக்கமில்லாத கிராதகர்களா!" என்று கூறி விட்டுத் தன் கைப் பெட்டியைத் திறந்தாள் அம்புஜு.

அப்பொழுது பக்கத்தில் வந்த கோபாலஸ்வாமி "அம்புஜு! வேண்டாம், பெட்டியைத் திறக்க வேண்டாம்!" என்றார்.

"ஏன் கூடாது! அப்படி நாம் பணம்சேர்த்து என்னத்தைக் கண்டோம்! கஷ்ட சமயத்தில் ஜானகிக்கு உதவாத நகை எதற்கு இருக்கிறது! நம் குழந்தையைப் போல் ருக்மணிக்கும் கல்யாணமாக வேண்டாமா!" என்று அதட்டிக் கூறிப் பெட்டியைத் திறந்தாள் அம்புஜு.

"அவசியமில்லை, அம்புஜு! நானே நிஜ வைர நகைகளை நேற்று இரவு அவர்கள் பெட்டியில் வைத்து, போலி வைர நகைகளை உன் பெட்டியில் வைத்து விட்டேன். அதற்குப் பிறகுதான் எனக்குத் தூக்கம் வந்தது!" என்றார் கோபாலஸ்வாமி.

"அத்திம்பேரே! அக்கா!"—மேலே பேச முடியாமல் நெஞ்சு அடைக்க, கண்களில் நீர் பொழிய ஜானகி அவர்களை நமஸ்கரித்தாள்.



"ஏண்டா, உன் மனைவி என்ன, பதினுறு பக்கமா கடிதம் எழுதி இருக்கிருள்? அப்படி என்ன விசேஷமாக எழுதி யிருக்கிருள்?"

"விசேஷம் ஒன்றுமில்லை; விவரமாகப் பேச வேண்டியவைகளை நேரில் சொல்லிக் கொள்கிறேன் என்று எழுதி யிருக்கிருள்."

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

20. ஹலாசனம்

ஹல் என்றால் கலப்பை என்று அர்த்தம். ஹலாசனம் என்றால் கலப்பை போன்ற நிலையில் இருக்கும் ஆசனம். வாழ்க்கை எனும் நிலத்தில், ஹலாசனம் என்னும் கலப்பையினால் உழுதால்தான் ஆரோக்கியப் பயிர் விளையும்.

ஹலாசனம் பழகுவதற்கு, முதலில் மிருதுவான ஒரு விரிப்பில் மல்லாந்து படுத்துக் கொள்ளவும். கைகள் பக்கத்தில் நீட்டி ஒட்டினாற் போல் வைத்து, உள்ளங் கைகள் தரையில் பட வைக்கவும். இரண்டு கால்களும் கைகளும் விரைப்பாய் இருக்கவேண்டும். உள்ளங்கை தரையில் நன்றாய் ஊன்றி, மூச்சைப் பிடித்து, இரண்டு கால்களையும் சேர்ந்தாற்போல் தூக்கி, தலைக்குப் பின்புறம், கால் விரல்களைத் தரையில் ஒட்டவைக்கவும். அப்படியே 2, 3 விநாடிகள் இருந்து, மெதுவாகக் கால்களைத் தூக்கி இறக்கி முன் இருந்த நிலைக்கு வரவும்.

கால்களைத் தூக்கும்போது மூச்சை விட்டும், பிறகு முன்னுக்கு வரும்போது மூச்சை இழுத்தும், மேலிருந்து கீழே வரும்போது மெதுவாக மூச்சை விடவும் வேண்டும். சில நாள் இதை ஞாபகத்தில் வைத்துப் பழகினால், பிறகு ஞாபகம் வைக்காமலேயே தன்னால் செய்யவரும்.

ஹலாசனத்தை நான்கு விதமாகப் பழக வேண்டும்.

1. கால் விரல்கள் தலைக்குப் பின்புறம் தரையைத் தொடும்போது, முழங்கால் மூக்குக்கு நேராய் இருக்க வேண்டும்.

2. அதைப் போல இன்னும் சற்றுக் கால்களைத் தூரத் தள்ளி வைத்து முழங்கால் நெற்றிக்கு நேராய் வர வேண்டும்.

3. இன்னமும் தள்ளி வைத்து, தொடை நெற்றிக்கு நேராய் வர வேண்டும்.

4. மேற்படி மூன்றாவது முறைப்படி செய்து, பக்கத்தில் இருக்கும் கைகளைத் தலைக்கு மேல் கொண்டு சென்று மடக்கி விரல்களை கோத்துக் கொள்ளவும்.

ஒரே தடவையில் மேற் குறித்த 4 பாகங்களைச் செய்யக் கூடாது. அதாவது கால்களைத் தலைக்குப் பின்புறம் தரையில் வைத்துக் கொஞ்சம், கொஞ்சம் நகர்த்திக் கொண்டே 1, 2, 3, 4 என்று செய்யக் கூடாது. ஒவ்வொரு பாகமும் தனித் தனியாச் செய்ய வேண்டும். ஒரு பாகம் செய்து முடித்துத் தரையில் காலகளை வைத்து, உடலைத் தளர்த்தி, 3, 4 விநாடி இளைப்பாறின பிறகு மறு முறை செய்யலாம்.

இந்த ஆசனம் செய்ய வருவதிலிருந்து, அவரவர்களின் ஆரோக்ய நிலைமையைச் சொல்லிவிடலாம். சிலருக்கு மட்டும் எடுத்ததும் நன்றாய்ச் செய்ய வரும். அநேகருக்குச் சற்று சிரமமாய்த்தான் இருக்கும்.

சிலருக்கு இரண்டு கால்களைச் சேர்ந்தாற்போல் தூக்க வராது. அப்படித் தூக்கும்போது தலையும் சற்றுத் தூக்கும். சிலருக்குப் பக்கத்தில் இருக்கும் கைகள், விரல்கள் விரிந்து, விகாரமாய் கெட்டக் குத்தலாய் வைத்து ஊன்றினால்தான் கால்கள் தூக்க வரும். சிலருக்குக் கால்கள் நடுங்க ஆரம்பிக்கும். அப்படிக் கால்களைத் தூக்கினாலும், பின்புறம் போய் எட்ட முடியாது. பிருஷ்டம், இடுப்பு முதலியன தரையை விட்டுக் கிளம்பாது.

'சரி, இதற்கும் நமக்கும் ஸ்நானம் பிராப்திகூடக் கிடையாது. நமக்கெல்லாம் எங்கே வரப்போகிறது!' என்று விட்டு விடுவார்கள்.

அவர்களுக்கும் ஒரு வழியுண்டு. எதைச் செய்ய வேண்டுமானாலும் எடுத்ததும் சரியாய் வராதுதான். சற்றுப் பொறுமையுடன் பழகினால் படிப்படியாய் வரும். சில நாட்கள், ஏன் சில மாதங்கள் கூட ஆகலாம்.

முதலில் கால்களைச் சேர்ந்தாற் போல் எழுப்பி L (ஆங்கிலத்தில் எல் எழுத்துப்) போல் நேராய் கொண்டு வரவும். உடல் இடுப்பு, பிருஷ்டம் வரை கீழே இருக்க, கால்கள் மட்டும் மேலே தூக்கினால் L போன்ற நிலை வரும். பிறகு மெதுவாய்க் காலைத் தரைக்கு ஒட்டினாற் போல் கொண்டு வரவும். ஆனால் தரையில் ஒட்டக் கூடாது. ஓரிரண்டு அங்குலம் சந்து இருக்கும்போதே, அப்படியே மறுபடியும் கால்களை மேலே தூக்க வேண்டும். பிறகு நிதானமாய்க் கீழே இறக்க வேண்டும். இம்மாதிரி தரையைக் கால் தொடாமலேயே மூன்றிலிருந்து, ஆறு, ஒன்பது என்று அவரவர் சக்தியை அனுசரித்துச் செய்யலாம்.


இப்படிப் பழகும் சமயம், கால்கள் தரையை நோக்கி வரும்போது, சிலர் பொத்தென்று போட்டு விடுவார்கள். ஓரிரண்டு அங்குலம் வரையில் வந்து அப்படியே தூக்கச் சக்தி இருக்காது. சிலர் ஓரிரண்டு அங்குலம் சந்து இருக்கும் என்று நினைத்துக் கொண்டு, அரை அடி இருக்கும்போதே தூக்கி விடுவார்கள். இக் குறைகள் எல்லாம் கவனம் வைத்துப் பழகினால், சில நாளில் மறைந்து விடும். கால்களை அப்படியே தூக்கச் சக்தியில்லாத

வர்கள், ஒவ்வொரு தடவையும் கால்களைத் தரையில் வைத்து, 3, 4 விநாடி இளைப்பாறிப் பிறகு தூக்கலாம். ஆனால் சில நாளிலேயே கீழே வைக்காமல் தூக்கப் பழக வேண்டும்.

இம்மாதிரி ஓரிரண்டு மாதங்கள் பழகி வந்தால் இடுப்புக்குச் சக்தி ஏற்படும். துடைகள் வலுவடையும். நரம்புகள் பலப்படும். பிறகு கால்களை இன்னும் எவ்வளவு தூரம் பின்னுக்குக் கொண்டு போக முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டு போய், மறுபடி தரைக்கு வர வேண்டும். ஆனால் தரையில் ஒட்டாமலேயே கால்களை எழுப்பி மறுபடி முன் சொன்னது போல் செய்ய வேண்டும். இம்மாதிரி ஒரு மாதம் பழகி வந்தால், முதுகுச் சதைகள், நரம்புகள் பிடிப்பு விட்டு, மடக்கவும், நீட்டவும் சக்தி பெறும். பிறகு லேசாய்த் தலைக்குப் பின் கால்களைத் தொட வரும்.

அப்படியும் சிலருக்கு உடனே கால்களைத் தொட வராது. 6 அங்குலம், 4 அங்குலம், 2 அங்குலம் இடைவெளி யிருக்கும்போதே நின்று விடும். இவர்கள் ஒவ்வொரு காலாய் மாற்றி மாற்றித் தொட்டுப் பழகி வந்தால், சில நாளில் இரண்டு கால்களையும் சேர்த்தாற் போல் தொட வரும்.

சாதாரணமாய்த் தரையைத் தொட வந்தவர்களுக்கு மூன்றாவது காலம் தான் சுலபமாய் வரும். முதல் இரண்டு காலங்கள் சற்றுக் கடினம். வயிறு அதிகம் மடிந்து முதுகெலும்புகள் நம் சொற்படி வளைக்க வர வேண்டும். அப்பொழுது தான் எல்லாக் காலங்களும் செய்ய வரும். அதுவரைக்கும் மூன்றாவது மட்டும் பழகி வந்து, முதலாவது, இரண்டாவது பாகங்களைச்



செய்ய முயல வேண்டும். சில நாட்களில் அவைகளும் சரியாய்ச் செய்ய வந்துவிடும்.

ஹலாசனம் சரியாய்ச் செய்ய வராததற்குக் காரணம் முதுகெலும்புகள் மரத்துப் போவது மட்டுமல்ல. வயிறும் பெருத்துப் போயிருப்பதும் ஒரு காரணமாகும். அப்பேர்ப் பட்டவர்கள், புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பஸ்சிமோத்தாஸனம் முதலியவைகளைப் பழகினுல் தான் வயிறு கரைந்து, இளகி ஹலாசனம் செய்யவரும். எடுத்ததும் புதிதாய் ஹலாசனம் செய்ய வராது. புதிதாய்ப் பழகுபவர்கள் ஹலாசனம் செய்யவும் கூடாது.

பலன்:—முதுகெலும்பு படிப்படியாய் வளைப்பதால், முதுகெலும்பின் எல்லாப் பாகங்களுக்கும் பயிற்சி ஏற்படுகிறது. அதன் உள்ளே செல்லும் நரம்புக் கூட்டங்கள் இழுக்கப் படுவதால் புத்துயிர் பெறுகின்றன. யௌவனம் கலை காட்டப் படுகின்றன. சோம்பல் என்பதே தலை காட்டாது. எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கச் செய்யும். இரத்தோட்டம் சரியாய் இருக்கும். பிராணவாயு சஞ்சாரம் எல்லா இடங்களுக்கும் கிட்டும். எந்த ஒரு உணர்ச்சியையும் நாம் கட்டுப் படுத்த முடியும். பலம் வீரியம் இழந்தவர்களுக்கு இது ஒரு சமயசஞ்சீவி.

'விசையுறு பந்தினைப்போல்—உளம்
வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்'

என்று பாரதியார் கேட்கிருர் அல்லவா? உண்மையில் அவ்வுடல் கிடைத்து விடும்.

தைராய்ட், பாரா தைராய்ட், பிட்யூடரி முதலிய உயிர்க் கோளங்களுக்குப் பயிற்சி கிட்டுவதால் நிரந்தர ஆரோக்யம், யௌவனம் உண்டாகும். மேற்படி நுண் அவயவங்களைப் போற்றிப் பாதுகாத்தால் வேத நூறு பிராயம் மட்டுமல்ல, மற்றும் பல்லாண்டுகள், ஆரோக்கியத்துடனும் இளமையுடனும் வாழலாம்.

ஆசனங்கள் செய்து வரும் சகோதரிகள் கர்ப்பம் கொண்டால் 3 மாதங்கள் வரை ஹலாசனம் 3 வது பாகம் மட்டும் செய்யலாம். பிறகு ஒரு மாதம் வரை வெறுமனே காலைத் தூக்கி, நேராய் வந்தபின், தரைக்குக் கீழே கொண்டு போவது மட்டும் 3 தடவை அல்லது 6 தடவைகள் செய்யலாம்; அதன் பிறகு செய்யக் கூடாது. ஆசனப் பழக்கமில்லாத சகோதரிகள் கருப்பம் கொண்டால் எந்த ஆசனமும் புதிதாய்ப் பழகக் கூடாது. மற்ற எல்லாச் சகோதரிகளும் எல்லா பாகங்களையும் செய்யலாம். ஆரோக்கியம், சுகப் பிரசவம், குழந்தைக்கு பால் முதலியன உண்டாகும்.

நான் மந்திரியானல்....

இன்று நாட்டில் பட்டினியால் பரிதவிக்கும் கிராம மக்களுக்கு, ஏழை மக்களுக்கு உணவு கிடைப்பதற்கு வேண்டிய சரியான ஏற்பாடுகளைச் சர்க்காரின் முதல் வேலையாகத் திட்டம் போடுவேன். நம் மாகாணத்திலுள்ள ஜனங்களுக்கு வேண்டிய அரிசிக்காகவோ, மற்ற உணவுப் பொருள்களுக்காகவோ டில்லிக்கும், பம்பாய்க்கும் பறக்கமாட்டேன். இந்திய உணவு மந்திரி கனம் முன்ஷி ரொம்ப நல்லவர் தான். கலை அபிமானி. குஜராத்தி பாஷையில் பல நாடகங்களும், நாவல்களும் கதைகளும் எழுதியிருக்கிறார். சட்ட நிபுணர்; நல்ல எழுத்தாளர்; பேச்சாளர்; தேசபக்தர்; குள்ளமாக இருப்பார். ஆனால் அழகாயிருப்பார். கோதுமை ரொட்டியும், நல்ல பழங்களும் சாப்பிடுவார். நாம் அவரிடத்தில் போய் ''நாங்கள் பட்டினி, எங்களுக்குக் கொஞ்சம் அரிசி கொடுங்கள்'' என்று முறையிட்டால் பாவம், அவர் என்ன செய்வார்! அவரென்ன கிராமங்களைக் கண்டாரா! நெல் பயிரிடத்தான் தெரியுமா! 'தென்னாட்டு மக்கள் நாகரிகமானவர்கள், நன்றாக ருசியாகப் புசிப்பவர்கள், அவர்களைச் சோளமோ, கோதுமையோ, இலையோ, தழையோ, கிழங்கோ சாப்பிடச் சொன்னால் கஷ்டப்படுவார்கள்' என்பது அவருக்குத் தெரியுமா! 'குழம்பு சாதம், ரசம் சாதம், மோர் சாதம், இட்டிலி, தோசை இல்லாவிட்டால் உலகமே வேண்டாமென்று சொல்லுபவர்களாயிற்றே!' என்பது அவருக்குத் தெரிந்திருக்க நியாயம் ஏது!

அவர் உணவு மந்திரியாக வந்த உடனே என்ன சொன்னார் தெரியுமா! ''மரங்களை நடுங்கள். குரங்குகளைக் கொல்லுங்கள், எலிகளைப் பிடியுங்கள், பத்துச் சதவிதம் குறைவாக இருக்கும் உணவுக் குறைபாடு தீர்ந்துவிடும்'' என்றார். மக்களும் சரி என்று தேசம் முழுதும் மரங்களை நட்டார்கள். ஆனால் நட்ட மரங்களின் கதி என்ன ஆயிற்று என்று யாருக்காவது தெரியுமா! அதைப்பற்றி யார் இப்பொழுது நினைக்கிறார்கள்! குரங்குகள் விஷயத்தில் ஏதோ பேச்சு நடந்தது. எத்தனை குரங்குகளை யார் எங்கே கொன்றார்களோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! இனி மலையைத் தோண்டி எலியைப் பிடிக்க வேண்டியதுதான் பாக்கி! இந்த நிலைமையில்தான் உணவு மந்திரிகள் இன்னும் கூட்டங்கள் கூடியும், ஏதேதோ பேசியும் காலத்தைக் கடத்தி வருகிறார்கள்.

காற்று, ஜலம், உணவு தானியங்கள் எங்கெல்லாம் எப்படிக் கிடைக்கின்றனவோ, விளைகின்றனவோ அதையொட்டியே ஜனங்கள் வாழ்க்கை நடத்தவேண்டும். அப்படிச் செய்வதுதான் சுலபம். இயற்கையாகக் கிடைப்பதுடன் நாமும் கொஞ்சம் பாடுபட்டால் வேண்டிய அளவு தயாரித்துக் கொள்ளலாம்.

இந்தியா ஒரு பெரிய தேசம். விசாலமான தேசமாய் இருப்பதால், ஒரு பாகத்தின் சீதோஷ்ண ஸ்திதியைப் போல் மற்றொரு பாகத்தில் இருப்பதில்லை. மழைக் காலமும் மாறுபடுகிறது. மழையின் அளவில்கூட எத்தனையோ வித்தியாசம்! உலகத்திலேயே அதிக மழை பெய்யும் இடமும் இந்தியாவில்தான். குறைந்த மழை பெய்யும் இடமும் இந்தியாவில்தான். உணவுப் பொருள்கள் விளையும் விதத்திலும், அளவிலும் எவ்வளவோ மாறுபாடுகள். அதேபோல் ஒரு பிரதேசத்திலும், மற்றொரு பிரதேசத்திலும் உள்ள ஜனங்கள் உண்ணும் உணவுப் பொருள்களுக்கும், அளவுக்கும் சம்பந்தமேயில்லை.

தான்யங்களின் விலையிலும்தான் எவ்வளவு வித்தியாசம் என்கிறீர்கள்! சென்னையில் ஒரு மணங்கு அரிசி விலை சுமார் ஒன்பது ரூபாய் என்றால் பஞ்சாபில் இருபது ரூபாய். மத்திய மாகாணத்தில் இருபத்து நான்கு ரூபாய், பம்பாயில் பதினேழு ரூபாய். பஞ்சாப் அரிசியைச் சென்னைக்கும், சென்னை அரிசியை மத்திய மாகாணத்துக்கும் கொண்டு போவதாயிருந்தால், விலை நிர்ணயிப்பதிலும், கொண்டு போவதிலும் கூடக் கஷ்டம் ஏற்படுவது இயல்புதானே!

தவிரவும் முப்பத்தைந்து கோடி மக்களின் உணவுத் தேவையை ஒன்று சேர்த்து பங்கிடுவது என்றால் எந்த சர்க்காராலும் சரியாக நடத்த முடியாது.

கனம் மந்திரி முன்ஷி அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபொழுது, பத்திரிகைகளின் மூலம், ''உணவு உற்பத்தி விஷயத்தைக் கிராம மக்களிடம் ஒப்படைத்து விடுங்கள். இதை அகில இந்தியப் பிரச்னையாக எடுத்துக் கொள்வது தவறு. கிராம மக்களுக்குப் பயிரிடுவதற்கு வேண்டிய வசதிகளைச் சீக்கிரமாகச் சுலபமாகச் செய்து கொடுத்தால் போதும். பயிரிடுவது கிராமத்திலுள்ள விவசாயிகளைச் சேர்ந்த வேலை. அதில் சர்க்கார் தலையிட்டு, இவ்வளவு விளைந்தால் சர்க்காருக்கு இந்த விலைக்கு இத்தனை மரக்கால் கொடுத்தாக வேண்டும் என்று சட்டம் போடுவது சரிவர நடக்காது. பொறுப்பை மாகாண சர்க்காரிடம் விட்டுவிடுங்கள்'' என்று அறிவித்திருந்தேன். ஆனால் என் அபிப்பிராயத்தையும், உங்கள் அபிப்பிராயத்தையும் யார் கேட்கப் போகிறார்கள்!

மாகாண மந்திரிகளும், உணவு இலாக்கா உத்தியோகஸ்தர்களும்தான் இருக்கிறார்களே, பாழாய்ப்போன பொய்ப்புள்ளி விவரங்களைக் கொடுத்துப் பத்து சத விகிதம்தான் குறைவு. சமாளித்து விடலாம் என்று ஓயாமல் சொல்லுவதற்கு! பட்டதெல்லாம் போதும். இனி பொறுக்க முடியாது. நாளுக்கு நாள் ஜனங்களின் பசி அதிகரித்துக் கொண்டே வருகிறது. உடனே கிராம மக்களுக்கு, ஏழை மக்களுக்குத் தேவையான உணவு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தே ஆக வேண்டும்.

நான் மந்திரியாக இருந்தால் முதலில் நம் மாகாணத்திலுள்ள ஐந்து கோடி மக்களுக்கும்

ஆளுக்கு நாள் ஒன்றுக்கு பதினறு அவுன்ஸ் வீதம், ஆறு மாதத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எவ்வளவு என்று கணக்கெடுத்து நம் மாகாணத்தில் கிடைக்கக் கூடியது போக மீதியை எங்கிருந்தாலும் சரி, என்ன விலையாக இருந்தாலும் சரி, எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் சரி, கிடைக்கும்படி செய்தே தீருவேன்.

உடனே சண்டைக்கு ஆட்களும், பணமும் சேர்ப்பது போல இந்தப் பட்டினிச் சண்டையை ஜயிப்பதற்கு ஆட்களைச் சேர்ப்பேன். பணம் திரட்டுவேன். கடன் வாங்குவேன். பணம் வைத்துக் கொண்டு கொடுக்க மறுத்தால் சட்டம் ஏற்படுத்தி அதை வசூலிப்பேன். ஜனங்களின் பட்டினியைப் போக்க எந்தச் சட்டமும் செய்யலாம். அதை நடத்தியும் தீரலாம். இதில் தவறு ஒன்றுமில்லை.

முதலில் நாம் ஆறு மாதத்துக்கு வயிறு நிறைய வேண்டிய சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுகிறோமே, பிறகு எல்லோரும் இராப்பகலாக உணவு உற்பத்தி செய்ய வேண்டியதுதானே! மாஜி ராணுவச் சிப்பாய்களையும், வேலையில்லாதவர்களையும் கிராம மக்களையும் கொண்டு வேண்டிய கிணறுகள், வேண்டிய குளங்கள், வேண்டிய வாய்க்கால்கள் தோண்டி எங்கிருந்தாவது, பாதாள லோகத்திலிருந்தாலும் சரி, எப்படியாவது தண்ணீரைக் கொண்டு வந்து பயிரிட்டே ஆக வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தால் எதைத் தான் சாதிக்க முடியாது! இன்ஜினியரிங் இலாக்கா எதற்காக இருக்கிறது! விவசாய இலாக்கா எதற்காக இருக்கிறது! உணவு இலாக்கா எதற்காக இருக்கிறது! இவ்வளவு பேர்களும் இவ்வளவு படிப்பையும், அனுபவத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்கிறார்கள்! இவர்களால் ஜனங்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்ய முடியவில்லை என்றால் இவர்கள் எங்காவது தொலைந்து போகட்டுமே! வெளி நாடுகளிலிருந்து கெட்டிக்காரர்களை வரவழைத்தாவது காரியத்தைச் சாதித்தே தீர வேண்டும். ஆறு மாதத்துக்குள், நம் மாகாண முழுவதிலும் உள்ள ஜனங்களுக்கு வேண்டிய உணவு கிடைக்கும்படி செய்ய முடியாதா, என்ன!

கிராம மக்கள் ஒவ்வொருவரும் வேலை செய்தே ஆகவேண்டும். சும்மாயிருப்பவர்களுக்குச் சோறு கிடையாது என்ற சட்டம் ஏற்படுத்த வேண்டும். பயிரிடுபவர்களுக்கு நஷ்டம் வராதபடி தானியங்களின் விலை நிர்ணயிக்கப் படவேண்டும். இன்று நம் மாகாணத்தில் 1944-45-ம் ஆண்டில் நெல் பயிரிட்டதை விட ஏழு லக்ஷம் ஏக்கர் குறைவாகப் பயிராகிறது என்றால் நெல் பயிரிடுவதினால் லாபமில்லை என்பது தெரிகிறது அல்லவா! இதைச் சரிப்படுத்துவதற்கு நெல்லின் விலையை உயர்த்தியே ஆகவேண்டும். இல்லாவிட்டால் அரிசிப் பஞ்சம் இருந்து கொண்டே தானிருக்கும். ஆனால் மற்றொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இன்று சர்க்கார் நெல் ரூபாய்க்கு நான்கு படிக்கு மேல் வாங்குகிறார்கள். நெல் நான்கு படி என்றால் அரிசி இரண்டுபடி ஆகிறது.

ஆனால் ரேஷன் ஷாப்பில் நமக்கு தரப்படும் அரிசியின் விலை படி பன்னிரண்டு அணா. நடுவில் இருக்கும் நாலணா எங்கு போகிறது! ரேஷன் இலாக்காச் செலவுக்குத்தான்! இந்த நாலணாவும் பயிரிடுபவர்களுக்கே கிடைத்தால் அவர்கள் அதிகமாகப் பயிரிடுவார்கள் அல்லவா!

இன்னொரு விஷயம். இந்தப் பன்னிரண்டு அணா விலைக்கு ரேஷன் மூலம் கிடைக்கும் அரிசி வாரத்தில் மூன்று நாட்களுக்குத் தான் போதும். மீதி நாட்களுக்குக் கறுப்பு மார்க்கெட்டில் படி ஒன்றே கால் ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்துத்தான் வாங்கிச் சாப்பிடுகிறோம். ஆகையினால் நமக்குச் சராசரி படியின் விலை ஒரு ரூபாய்க்குக் குறையாமல் ஆகிறது. இவ்வளவுக்கும் நல்ல அரிசி கிடைப்பதில்லை. அதை விட நெல் பயிரிடுபவர்களுக்கே படி அரிசிக்குப் பதினைந்கணா கிடைக்கும்படி விலையை நிர்ணயித்து விட்டால், பயிரிடுபவர்களுக்கும் லாபம். வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் லாபம். நெல் பயிர் அதிகமாகச் சாகுபடி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஏழைகள் எப்படி படி அரிசிக்குப் பதினைகணா கொடுத்து வாங்க முடியும் என்று சிலர் கேட்கலாம். இன்றைய ரேஷன் விலைக்கு, படிக்கு இரண்டணா தானே அதிகம்! ஆனால் ரேஷன் அரிசியை விட நல்ல அரிசி கிடைக்குமே! இப்பொழுது ஏழைகளும் கறுப்பு மார்க்கெட்டில் இதை விட அதிக விலைக்குத் தானே வாங்கிச் சாப்பிடுகிறார்கள்! பூராவும் அரிசி வாங்கிச் சாப்பிட முடியாதவர்கள் எப்பொழுதும் போல் கொஞ்சம் அரிசியும், விலை மலிவாகக் கிடைக்கும் கேழ்வரகு, கம்பு, சோளம், தினை, வரகு முதலிய தான்யங்களையும் வாங்கிக் கொள்ளலாமே! அரிசி ரேஷன் வந்த பிறகுதான் அதிகமான ஜனங்கள் மற்ற தானியங்கள் ரேஷனில் சரிவரக் கிடைக்காததனால் அரிசியை அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அரிசி ரேஷனை எடுத்து விட்டால் அரிசிப் பஞ்சம் சீக்கிரத்திலேயே நீங்கிவிடும் என்பது திண்ணம்.

எத்தனையோ காங்கிரஸ்காரர்களைப் போல, மந்திரிகள் உள்பட, நானும் ஜனங்களிடத்தில், 'சுயராஜ்யம் என்றால் எல்லோருக்கும் நல்ல சாப்பாடு, சுயராஜ்யமென்றால் துணி, சுயராஜ்யமென்றால் வீடு, படிப்பு!' என்று எத்தனையோ தடவை மேடைப் பிரசங்கங்கள் செய்திருக்கிறேன். இந்தப் பேச்சுக்களுக்கு என்ன அர்த்தம்! சொன்ன சொல்லைத் தவறுவது சரியாகாது அல்லவா! காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிமார்களும் ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

" தனியொருவனுக்குணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் " என்று பாடிய கவிச் சக்ரவர்த்தி பாரதியார் பிறந்த இந்த நாட்டிலே, தனியொருவரல்ல, லட்சக் கணக்கான மக்கள் உணவில்லாமல் தவிப்பதை என்னென்று சொல்வது! ஒழிக பட்டினி! வாழ்க பாரதியார்!

சென்னை
27-12-50

ஸ்ரீபாத சங்கர்.

பாம்பு மந்திரம்

க. ரா.

சென்ற பங்குனி மாதக் கடைசியில் என்னுடைய கிராமத்துக்குச் சென்றிருந்தேன். நகரத்திலேயே ஊறித் திளைத்த எனக்குக் கிராமத்தில் பொழுது போக வில்லை. நல்ல வேளையாக, நான் போயிருந்த சமயம் எதிர்வீட்டுப் பெரிய பண்ணை பரசுராமய்யரின் மாப்பிள்ளை நாகராஜன் அப்பொழுது வந்திருந்தான். பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்ததில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

கிராம வழக்கத்தை ஒட்டி இரவு எட்டு மணிக்குள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கயிற்றுக் கட்டிலுடன் வாசலை அடைந்தேன். நாகராஜனும் அதே சமயம் "மிஸ்டர் ராமு, சாப்பாடு முடிந்ததா?" என்று கேட்டுக்கொண்டே எதிர் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். "ஆயிற்று!" என்று சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டு, "மணி என்ன ஸார்?" என்று கேட்டேன்.

வலது கையிலிருந்த டார்ச்சை இடது மணிக்கட்டின்மீது திருப்பிப் பார்த்து விட்டு "எட்டடிக்க ஐந்து நிமிஷம் இருக்கிறது" என்றான்.

கோடை இரவானதால் புழுக்கம் அதிகமாக இருந்தது. சற்றுக் காற்றாட வெளியில் உலாவி வரலாம் என்று தீர்மானித்துக்கொண்டு நாகராஜனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவனும் சரி என்று சம்மதித்தான். அடுத்த நிமிஷமே உள்ளே சென்று மாமனாரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

மறு நிமிஷம் நாங்கள் கிராமத்திலிருந்து ரயில் ஸ்டேஷனுக்குப் போகும் பாதையில் நடந்து கொண்டிருந்தோம்.

பத்து கஜத்துக்கு ஒரு மெர்குரி விளக்கு பளிச்சிடும் பட்டணத்து வீதிகளில், தார் மெழுகிய பாதைகளில், சிமெண்டு நடை பாதை மேடைகளில் நடந்து பழகிய எங்களுக்குக் கிராமத்துப் பாதையில் நடப்பது பாதையாகவே இருந்தது. அந்த மேடு பள்ளமான ரஸ்தாவின் இருபுறங்களிலும் தலை விரித்தாடும் பிசாசுகள்போலப் புளிய மரங்கள் இருபுறமும் அணிவகுத்திருந்தன. அந்த மரங்களினூடே இங்கொன்றும் அங்கொன்றுமாக மின்மினிகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. நாய் ஒன்று தொலை தூரத்தில், தான் நரியின் வம்சத்தைச் சேர்ந்தது என்பதைக் குரலெடுத்து நிரூபித்துக் கொண்டிருந்தது. ரஸ்தாவுக்குச் சற்று எட்டியிருந்த சேரியிலிருந்து ஒரு அழுகுரல் லேசாகக் காற்றில் மிதந்து வந்தது.

"யாரோ பாவம் அழுகிறார்கள். சேரியில் வசிப்பவர்களுக்கு கஷ்டங்களுக்குக் குறைச்சல் ஏது?" என்றான் நாகராஜன்.

"ஆமாம், நேற்று இந்தச் சேரியில் ஒரு பையனைப் பாம்பு கடித்து விட்டது. பாவம்! அந்த வீட்டிலிருந்துதான் அழு குரல் என்று நினைக்கிறேன்" என்று சொல்லி விட்டு, "மிஸ்டர் நாகராஜன்! உங்கள் கையிலுள்ள டார்ச்சை உங்கள் காலுக்குத் திருப்புங்கள்" என்றேன்.

நாகராஜன் காலில் செருப்பு இல்லை.

"செருப்புப் போட்டுக் கொள்ளாமல் கிராமத்தில் வெளியே வரலாமா? அதுவும் இந்த மூன் இருட்டுக் காலத்தில்" என்று அவனைக் கடிந்து கொண்டேன்.

"மிஸ்டர் ராமு, திரும்புங்கள் சீக்கிரம்; வீடு போய்ச் சேர்ந்து விடலாம்" என்றான் நாகராஜன்.

நாம் எதிர்பாராத ஆபத்து நமக்கு ஏற்படுவதைவிட நாம் எதிர்பார்க்கும் ஆபத்து நம்மைச் சூழ்வதுதான் அதிகம் என்று நான் நினைக்கிறேன். அத்தகைய ஆபத்து அன்று நேர்ந்தே விட்டது!

உச்சி வேளையில், கூரை மேட்டிலிருந்து ஒரு வட்டக் கதிரொளி தரையில் குதிக்குமே, அதைப் போன்ற டார்ச்சின் மெல்லிய ஒளியைத் தவிர எங்களைச் சுற்றி ஒரே அந்தகாரம் சூழ்ந்திருந்தது. நண்பர் நாகராஜனுடைய முகம் எனக்குத் தெரியாவிட்டாலும் டார்ச்சைப் பிடித்திருந்த அவனுடைய கையின் நடுக்கத்திலிருந்தும், அவனுடைய நடையில் கண்ட ஓட்டத்திலிருந்தும் அவன் மிகவும் பயந்துபோயிருந்தான் என்பது தெரிந்தது.

திடீரென்று நாகராஜன், "ஐயோ, ராமு! காலில் ஏதோ கடித்து விட்டது போலிருக்கிறதே!" என்று அலறினான். அடுத்த விநாடி அவன் கையிலிருந்த டார்ச் நழுவிக் கீழே பாதை ஓரத்திலிருந்த புதரின் மேல் விழுந்தது. டார்ச்சின் ஒளி பட்ட இடத்தைத் தாண்டிக் கொண்டு ஒரு சர்ப்பம் வெகு வேகமாகச் சென்றதைப் பார்த்தோம்.

பாம்பைக் கண்ணால் பார்த்த நாகராஜன் சுருண்டு கீழே சாய்ந்து விட்டான்.

டார்ச்சை எடுத்து அவனுடைய காலைச் சோதித்துப் பார்த்தேன். இடதுகால் பெரு விரலில் இரண்டு இடத்தில் சிறிது ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

எனக்கு ஒரே கிலி பிடித்து விட்டது. தற்செயலாக வயலுக்குக் காவலுக்குப் போய்க் கொண்டிருந்த இருவருடைய உதவியுடன் நாகராஜனைக் கைத் தாங்கலாகப் பெரிய பண்ணை வீட்டுக்குக் கொண்டு வந்தேன். நடந்ததை அறிந்த நாகராஜனுடைய மாமனார் ஒரு நிமிஷம் திடுக்கிட்டார். மறு நிமிஷம் விழித்துக் கொண்டு மட மட வென்று பல காரியங்களைச் செய்தார்.

சைக்கிளில் ஒருவரை எட்டு மைல் தூரத்தில் இருந்த தந்தி ஆபீசுக்கு அனுப்பி, பாம்புக்கடிக்கு மந்திரிக்கும் ஒரு பிரபல மந்திரவாதியின் ஊருக்கும், தன்னுடைய சம்பந்திக்கும் தந்தி அடிக்கச் செய்தார். அத்துடன் அரை மைலிலுள்ள பக்கத்துக் கிராமத்துப் பண்டாரம் ஒருவனையும் தருவித்தார்.

பண்டாரம் வந்து ஏதேதோ மந்திரங்கள் ஜபித்து ரக்ஷைகள் பல கட்டினான். நாகராஜனுடைய கட்டை விரலிலும், உச்சந் தலையிலும் சில மூலிகைகளை அரைத்து வைத்துக் கட்டினான். வாயில் துளசி ரஸத்தைப் பிழிந்தான். சொருகி இருந்த கண்களை நீக்கி ஏதோ கலிக்கம் போட்டான்.

பெரிய பண்ணையாரின் நம்பிக்கை வீண் போகவில்லை. இரவு சுமார் இரண்டு மணிக்கெல்லாம் நாகராஜன் கண்களை மெதுவாகத் திறந்தான். வெளிறிப் போயிருந்த அவன் முகத்தில் உயிர் ரேகை படர ஆரம்பித்தது. இது வரை குற்றவாளி போல ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த எனக்குத் தலைமீதிருந்து ஒரு பெரிய சுமை இறங்கினாற் போன்ற நிம்மதி ஏற்பட்டது.

'விடியுமா?' என்றிருந்த பொழுது விடிந்தது. சற்று நொண்டி நொண்டி நடந்து கொண்டே நாகராஜன் வீட்டு வாசல் திண்ணையின்மீது வந்து உட்கார்ந்தான்.

"உங்களை நான் அந்த இருட்டில் அழைத்துச் சென்றது பிசகு. மன்னிக்கவும்" என்றேன்.

நாகராஜன் பதில் ஒன்றும் சொல்லாமல் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"கீழே விழுந்து விட்டதில் நல்ல அடியோ?" என்று கேட்டேன்.

"மிஸ்டர் ராமு, நேற்று நடந்த சம்பவத்துக்காக நான் மிகவும் வருந்துகிறேன். அநாவசியமாக உங்களை வீண் சிரமத்துக்கு ஆளாக்கி விட்டேன்" என்றான் நாகராஜன்.

"வீண் சிரமமா? உங்களுக்குப் போன உயிர் அல்லவா திரும்பி வந்திருக்கிறது? ஏதாவது ஏக்கச் சக்கமாக நடந்திருந்தால் என் தலையில் மாறாத பழியல்லவா சுமந்திருக்கும்?" என்றேன்.

நாகராஜன் ஒரு விதமாகச் சிரித்துக் கொண்டு, "மிஸ்டர் ராமு! புலியைவிடக் கிலிதான் அதிக ஆட்களைக் கொன்றிருக்கிறது என்ற வசனத்தைப் போல நேற்று என்னைப் பாம்பை விடப் பாம்பின் கிலிதான் கடித்திருக்கிறது" என்றான்.

"புரிய வில்லையே!" என்றேன்.

நாகராஜன் அதுவரை மூடி வைத்திருந்த தன்னுடைய உள்ளங் கையைத் திறந்து காட்டி "இவைதாம் நேற்றிரவு என்னைக் கடித்த பாம்பின் பற்கள்" என்றான்.

அவனுடைய கையில் சுமார் அரை அங்குல நீளம் இருந்த இரண்டு நாகதாளி முட்கள் இருந்தன!

பூமியில் புதையுண்டிருந்த நாகதாளியின் முட்கள் பள்ளமும் படுகுழியுமான பாதையில் நேற்றிரவு நடந்த போது நாகராஜனின் கட்டை விரலில் ஏறி இருக்கின்றன.

"உங்கள் மாமனாரிடம் சொல்லி விட்டீரா?" என்றேன்.

"வேண்டாம்! அவர் தாம் செய்த மந்திர வைத்தியத்தினால் நான் பிழைத்ததாக நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் எண்ணத்தை நாம் கெடுப்பானேன்?" என்றான்.

'நாகராஜன் எண்ணத்தை நாம் கெடுப்பானேன்?' என்று நானும் சும்மா இருந்து விட்டேன். நியாயந்தானே?



ஒருவன்:—(தன் வழக்கு முழுவதையும் சொன்ன பிறகு) வக்கீல் ஸார்! எதிர்க் கட்சி அப்பீல் செய்தால் என்ன ஆகும்?

வக்கீல்:-அது கட்டாயம் ஜயித்து விடும். நீங்கள் என்னிடம் கேஸைக் கொடுத்தால் கட்டாயம் நான் கேஸை ஜயித்துத் தருவேன். (ஆசாமி எழுந்து புறப்படுவதைப் பார்த்து) ஒன்றும் சொல்லாமல் போகிறீர்களே!

அவன்:—என்னத்தைச் சொல்லக் கிடக்கிறது? நான்தானே அந்த எதிர்க் கட்சிக்காரன்!

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்



பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமானமாது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து. இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சக்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

ஆஸ்துமா சளி ஒரே நாளில் அகற்றப்படுகிறது

மெண்டாகோ கண்டு பிடிக்கப்பட்டது முதல் மூச்சுத் திணறி, சுவாச இழுப்புடனும் ஆஸ்துமாவினால் யாரும் அவதியுறவேண்டாம். மெண்டாகோவை உபயோகித்தால் இன்ஜக்ஷனும் கெடுதலான புகையும் வேண்டாம். ருசியற்ற இரு மெண்டாகோ மாத்திரைகளை ஆகாரத்துடன் சாப்பிட்ட 10 நிமிஷத்தில் உடலிலுள்ள சளி உடனேயே கரைகிறது. சுலபமாக மூச்சு விடலாம். நரம்புகளுக்கு விச்ராந்தி சுவாசப் பைக்கு நன்மை. விருவிருப்பு ஏற்படும்.

சிசுவைப்போல் அயர்ந்த நித்திரை

ஆஸ்துமாவினால் அவதியுறும் ஆயிரக்கணக்கானவர்கள் முதன் முதலில் மெண்டாகோவை உட்கொண்டு சுகமடைந்தனர். இரவே ஆழ்ந்த நித்திரை செய்தனர் என்றும் கூறுகின்றனர். திட ஆரோக்யமாகவும் 5 முதல் 10 வருஷம் இளமை யடைந்ததாகவும் உணர்ந்தனர். காரணம் ஆஸ்துமாவினால் ஏற்படும் இடையூறுகளை மெண்டாகோ இயற்கையில் தவிர்க்கிறது. (1) சளியையும் கோழையையும் இளக்குகிறது. (2) சுவாச மார்க்கத்திலுள்ள சிறு தசைகளுக்கும் பலம் அளிக்கிறது (3) தேகத்திற்கு விருவிருப்பையும் ரத்தபுஷ்டியையும் அளிக்கிறது.

ஐந்து வருஷமாக ஆஸ்துமா இல்லை

சுலபமாக சுவாசிக்க சக்தி யளித்து சுகமான நித்திரையையும் உண்டாக்குகிறது. ஆஸ்துமா அண்டாமல் தேகத்தைப் பண்படுத்துகிறது. ஜே. ஆர். என்பவர் எழுதுகிறார்: "ஆஸ்துமாவினால் என் உயிரே போய் எடையிலும் 40 பவுண்டு குறைந்து விட்டது. இழுப்பு. இருமல், மாரடைப்பு, தூக்கமே இல்லை. சாவைத்தான் எதிர்பார்த்தேன் மெண்டாகோ முதல் இரவிலேயே எனக்கிருந்த பிடிப்பை விடுவித்தது. கடந்த இரண்டு வருஷங்களாக ஆஸ்துமாவே இல்லை. மிஸஸ். ஏ. டபிள்யூ. எழுதுகிறார்: "கடந்த 25 வருஷமாக எனக்கு ஆஸ்துமா உண்டு. மெண்டாகோவை உபயோகித்ததிலிருந்து இரவில் நல்ல தூக்கம். பிற்பாடு ஆஸ்துமா உண்டாகவே இல்லை." மிஸஸ் ஜி. ஸ. வி. எழுதுகிறார்: "மெண்டாகோவைப் பற்றிக் கேள்விப்பட்ட தன்னாளை வாழ்த்துகிறேன். கடந்த 35 வருஷங்களாக இராத் தூக்கத்தையே அறியாத என்போன்ற ஏழைப் பிறவிக்கு ஆண்டவன் அளித்த அமிர்தம் மெண்டாகோவே. தூக்கமின்றி ஆஸ்துமாவினால் உருகிப் போகிறேன். இந்த கஷ்டங்களெல்லாம் இப்போது மறந்துவிட வேண்டுமென்று உணருகிறேன்."

கைமேல் காணும் பலன்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதுமே ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள் மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெறாது, திருப்தி யளிக்காவிடில் வெற்று டப்பியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது

Mendaco

மெண்டாகோ

● ஆஸ்துமா ● மார்ச்சளி நோய் ● ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

REGD. No. M. 4392

